# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 4, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஆகஸ்ட் 20, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு"*

குடிமக்களை அன்போடு அணைத்துக்கொண்டு செங்கோல் செலுத்துகின்றவருடைய அடியைப் பொருந்தி மாநிலம் நிலைபெறும்.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

### 1. அறிவிப்புகள்

#### (அ) முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது தொடர்பான நிகழ்ச்சிகள் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சிகள் குறித்து சில உறுப்பினர்கள் பேரவை விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். அந்தப் பொருள்கள் குறித்து ஏற்கெனவே அரசு நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. ஏற்கெனவே அரசுத் தரப்பிலும், மற்ற தரப்பிலும் கருத்துகள் கூறப்பட்டுள்ளன. மாறுபட்ட கருத்துகளின் அடிப்படையில்தான் விசாரணைக் குழு அரசினால் அமைக்கப்

பட்டுள்ளது. மேலும் விசாரணை நடத்துவதற்குரிய நிபந்தனைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. பேரவை விதிகள் 65 மற்றும் 66-ன்படி நீதிமன்றத்தின் ஆய்விலுள்ள எப்பொருள் பற்றியும் தீர்மானம் இருத்தலாகாது. மேலும் சட்டப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் ஆய்வில் இருக்கும் பொருள் குறித்து அவையில் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப்பெறலாகாது. அத்தகைய விவாதம் விசாரணைக் குழுவின் ஆய்வுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியதாக அமையும் என்பதால், பேரவை விதிகள் 65 மற்றும் 66-ன்கீழ் இத்தகைய தீர்மானங்களை அவையில் எழுப்புவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்பதை அறிவிக்கிறேன்.

*திரு. துரைமுருகன்: Hon. Speaker Sir, I am on a Point of Order. தலைவர் அவர்களே, இது நியாயம் அல்ல. பொதுவாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் தீர்ப்பை வழங்கியதற்குப் பிறகு அதுகுறித்து பிரச்சினை எழுப்புவது முறையற்றது. விதிகளுக்குப் புறம்பானது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்புக்கு நாங்கள் கட்டுப்படமாட்டோம் என்று சொல்லவில்லை. ஆனால் பேரவைத் தலைவர் அவர்கள் வழங்கிய தீர்ப்பிற்கு மாறுபட்ட கருத்தைச் சொல்லுவதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. பேரவைத் தலைவருடைய தீர்ப்புகூட எங்களுக்குச் சரியில்லை என்று சொல்லி எங்கள் கோரிக்கைகளை வைத்து வெளிநடப்பு செய்வதற்கோ அல்லது அது குறித்துப் பேசுவதற்கோ எங்களுக்கு உரிமை உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. இப்படி பல நேரங்களில் நாட்டில் மிகப் பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. அவை குறித்துப் பேசுவதற்கு எங்களுக்கு இந்த அவையிலே உரிமை இல்லாவிட்டால் நாங்கள் இங்கு இருந்து பிரயோஜனம் இல்லை. நீதி விசாரணை போடப்பட்டு இருக்கிறது. ஆனால் நீதி விசாரணைக்கு உள்ளே போகாமல் எங்கள் கருத்துகளைச் சொல்ல முடியும். கவர்னர் அவர்கள் உரை மீதான விவாதத்தின்போது sub-judice-ஆக வருமா வராதா என்றுகூட சில கருத்துகள் வந்தபோது, sub-judice-க்கு உள்ளே வராத அளவிற்கு அவையிலே கருத்துகளை எடுத்து வைப்பதற்கு எங்களுக்குத் தெரியும். இந்த மன்றத்திலே நாங்களும் நீண்ட நாட்களாக இருந்து இருக்கிறோம். எனவே எங்களுடைய தலைவர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விசாரணைக்கு உள்ளே போகாமல் நீங்கள் கருத்துகளைச் சொல்ல உங்களுக்கு உரிமை உண்டு.

2001 ஆகஸ்ட் 20] [பேரவைத் தலைவர்]

விசாரணைக்கு உட்பட்டது என்று தெரிந்தால் அதை நீக்குவதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை உண்டு.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருடைய அதிகாரத்தில் நான் தலையிட விரும்பவில்லை. உங்களுக்குச் சரி என்று பட்டால் அது குறித்து முடிவு எடுப்பதிலே பேரவைத் தலைவரோடு முரண்படுவதற்கு நான் விரும்பவில்லை. ஆனால் நாங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு அதில் எங்களைப் பேச அனுமதிக்க வைத்து, நாங்கள் பேசுவது சரியில்லை என்று சொன்னால் தங்களுடைய தீர்ப்பிற்கு அல்லது தங்கள் முடிவிற்கு நாங்கள் கட்டுப்படுகிறோம். ஆனால் எடுக்காமலேயே ஒட்டுமொத்தமாக இது குறித்து விசாரணைக் குழு இருக்கிறது, எனவே இதை நான் அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லுவது இந்த மன்றத்தின் மரபும் அல்ல, ஜனநாயக முறையும் அல்ல. அது தங்களைப் போன்றவர்களுக்கு அழகும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் வாசித்துப் பார்த்து, அது நீதி விசாரணைக்கு உட்பட்ட பொருள் குறித்து இருக்கின்ற காரணத்தினால்தான் நான் அனுமதி மறுத்திருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. பொதுவாக நானே கொடுத்து இருக்கிறேன். எங்கள் தலைவர் அவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து என்று நான் கொடுத்து இருக்கிறேன். நான் பேசுவதற்கே அனுமதி இல்லை என்று சொன்னால் அது எங்கள் உரிமையை மறுப்பதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இந்த அவையில் கொடுக்கப்படுவதும் வழக்கம், அது குறித்து அரசினுடைய கருத்தை பேரவைத் தலைவர் கேட்பதும் வழக்கம். சில ஒத்திவைப்புத் தீர்மானங்களை ஏற்க முடியாது என்று பேரவைத் தலைவர் தீர்ப்பு வழங்குவதும் வழக்கம். இது இந்த அவையிலே தொன்றுதொட்டு இருந்து வரக்கூடிய மரபு. அந்த மரபைத்தான் நானும் இப்போது கடைபிடிக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொடுத்து இருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் நாட்டுக்கோ அல்லது மற்ற எவருக்கோ குந்தகம் விளைவிக்கின்ற வகையில் இருந்தால் அதை நீங்கள் மறுக்கலாம். ஆனால் கொடுத்திருக்கிற தீர்மானம் நாட்டிலே நடந்த ஒன்று — police atrocity பற்றி எங்கள் தலைவர் கலைஞர் . . .

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, இதற்குள்ளே போக வேண்டாம். பேரவை விதிகளுக்கு உட்பட்டதைத்தான் நான் வாசிக்கிறேன். பேரவை விதிகளுக்கு உட்பட்டு, அரசு விசாரணைக் குழுவை அமைத்த ஒரு பொருள் குறித்து இந்த அவையில் எழுப்புவதற்கு அனுமதி மறுப்பது எப்போதும் வழக்கம். அந்த வழக்கத்தைத்தான் நான் கடைபிடிக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** விசாரணை கமிஷனுக்குக் குந்தகம் இல்லாமல் பேசுவதற்கு எங்களுக்கும் உரிமை உண்டு. நட்டநடு நிசியினிலே, ஆந்தையும் கோட்டானும் அலறுகிற நேரத்திலே அவரை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, இந்த வசனம் பேசுவது எனக்கும் தெரியும். இவையெல்லாம் நாம் ஆரம்ப காலத்தில் படித்த பால பாடங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்வது, நீங்கள் அதற்குள்ளே போக வேண்டாம். நீங்கள் உள்ளே போகாமல் ஏதாவது பேசுவதற்கு வாய்ப்பு இருந்தால், நீதி விசாரணைக்குள்ளே இல்லாத கருத்து, மாறுபட்டது, என்று தெரிந்தால் நான் அதை அனுமதிக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே எதிர்பார்க்கிறேன். நாங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை முறைப்படி நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். எங்களை அழையுங்கள். நாங்கள் பேசுகிறோம். அதிலே நாங்கள் பேசுவது நீதி விசாரணையைப் பாதிக்கும் என்று தெரிந்தால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் ஏற்க மறுத்து விட்டேன். அதை மறுத்ததற்கான காரணத்தையும் இப்போது சொல்லிவிட்டேன். நிதிநிலை அறிக்கையின்போதோ அல்லது காவல் துறை மானியக் கோரிக்கையின்போதோ நீங்கள் பேசுகிற பிரச்சினைகள் இந்த நீதி விசாரணைக்கு உட்படாத பிரச்சினைகளாக இருக்குமானால் அவற்றை ஏற்றுக்கொள்வதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**திரு. இரா. திருமாவளவன்:** செய்தியாளர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாக நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தொடர்பான எல்லாவற்றையும்தான் வாசித்திருக்கிறேன்.

2001 ஆகஸ்ட் 20]

**பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே உள்ள பிரச்சினை, நீதி வழங்கக்கூடிய ஒரு நீதிமன்றத்திலே ஒரு வழக்கு பதிவாகி, அந்த வழக்கு அடிப்படையிலே விசாரணை நடைபெற்றால் அது* sub-judice *என்ற முறையிலே இந்த அவையில் பேசக்கூடாது என்றவொரு கருத்து ஏற்கெனவே ஏற்கப்பட்டிருக்கிற ஒன்று. ஆனால் இப்போது உள்ள குழு* Fact-finding Commission. *உண்மையை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு குழுவாகத்தான் அது கருதப்படும். ஏனென்றால், அந்தக் குழு எடுக்கிற ஆலோசனை அரசுக்குத்தான் தெரிவிக்கப்படும். ஆகவே உண்மையை ஆராய்வதற்காக அல்லது தெரிந்துகொள்வதற்காக அரசு ஒரு குழுவை நியமித்திருக்குமானால் இங்கே பேசப்படுகிற கருத்துகளிலேகூட ஒருவேளை தவறான கருத்து இருந்தால்கூட அந்த* Fact-finding Commission *அதை விலக்கி விட முடியும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நாட்டிலே இருதரப்பிலேயும் பேசப்படுகிற கருத்துகளிலே எது உண்மை என்று அந்த விசாரணைக் குழு கருதுகிறதோ அதைத்தான் அரசுக்குத் தெரிவிப்பார்கள். ஆகவே இங்கே பேசுவதனாலே ஓர் இடையூறு ஏற்படும் என்று என்னால் நம்ப முடியவில்லை.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் உறுப்பினராக நீண்ட காலமாக அனுபவம் உள்ள மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு விதி 66-ஐ சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.* "No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any Commission or Court of Enquiry appointed to enquire into or investigate any matter, shall ordinarily be permitted to be moved" *என்று அவை விதிகளிலேயே உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த விதியின் அடிப்படையிலேதான் நான் இதற்கான அனுமதியை மறுத்திருக்கிறேன்.*

### (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ், கீழ்க்காணும்*

உறுப்பினர்களை, பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. பி.ஆர். சுந்தரம்
2. திரு. அ. பாப்பா சுந்தரம்
3. திரு. ப. இராஜரெத்தினம்
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்
5. திருமதி டி. யசோதா
6. திரு. லா. சந்தானம்

திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. பரிதி இளம்வழுதி (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன் மற்றும் பழனிசாமி அவர்களுக்கு, நீங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அரசின் ஆய்வில் இருக்கின்றன. அரசு பதில் தந்தவுடன் அவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (அ) முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது தொடர்பான நிகழ்ச்சிகள் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு-தொடர்ச்சி

**திரு. துரைமுருகன்:** I am on a Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நிறைய அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒரு நீதி விசாரணை போடப்பட்டுவிட்ட

காரணத்தாலே சபையிலே இதுபற்றிப் பேசக்கூடாது என்று சொல்வது எனக்கு விந்தையாக இருக்கிறது. அந்த நீதி விசாரணைக்குக் குந்தகம் இல்லாமல் பேசலாம் என்பதற்கு எத்தனையோ - மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்கூட போன முறை கவர்னர் உரை குறித்த விவாதத்திலே அதைத் தெரிவித்தார்கள். குந்தகம் ஏற்படுத்தாமல் பேசலாம். எனவே இதை அனுமதிக்காதது இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் செய்கின்ற ஒரு முரண்பாடான செய்கையாகும். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஆகையினால் நாங்கள் கொடுத்த தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் நான் பேரவைத் தலைவர் அவர்களை அன்போடு வேண்டுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று. என்னுடைய தொகுதியில் மிகப் பெரிய விபத்து ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அந்த விபத்து குறித்து தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, ஒவ்வொரு பிரச்சினையாகத் தாவிக்கொண்டிருக்கக்கூடாது. ஒரு பிரச்சினை முடிந்துவிட்டது. கடைசியாக முத்தாய்ப்பு வைத்ததைப்போல எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டு, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி, அது முடிந்துவிட்டது. இப்போது அடுத்த பிரச்சினைக்குப் போகலாம். நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் வருகிறபோது பல பிரச்சினைகளைப் பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. திரு. பரிதி இளம்வழுதி. (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தொடர்ந்து பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பை விமர்சித்துக்கொண்டே இருக்கிறார். இந்த அவையின் விதிமுறைகள்படி பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பு கூறிய பின்பு அதை விமர்சிப்பதுகூட விதிமுறைகளுக்குப் புறம்பான செயலாகும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய பேச்சைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள் அல்லது பேரவைத் தலைவருக்கு எதிர்ப்பாக உருவாக்கப் பார்க்கிறார்கள். நான் அதற்காக வருத்தப்படுகிறேன். நான்

[திரு. துரைமுருகன்] [2001 ஆகஸ்ட் 20

முதலிலேயே சொன்னேன். பேரவைத் தலைவருடைய தீர்ப்புக்கு முரண்பட்டு அல்லது அதற்குக் கீழ்ப்படியாமல் இருப்போம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், ஒரு கருத்தைச் சொல்வதற்கு எனக்கு உரிமை உண்டு. என்னுடைய கருத்து சரி அல்லது தவறு, நீக்குகிறேன் என்று சொல்வதற்கு சபாநாயகருக்கு உரிமை உண்டு. எனவே, நான் பேசுவதற்கு உரிமை தாருங்கள் என்றுதான் கேட்கிறேன்.

இரண்டாவது, என்னுடைய தொகுதியில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று, இரண்டு, மூன்று என்று பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தை எடுத்துக்கொள்வோம். அதற்குப் பிறகு மற்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசுங்கள்.

## 2. தகவல் கோரல்-தொடர்ச்சி

### உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்-தொடர்ச்சி

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் வெடி விபத்து ஏற்பட்டு 20 பேர்களுக்கு மேல் செத்திருக்கிறார்கள். அதைப்பற்றி பேச ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அதை எடுத்துக்கொள்ள வேண்டாமா? நான் கேட்கிறன், இன்று கேள்வி நேரம் கூடக் கிடையாது. நீங்கள் எழுந்து நின்றுவிட்டீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெடி விபத்து பற்றி நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் உள்ளது. அதை எடுத்துக்கொள்வது பற்றி நான் வெகுவிரைவிலே அறிவிக்கின்றேன்.

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (அ) முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது தொடர்பான நிகழ்ச்சிகள் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு-தொடர்ச்சி

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் சென்ற கூட்டத் தொடரிலே இதுபோன்ற விஷயங்களைப்பற்றிப் பேசலாம் என்று

2001 ஆகஸ்ட் 20] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

சொன்னதாகச் சொன்னார்கள். அது தவறான கருத்து. நான் சொன்னது, வெறும் புகார் மட்டுமே கொடுக்கப்பட்ட நிலையில், Remand Report மட்டுமே Magistrate முன்னால் இருக்கின்ற நேரத்தில் அதுபற்றிக்கூட சட்டசபையிலே விவாதிக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. குற்றவியல் வழக்குகள் என்று சொன்னால் framing of charges. Only after the framing of the charges, the trial commences there. Once the trial commences, you cannot discuss it in the Assembly. It becomes sub-judice. In the same way, when a Judical Commission is appointed, Rule 92— I think it — very clearly points out, when there is a Judical Commission, when the Judicial Commission has taken its work, you cannot discuss it in the Assembly. That is the position.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு நீதி விசாரணை Commission போட்ட பின்பு முதலமைச்சரே பத்திரிகைகளுக்குக் கருத்து சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. ஏற்கெனவே சொல்லி, முடிந்துவிட்ட பிரச்சினை. மீண்டும் மீண்டும் பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புக்கு மாறுபட்டு நீங்கள் பேசிக்கொண்டிருப்பது முறையல்ல.

**திரு. பரிதி இளம்வழுதி:** நீதி விசாரணை Commission போட்டு, அதுபற்றி வெளியிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது முறையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி வெளியிலே மாறுபட்ட கருத்துகள் எழுப்பப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் என்னுடைய தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கிறேன். அரசுத் தரப்பிலும் சரி, உங்கள் தரப்பிலும் சரி, பல மாறுபட்ட கருத்துகள் எழுப்பப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் குறிப்பிட்டுத்தான் சொல்லியிருக்கிறேன். இப்போது நிதிநிலை அறிக்கை மீதான விவாதம். திரு. பரிதி இளம்வழுதி, நீங்கள் பேசவில்லையா?

## 2. தகவல் கோரல்-தொடர்ச்சி

### உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்-தொடர்ச்சி

**திரு. இரா. திருமாவளவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்வாடி மனநோயாளிகள் சம்பந்தமாகவும், செய்தியாளர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாகவும் நான் ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புகள் கொடுத்திருக்கிறேன் ...

2001 ஆகஸ்ட் 20]

**பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே உள்ள பிரச்சினை, நீதி வழங்கக்கூடிய ஒரு நீதிமன்றத்திலே ஒரு வழக்கு பதிவாகி, அந்த வழக்கு அடிப்படையிலே விசாரணை நடைபெற்றால் அது* sub-judice *என்ற முறையிலே இந்த அவையில் பேசக்கூடாது என்றவொரு கருத்து ஏற்கெனவே ஏற்கப்பட்டிருக்கிற ஒன்று. ஆனால் இப்போது உள்ள குழு* Fact-finding Commission. *உண்மையை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு குழுவாகத்தான் அது கருதப்படும். ஏனென்றால், அந்தக் குழு எடுக்கிற ஆலோசனை அரசுக்குத்தான் தெரிவிக்கப்படும். ஆகவே உண்மையை ஆராய்வதற்காக அல்லது தெரிந்துகொள்வதற்காக அரசு ஒரு குழுவை நியமித்திருக்குமானால் இங்கே பேசப்படுகிற கருத்துகளிலேகூட ஒருவேளை தவறான கருத்து இருந்தால்கூட அந்த* Fact-finding Commission *அதை விலக்கி விட முடியும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நாட்டிலே இருதரப்பிலேயும் பேசப்படுகிற கருத்துகளிலே எது உண்மை என்று அந்த விசாரணைக் குழு கருதுகிறதோ அதைத்தான் அரசுக்குத் தெரிவிப்பார்கள். ஆகவே இங்கே பேசுவதனாலே ஓர் இடையூறு ஏற்படும் என்று என்னால் நம்ப முடியவில்லை.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் உறுப்பினராக நீண்ட காலமாக அனுபவம் உள்ள மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு விதி 66-ஐ சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.* "No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any Commission or Court of Enquiry appointed to enquire into or investigate any matter, shall ordinarily be permitted to be moved" *என்று அவை விதிகளிலேயே உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த விதியின் அடிப்படையிலேதான் நான் இதற்கான அனுமதியை மறுத்திருக்கிறேன்.*

### (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ், கீழ்க்காணும்*

உறுப்பினர்களை, பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. பி.ஆர். சுந்தரம்
2. திரு. அ. பாப்பா சுந்தரம்
3. திரு. ப. இராஜரெத்தினம்
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்
5. திருமதி டி. யசோதா
6. திரு. லா. சந்தானம்

திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. பரிதி இளம்வழுதி (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன் மற்றும் பழனிசாமி அவர்களுக்கு, நீங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அரசின் ஆய்வில் இருக்கின்றன. அரசு பதில் தந்தவுடன் அவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (அ) முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது தொடர்பான நிகழ்ச்சிகள் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு-தொடர்ச்சி

**திரு. துரைமுருகன்:** I am on a Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நிறைய அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒரு நீதி விசாரணை போடப்பட்டுவிட்ட

[பேரவைத் தலைவர்] [2001 ஆகஸ்ட் 20

உறுப்பினர்களை, பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. பி.ஆர். சுந்தரம்

2. திரு. அ. பாப்பா சுந்தரம்

3. திரு. ப. இராஜரெத்தினம்

4. திரு. சோ. பாலகிருஷ்ணன்

5. திருமதி டி. யசோதா

6. திரு. லா. சந்தானம்

திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. பரிதி இளம்வழுதி (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன் மற்றும் பழனிசாமி அவர்களுக்கு, நீங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அரசின் ஆய்வில் இருக்கின்றன. அரசு பதில் தந்தவுடன் அவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (அ) முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது தொடர்பான நிகழ்ச்சிகள் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு-தொடர்ச்சி

**திரு. துரைமுருகன்:** I am on a Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நிறைய அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒரு நீதி விசாரணை போடப்பட்டுவிட்ட

காரணத்தாலே சபையிலே இதுபற்றிப் பேசக்கூடாது என்று சொல்வது எனக்கு விந்தையாக இருக்கிறது. அந்த நீதி விசாரணைக்குக் குந்தகம் இல்லாமல் பேசலாம் என்பதற்கு எத்தனையோ - மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்கூட போன முறை கவர்னர் உரை குறித்த விவாதத்திலே அதைத் தெரிவித்தார்கள். குந்தகம் ஏற்படுத்தாமல் பேசலாம். எனவே இதை அனுமதிக்காதது இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் செய்கின்ற ஒரு முரண்பாடான செய்கையாகும். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஆகையினால் நாங்கள் கொடுத்த தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் நான் பேரவைத் தலைவர் அவர்களை அன்போடு வேண்டுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று. என்னுடைய தொகுதியில் மிகப் பெரிய விபத்து ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அந்த விபத்து குறித்து தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, ஒவ்வொரு பிரச்சினையாகத் தாவிக்கொண்டிருக்கக்கூடாது. ஒரு பிரச்சினை முடிந்துவிட்டது. கடைசியாக முத்தாய்ப்பு வைத்ததைப்போல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டு, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி, அது முடிந்துவிட்டது. இப்போது அடுத்த பிரச்சினைக்குப் போகலாம். நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் வருகிறபோது பல பிரச்சினைகளைப் பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. திரு. பரிதி இளம்வழுதி. (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தொடர்ந்து பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பை விமர்சித்துக்கொண்டே இருக்கிறார். இந்த அவையின் விதிமுறைகள்படி பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பு கூறிய பின்பு அதை விமர்சிப்பதுகூட விதிமுறைகளுக்குப் புறம்பான செயலாகும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய பேச்சைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள் அல்லது பேரவைத் தலைவருக்கு எதிர்ப்பாக உருவாக்கப் பார்க்கிறார்கள். நான் அதற்காக வருத்தப்படுகிறேன். நான்

முதலிலேயே சொன்னேன். பேரவைத் தலைவருடைய தீர்ப்புக்கு முரண்பட்டு அல்லது அதற்குக் கீழ்ப்படியாமல் இருப்போம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், ஒரு கருத்தைச் சொல்வதற்கு எனக்கு உரிமை உண்டு. என்னுடைய கருத்து சரி அல்லது தவறு, நீக்குகிறேன் என்று சொல்வதற்கு சபாநாயகருக்கு உரிமை உண்டு. எனவே, நான் பேசுவதற்கு உரிமை தாருங்கள் என்றுதான் கேட்கிறேன்.

இரண்டாவது, என்னுடைய தொகுதியில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று, இரண்டு, மூன்று என்று பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தை எடுத்துக்கொள்வோம். அதற்குப் பிறகு மற்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசுங்கள்.

## 2. தகவல் கோரல்-தொடர்ச்சி

### உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்-தொடர்ச்சி

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் வெடி விபத்து ஏற்பட்டு 20 பேர்களுக்கு மேல் செத்திருக்கிறார்கள். அதைப்பற்றி பேச ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அதை எடுத்துக்கொள்ள வேண்டாமா? நான் கேட்கிறன், இன்று கேள்வி நேரம் கூடக் கிடையாது. நீங்கள் எழுந்து நின்றுவிட்டீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெடி விபத்து பற்றி நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் உள்ளது. அதை எடுத்துக்கொள்வது பற்றி நான் வெகுவிரைவிலே அறிவிக்கின்றேன்.

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (அ) முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது தொடர்பான நிகழ்ச்சிகள் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு-தொடர்ச்சி

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் சென்ற கூட்டத் தொடரிலே இதுபோன்ற விஷயங்களைப்பற்றிப் பேசலாம் என்று

சொன்னதாகச் சொன்னார்கள். அது தவறான கருத்து. நான் சொன்னது, வெறும் புகார் மட்டுமே கொடுக்கப்பட்ட நிலையில், Remand Report மட்டுமே Magistrate முன்னால் இருக்கின்ற நேரத்தில் அதுபற்றிக்கூட சட்டசபையிலே விவாதிக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. குற்றவியல் வழக்குகள் என்று சொன்னால் framing of charges. Only after the framing of the charges, the trial commences there. Once the trial commences, you cannot discuss it in the Assembly. It becomes sub-judice. In the same way, when a Judical Commission is appointed, Rule 92— I think it — very clearly points out, when there is a Judical Commission, when the Judicial Commission has taken its work, you cannot discuss it in the Assembly. That is the position.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு நீதி விசாரணை Commission போட்ட பின்பு முதலமைச்சரே பத்திரிகைகளுக்குக் கருத்து சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. ஏற்கெனவே சொல்லி, முடிந்துவிட்ட பிரச்சினை. மீண்டும் மீண்டும் பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புக்கு மாறுபட்டு நீங்கள் பேசிக்கொண்டிருப்பது முறையல்ல.

**திரு. பரிதி இளம்வழுதி:** நீதி விசாரணை Commission போட்டு, அதுபற்றி வெளியிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது முறையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி வெளியிலே மாறுபட்ட கருத்துகள் எழுப்பப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் என்னுடைய தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கிறேன். அரசுத் தரப்பிலும் சரி, உங்கள் தரப்பிலும் சரி, பல மாறுபட்ட கருத்துகள் எழுப்பப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் குறிப்பிட்டுத்தான் சொல்லியிருக்கிறேன். இப்போது நிதிநிலை அறிக்கை மீதான விவாதம். திரு. பரிதி இளம்வழுதி, நீங்கள் பேசவில்லையா?

## 2. தகவல் கோரல்-தொடர்ச்சி

### உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்-தொடர்ச்சி

**திரு. இரா. திருமாவளவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்வாடி மனநோயாளிகள் சம்பந்தமாகவும், செய்தியாளர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாகவும் நான் ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புகள் கொடுத்திருக்கிறேன் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமாவளவன், ஏர்வாடி பிரச்சினையும் நீதி விசாரணையில் இருக்கிறது. ஆகவே, நீதி விசாரணையில் உள்ளதைப் பற்றிப் பேசக்கூடாது என்பதுதான் இப்போது வழங்கப்பட்ட தீர்ப்பு.

## 3. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்திய நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்ததிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு முன்பாக, இந்தச் சட்டமன்றத்தில் எங்களோடு சக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, குறைந்த காலம் பணியாற்றி, எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று, பாட்டாளிகளின் கூட்டாளியாக, தொழிலாளர் வர்க்கத்தின் தோழனாக, கொண்ட கொள்கையிலே உறுதி உள்ளவராக இருந்து, கடந்த 12 ஆம் தேதி எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நடைபெற்ற கண்டனப் பேரணியில் காலையிலே இருந்து உணவு உட்கொள்ளாமல், அவர்கள் கலந்துகொண்டபோது, இயல்பாக ஏற்பட்ட சோர்வின் காரணமாக அவர்கள் களைப்புற்ற நேரத்தில் உடனிருந்த தோழர்கள் நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என்று வற்புறுத்திச் சொன்னதையும்கூட, பிடிவாதமாக மறுத்து மீண்டும் ஊர்வலத்தை ஒழுங்குபடுத்தி நடத்தி வருகின்ற நேரத்தில் போலீசார் கண்மூடித்தனமாக கழகப் பேரணியில் வந்த தொண்டர்கள்மீதும், செய்தியாளர்கள்மீதும் நடத்திய தாக்குதலை நேரில் கண்ணுற்று அதிர்ச்சியடைந்து, அதன் காரணமாக மாரடைப்பால் இறந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமாவளவன், ஏர்வாடி பிரச்சினையும் நீதி விசாரணையில் இருக்கிறது. ஆகவே, நீதி விசாரணையில் உள்ளதைப் பற்றிப் பேசக்கூடாது என்பதுதான் இப்போது வழங்கப்பட்ட தீர்ப்பு.

## 3. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்திய நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்ததிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு முன்பாக, இந்தச் சட்டமன்றத்தில் எங்களோடு சக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, குறைந்த காலம் பணியாற்றி, எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று, பாட்டாளிகளின் கூட்டாளியாக, தொழிலாளர் வர்க்கத்தின் தோழனாக, கொண்ட கொள்கையிலே உறுதி உள்ளவராக இருந்து, கடந்த 12 ஆம் தேதி எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நடைபெற்ற கண்டனப் பேரணியில் காலையிலே இருந்து உணவு உட்கொள்ளாமல், அவர்கள் கலந்துகொண்டபோது, இயல்பாக ஏற்பட்ட சோர்வின் காரணமாக அவர்கள் களைப்புற்ற நேரத்தில் உடனிருந்த தோழர்கள் நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என்று வற்புறுத்திச் சொன்னதையும்கூட, பிடிவாதமாக மறுத்து மீண்டும் ஊர்வலத்தை ஒழுங்குபடுத்தி நடத்தி வருகின்ற நேரத்தில் போலீசார் கண்மூடித்தனமாக கழகப் பேரணியில் வந்த தொண்டர்கள்மீதும், செய்தியாளர்கள்மீதும் நடத்திய தாக்குதலை நேரில் கண்ணுற்று அதிர்ச்சியடைந்து, அதன் காரணமாக மாரடைப்பால் இறந்த . . .

முற்பகல் 10-15

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிந்தே தவறான, உண்மைக்குப் புறம்பான தகவலை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார். மாண்புமிகு மறைந்த உறுப்பினர் திரு. வை. பெருமாள் அவர்கள் போலீஸ் தடியடியால் அல்ல; பேரணியில் வந்தவர்கள் போலீசாரைத் தாக்குவதற்கு அரை மணி நேரம் முன்பாகவே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீங்களே சொன்னீர்கள், விசாரணைக் குழுவில் இருக்கும்போது எப்படி அதைப்பற்றிக் கருத்து கூறலாம் என்று. நான் சொல்ல வந்தது, இந்த . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்.

**திரு. பரிதி இளம்வழுதி:** இருங்கள், நான் சொல்ல வருவதைக் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்ன கருத்துக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** நீங்கள் எப்படிச் சுற்றி வந்தாலும் அந்தப் பிரச்சினைக்குள்ளேதான் வர முடியும். அதிலே பிரச்சினை இல்லாமல் பேச வேண்டும். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் ஊர்வலத்திலே தாக்குதல் நடைபெற்றது. இங்கேதான் நடைபெற்றது என்றல்ல. ஊர்வலத்தில் துவக்கத்திலும் நடைபெற்றது, இடையிலும் நடைபெற்றது, முடிவிலும் நடைபெற்றது. நான் சொல்ல வந்தது . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊர்வலத்தில் தாக்குதல் நடைபெற்றது என்று மாண்புமிகு உறுப்பினர் திரும்பத் திரும்பக் கூறுகிறார். போலீசார் பேரணியில் வந்தவர்களைத் தாக்கினார்களா, பேரணியில் வந்தவர்கள் போலீசாரைத் தாக்கினார்களா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப்பற்றிய உண்மையை விசாரணைக் குழுதான் கண்டறிய வேண்டும். இங்கே நான் குறிப்பிட விரும்புவதெல்லாம், போலீசுக்கும், ஊர்வலத்தில் வந்தவர்களுக்குமிடையே தகராறு ஏற்படுவதற்கு

முன்பாகவே திரு. வை. பெருமாள் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்பதுதான் உண்மை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. வை. பெருமாள் அவர்கள் எப்படி இறந்தார் என்பதும், போலீசார் யார் மீது தாக்குதல் நடத்தினார்கள், தொண்டர்கள் மீதா, தொண்டர்கள் போலீசார் மீதா அல்லது போலீசார் செய்தியாளர்கள் மீதா என்பதும் அவரவர் மனசாட்சிக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனசாட்சி அல்ல, விசாரணைக் குழு போடப்பட்டிருக்கிறது. விசாரணைக் குழுவினிலே அது தெரியும்.

**திரு. பரிதி இளம்வழுதி:** நான் சொல்ல வந்தது, அப்படிப்பட்டவர் மாரடைப்பால் இறந்துவிட்டார். இந்த மன்றத்தில் sitting M.L.A. அவர். அவருக்கு அனுதாபம் தெரிவித்து, அவருடைய அருமை, பெருமைகளை எடுத்துச் சொல்கிற வாய்ப்பு கிடைக்காமல் போனதால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எங்களது ஆழ்ந்த இரங்கலை அவரது மறைவுக்கும், அன்னாரை இழந்து வாடுகிற அவரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றுதான் சொல்ல வந்தேனே தவிர, அதற்குள் இப்படி அவசரப்படுவது சரியாக இருக்காது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மறைந்த இந்த மாமன்ற உறுப்பினருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான் முன்னெப்போதும் இல்லாத ஒரு புதிய முன்மாதிரியை ஏற்படுத்தி, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதையே ஒரு நாள் ஒத்திவைத்து, இந்த அவையையே ஒத்திவைத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நன்றியோடு உணர்ந்து பாராட்டுகிற பண்பு மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதிக்கு இல்லாமல் போனதைப் பார்க்கும்போது வருத்தமாக உள்ளது.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நன்றி உணர்வு இருக்கிறது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு நாள் நிதிநிலை அறிக்கை வழங்குவதையே ஒத்திவைத்து, இரங்கல் தீர்மானம் இங்கே கொண்டுவரலாம் என்று பெருந்தன்மையோடு அரசு கருதியிருந்த நேரத்தில், அந்த இரங்கல் தீர்மானத்தில் இந்தக் கட்சியினுடைய தலைவர்களாகிய எங்களைப் போன்றவர்கள்

கலந்துகொண்டு, நான்கு வார்த்தைகள் பேசியிருந்தால் அது எந்தவகையில் இழுக்காக மாறிவிடும்? இன்னும் சொல்லப்போனால், இரங்கல் தீர்மானத்தில் பெரும்பாலும் controversy எதுவும் இல்லாமல் பேசுகிற மரபை நம்முடைய மன்றத்திலே தொடர்ந்து நாம் காப்பாற்றி வந்திருக்கிறோம். அவரவர்களுக்கு எது பாராட்டத்தக்கதாகத் தோன்றுகிறதோ அதைத்தான் எடுத்துச் சொல்வார்கள். ஆனால் ஒருநாள் நிகழ்ச்சியையே மாற்றி, நிதிநிலை அறிக்கை அளிக்கும் நாளை மாற்றி வைத்துக்கொண்டு, அவையிலே உள்ள அத்தனை கட்சித் தலைவர்களும் மரியாதை செலுத்துவதற்கான வாய்ப்பு தவற விடப்பட்டுவிட்டது என்ற காரணத்தாலேதான் இப்போது பரிதி அதைக் குறிப்பிட்டார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாடாளுமன்றத்தில் கடைபிடிக்கப்படும் மரபைத்தான் இங்கேயும் கடைபிடித்திருக்கிறோம். நாடாளுமன்றத்தில் பதவியிலிருக்கிற ஓர் உறுப்பினர் திடீரென்று மறைந்துவிட்டால் அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் நாடாளுமன்ற மக்களவையாக இருந்தால் அங்கே சபாநாயகரும், மாநிலங்களவையாக இருந்தால் மாநிலங்களவைத் தலைவரும் மறைந்த உறுப்பினருக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானத்தை வாசித்துவிட்டு அதோடு அவையை ஒத்திவைப்பதுதான் வழக்கம். அங்கே அந்த இரங்கல் தீர்மானத்தின்மீது உறுப்பினர்களைப் பேச அனுமதிக்கிற மரபு இல்லை. பழக்கம் இல்லை. அதே மரபைத்தான் இங்கே கடைபிடித்திருக்கிறோம்.

அதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேண்டுமானால் இரங்கல் தீர்மானத்தின்மீது பேசுகின்றபோது கண்ணியத்தைக் காத்து வேறு விஷயங்களுக்குள் புகாமல் பேசலாம். ஆனால் மற்றவர்களைப் பற்றி, குறிப்பாக அவர் கட்சியிலுள்ள மற்ற உறுப்பினர்களைப் பற்றி அவரே அத்தகைய உத்தரவாதம் தர முடியாது என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-20*

**டாக்டர் க. பொன்முடி:** Point of Order.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொன்னதை மறுக்க வேண்டும் என்பதற்காக நான் இப்போது பேசவில்லை. சட்டமன்றத்தின் மரபு என்று இங்கே ஒரு மரபில்லாதபோதுதான் நாடாளுமன்ற மரபைப் பின்பற்றுவதாகச் சொல்ல

வேண்டிய அவசியம் ஏற்படும்போது நாடாளுமன்ற மரபை நாம் ஏற்றுக்கொள்கிறோம், அந்த முறையைப் பின்பற்றுகிறோம் என்று ஒரு முடிவெடுப்பது வழக்கம். சட்டமன்றத்திலே ஒரு மரபு நீண்டகாலமாகத் தொடர்ந்து வந்திருக்கிறது. அந்த மரபை இப்போது கைவிட்டுவிட்டு, நாடாளுமன்ற மரபைத்தான் பின்பற்றி இருக்கிறோம் என்று சொல்வது, இப்போது மாற்றிக்கொள்வதற்கு ஒரு காரணமாக அதைச் சொல்வதாக அமைகிறது. நாடாளுமன்ற மரபு என்று சொன்னால் அங்கு இந்த மேசையே இடையே இருக்காது. அங்கே Well என்று அழைப்பர். ஏறத்தாழ கிணறு என்று தமிழில் சொல்லலாம். அப்படிச் சொல்லத் தேவையில்லை. அப்படி ஒரு பொது இடம் போல அவையின் மையத்திலே ஓர் இடம். மாற்றுக் கட்சியினர் மாறுபாடு ஏற்படுகிறபோதெல்லாம் முன்னாலே வந்துவிடுவார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நாடாளுமன்ற முறையை முழுவதும் நாம் பின்பற்றுவதாகவும் இல்லை, பின்பற்றவும் இயலாது. ஆகவே, இப்போது நீங்கள் மேற்கொண்டதற்கு நாடாளுமன்ற மரபு ஒரு காரணமாக அமையுமானால் அதிலே எனக்கு மாறுபாடு கிடையாது.

*(திரு. பரிதி இளம்வழுதி, திரு. இ. புகழேந்தி மற்றும் டாக்டர் க. பொன்முடி ஆகியோர் எழுந்து நின்றுகொண்டேயிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாடாளுமன்ற மரபைக் குறிப்பிட்டார்கள். நாடாளுமன்ற மரபு மட்டுமல்ல, நம்முடைய சட்டமன்றத்திலும் அதற்கு மரபு இருக்கிறது என்பதற்கு நான் ஏற்கெனவே உதாரணம் சொல்லியிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே இருந்த நேரத்தில் நல்லமுத்து என்கிற ஒரு சட்டமன்ற உறுப்பினர், அப்போதைய சட்டமன்ற உறுப்பினர், மறைந்த நேரத்தில் 10 மணித் துளிகள்தான் அவை ஒத்திவைக்கப்பட்டது. பேரவைத் தலைவர்தான் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் என்பதையும் சொல்லியிருக்கிறேன். பேராசிரியர் அவர்களுக்கு விளக்குவதற்காக நான் இன்னொரு உதாரணத்தைக்கூட சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் டாக்டர் நாவலர் அவர்கள் பேராசிரியர் அவர்களோடு பல்கலைக்கழகத்திலேயிருந்து உருவாகி வெளியே வந்த திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர், அவருடைய மறைவிற்கு இரங்கல் தெரிவிப்பதற்கு இதே சட்டமன்றத்தில் பேரவைத் தலைவர்தான் தீர்மானத்தைக் கொண்டு வந்து எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சுந்தரம் போன்றவர்களைக்கூட பேச அனுமதிக்காமல் அவையை ஒத்திவைத்தார், அந்த மரபும் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** Point of Order.

**திரு. இ. புகழேந்தி:** நாவலர் அவர்கள் அப்போது sitting Member இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாவலர் அவர்கள் sitting Member இல்லை என்பது வேறு. நாவலர் அவர்கள் மூத்த தலைவர். ஒரு மூத்த தலைவருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைப்பதுதான் வழக்கம். திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர். இருந்த சட்டமன்ற உறுப்பினர் மறைந்த நேரத்திலும் அந்த மரபு பின்பற்றப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவரேதான் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார். அதைத்தான் நானும் சுட்டிக்காட்டினேன். நல்லமுத்து என்கின்ற, சட்டமன்றத்தில் இருந்த உறுப்பினர் மறைந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் 10 மணித் துளிகள்தான் அந்த நேரத்திலே அவையை ஒத்திவைக்கச் செய்து அப்போது நிதிநிலை அறிக்கையை வாசித்திருக்கிறார்கள். இருந்த மரபைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரங்கல் உரையிலே முன்வரிசையிலே இருக்கிற தலைவர்கள்தான் அனுதாபம் செலுத்துவார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள் அந்தக் கட்சியிலுள்ள உறுப்பினர்கள் எல்லாம் பேராசிரியரைப்போல பேசுவார்களா என்று கேட்கிறார்கள். ஆக, எங்களைப் பார்த்தால் அவருக்கு ஏதோ பயம் இருக்கிறது போலத் தெரிகிறது. அதுமட்டுமல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி அவர்களே, இதைவிடப் பெரிய பெரிய ஆட்களை எல்லாம் சந்தித்து அவர்கள் பயமில்லாமல்தான் இங்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, பயம் என்பது அல்ல. நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிதி இளம்வழுதியைப் பார்த்து நான் பயப்படுகிறேன் என்று அவர் சொல்கிறார் என்றால் இந்த நூற்றாண்டின் அல்லது இந்த ஆயிரமாவது ஆண்டின் மிகப் பெரிய joke-ஐ அவர் கூறியிருக்கிறார் என்றே நாம் வைத்துக்கொள்வோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆரோக்கியமான அரசியலுக்கு நாம் வழி வகுக்க வேண்டும். ஒரு நல்ல முன்மாதிரியை நாம் ஏற்படுத்த வேண்டும். பதவியில் இருக்கின்ற ஒரு மாமன்ற உறுப்பினர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும்,

அந்தப் பாகுபாடு இன்றி அவர் நினைவுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடுதான் இந்த முடிவை எடுத்தோம். பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதை ஒத்திவைத்து அவையையே ஒரு நாள் ஒத்திவைத்தோம். இதையே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒரு விவாதப் பொருளாக ஆக்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இதையும் ஒரு விவாதப் பொருளாக ஆக்குகிறார்கள் என்று சொன்னால், நம்முடைய பெருந்தன்மையைப் புரிந்துகொள்ளும் தன்மை அவர்களுக்கு இல்லை என்பதுதான் இதிலிருந்து தெளிவாகிறது.

*முற்பகல் 10-25*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. நீங்கள் சட்டமன்றத்தினுடைய மரபுகளைப் பின்பற்றியதாகச் சொல்கிறீர்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது இதுவரை இங்கே முன்மாதிரியில்லாமல் இந்தச் சபையை ஒத்திவைத்தோம் என்று சொல்கிறார்கள். இதிலே எது சரி? மரபா அல்லது முன்மாதிரியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவரைக்கும் எதிர்க்கட்சியைச் சார்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் மறைந்ததையொட்டி வரவு-செலவுத் திட்டத்தையே ஒத்திவைத்தது இந்த அவைக்குப் புதிய மரபு. ஒரு எதிர்க்கட்சி உறுப்பினரைக்கூட மதிக்கக்கூடிய அளவுக்கு ஆட்சி இருக்கிறது என்பதற்கு அவர்கள் அதை எடுத்துக்காட்டிச் சொல்லியிருக்கிறார்கள். மரபுக்கு விரோதமாக பேரவைத் தலைவர் கொண்டு வந்துவிட்டார் என்பதற்குத்தான் நான் விளக்கம் சொல்கிறேன். ஆக இரண்டுமே உண்மை. நீங்கள் அமருங்கள். பரிதி பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தாலும் பரவாயில்லை என்று சபையை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, இவர்கள் பேசுகின்ற இவ்வளவு நேரமும் உங்களுடைய நேரத்திலேதான் வரவு வைக்கப்படும். அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இது எல்லா சபாநாயகர்களும் சொல்வதுதான். எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தாலும் பெருந்தன்மையோடு அவையை ஒத்திவைத்தோம் என்று சொல்கிறீர்கள். அதே பெருந்தன்மை, அவருடைய வாழ்க்கையிலே, தொழிற்சங்கத்திலே ஆற்றிய பணி குறித்து எல்லா தலைவர்களும் நான்கு வார்த்தைகள் பேச அனுமதித்திருந்தால் இன்னும் பெருந்தன்மையாக இருந்திருக்குமே என்பதுதான் எங்களுடைய கருத்து.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஆக, பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் விவாதப் பொருளாக்க வேண்டும் என்பதற்காகக் குறிப்பிடவில்லை. அன்று, அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. எனவே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுதான் சொல்ல வந்தேன். பெருந்தன்மையோடு ஒரு நாள் ஒத்திவைத்தோம் என்றால், இன்னும் அரைமணி நேரம் அன்றைக்கு ஒதுக்கி எல்லோரையும் பேசவிட்டிருக்கலாம். அந்தப் பெருந்தன்மை இதிலே இல்லாமல் போனதே.

அதுமட்டுமல்லாமல், அடுத்து ஒருநாள் இடைவெளிவிட்டு அடுத்த நாள் பட்ஜெட் தாக்கல் செய்தது ஏன் என்பதற்கு மட்டும் பதில் சொல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து நிதிநிலை அறிக்கைக்கு வருகிறேன்.....

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. பரிதி இளம்வழுதி:** I am not yielding. நான் பேசுவதிலே Point of Order இருந்தால் I am yielding. Otherwise, I am not yielding. இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ.135 கோடிக்கு புதிய வரிகள் போடப்பட்டிருக்கின்றன. வரிகள் போடாமல் எந்த அரசாங்கத்தையும் நடத்த முடியாது. வரிகள் போடுகின்ற காரணத்தினாலே அது அரசாங்கமும் ஆகிவிடாது. அரசு என்பது மக்களுக்காகத்தானேயொழிய அரசுக்காக மக்கள் அல்ல. வாங்கும் சக்தி உள்ளவர்கள்மீது வரிகள் போடலாம். ஆனால், தாங்கும் சக்தியற்றவர்கள்மீது வரிகள் சுமத்தக்கூடாது. இருப்பவர்களிடமிருந்து வரி வசூலித்து இல்லாதவர்களை பயன்பெறச் செய்ய வேண்டும். Tap the rich and pat the poor என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுதான் அவர் வகுத்துத் தந்த இலக்கணமாகும். எனவே, அண்ணாவின் பெயரில் கட்சியையும், ஆட்சியையும் நடத்துவதாகச் சொல்கின்ற நீங்கள் வணிகப் பெருமக்கள் எல்லாம் அதிர்ச்சியடையத்தக்க வகையில் 135 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் போட்டுள்ளது மட்டுமல்லாமல் அரசு ஊழியர்களுக்கும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏமாற்றம் அளிக்கக்கூடிய வகையில் இந்த நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறீர்கள். மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற மின்சாதனப் பொருட்களுக்கு 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். வணிகப் பெருமக்களின் வேண்டுகோளை ஏற்று அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். குறைப்பதற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மக்காச்சோள தயாரிப்புகள், கொப்பரை, செயற்கை இழைநூல், செயற்கை இழைகள், அனைத்து வகை உலோகச் சரிகை இழை, கருஞ்சீரகம், பருத்தி உள்ளிட்ட பொருள்களுக்கு வரி 4 சதவீதமாக உயர்த்தப்பட்டதைக் கைவிட வேண்டும்.

அதேபோல, எவர்சில்வர் பொருட்களுக்கும், கையினால் தயார் செய்யப்படும் சோப்புகளுக்கும், 12 சதவீதமாக வரியை உயர்த்தியிருப்பது பொதுமக்களையும், சிறுதொழில்களையும் கடுமையாகப் பாதிக்கும். எனவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, வியாபார பெருமக்களை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பது நுழைவு வரி. ஏற்கெனவே, பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தால் சீரழிந்து வரும் வணிகத் துறையினர் இந்த நுழைவு வரி விதிப்பால் மிகுந்த பாதிப்பிற்குள்ளாவார்கள் என்பதோடு இந்த நுழைவு வரி இலஞ்ச ஊழலை ஊக்குவிப்பதோடு பொருட்களின் விலையும் உயர்ந்து பொதுமக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாவார்கள். எனவே, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, இந்த பட்ஜெட்டிலே பாராட்டக்கூடிய அம்சங்கள் இருக்கின்றன என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். உதாரணமாக, இந்தியத் திருநாட்டிலே எந்த மாநில முதலமைச்சரும் செய்ய முன்வராத நேரத்திலே, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதி வழங்குவதுபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதி என்று உருவாக்கி அதைச் சென்ற ஆண்டு ரூ.77 இலட்சமாக உயர்த்தி எங்கள் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையே 5 இலட்சம் உயர்த்தி 82 இலட்சமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

ஒருவகையிலே இந்த பட்ஜெட்டை நான் முழுமையாக தி.மு.க. சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இதிலே 100-க்கு 100 என்று சொல்வதைவிட 100-க்கு 99 சதவீதம் புதிய திட்டங்கள் என்று நீங்கள் அறிவித்துள்ளவை அனைத்துமே திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தில் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருப்பனவற்றைத்தான் புதிய திட்டங்கள் என்று அறிவித்துள்ளீர்கள்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். அந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இதே அவையிலே படித்தபோது......

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** "தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலே தரிசு நில மேம்பாட்டுக் குழுமம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்த ஆண்டில் 5.56 கோடி ரூபாய் செலவில் 10 மாவட்டங்களில் 25,000 ஏக்கர் நிலங்களில் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு முதன்முதலாக முந்திரி, வேம்பு, பழச் செடிகள் போன்றவை ஆங்காங்கே பயிரிடப்பட்டுள்ளன". . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை ஏதோ அவருடைய தானைத் தலைவர்தான் புதிதாகத் தொடங்கி வைத்ததுபோல மாண்புமிகு உறுப்பினர் இந்த அவைக்குத் தவறான ஒரு தகவலைத் தர முயன்று கொண்டிருக்கிறார். தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்பது ஆண்டாண்டுக் காலமாக நடைமுறையில் இருந்து வருகின்ற ஒரு திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எத்தனையோ ஆட்சிகள் வந்து போன பிறகும், தமிழ்நாட்டில் 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்கள் எந்தப் பயனும் இல்லாமல் அப்படியே கிடக்கின்றன. ஆக, 5 ஆண்டு காலம் அவருடைய தானைத் தலைவர் ஆட்சி செய்தபின்பும், எதற்கும் பயன்படாத 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலம் இன்னும் இந்த மாநிலத்தில் இருப்பதால்தான் அந்த 20 இலட்சம் எக்டேர் நிலங்களை மேம்பாடு அடையச் செய்ய ஒரு திட்டத்தை வகுத்து, வரும் 5 ஆண்டு காலத்தில் 20 இலட்சம் எக்டேர் நிலத்தையும் நாம் பண்ணைத் தோட்டங்களாக மாற்றுகின்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் சொன்னதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். என்னுடைய வாதத்திற்கு வலு சேர்க்கின்ற வகையில்தான்

முதலமைச்சர் பதில் அளித்திருக்கிறார். தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஏதோ இவர்கள் புதிதாக கண்டுபிடித்ததுபோல அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னேனே அதற்கு அவரே பதில் சொல்லிவிட்டார், இது ஆண்டாண்டு காலமாக இருக்கின்ற திட்டம் என்று. ஆண்டாண்டு காலமாக இருக்கின்ற இந்தத் திட்டத்தை செம்மைப்படுத்தி எங்களுடைய ஆட்சிக் காலத்தில்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை நாங்கள் புதிதாகக் கண்டுபிடித்தோம் என்று நிதிநிலை அறிக்கையில் எங்கேயும் சொல்லவில்லை. நிதி அமைச்சர் இந்த பட்ஜெட்டை வாசித்தபோது அப்படி எங்கேயும் குறிப்பிடவில்லை. அவருடைய தானைத் தலைவர் புதிதாக இந்தத் திட்டத்தை கொண்டு வந்ததைப்போல மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி பேசினார். அதற்காகத்தான் நான் பதில் அளித்தேன். பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது. ஆண்டாண்டு காலமாக செயல்பாட்டில் இருக்கிறது. ஆனால், அது சரிவர செயல்படுத்தப்படாத காரணத்தினால் இன்னும் 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலம் இந்த மாநிலத்தில் இருப்பதால்தான் இதுவரையில் யாரும் செய்திராத ஒரு பிரம்மாண்டமான திட்டமாக இதை எடுத்துக்கொண்டு 20 இலட்சம் எக்டேரையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் திட்டத்தை வகுத்துள்ளோம்.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஆக, இந்த பட்ஜெட்டைப் புரட்டிப் படித்துப் பார்த்தால் தெரியும். முதலமைச்சர் சொல்கிறமாதிரி இது 'Visionary Budget', தொலைநோக்கு சிந்தனையுடன் தயாரிக்கப்பட்ட பட்ஜெட். காவிரிக்கு மூலம் குடகு என்று சொல்வதைப்போல, ஒவ்வொரு திட்டமும் முதலமைச்சருடைய அறிவுரையின்பேரில், முதலமைச்சருடைய சிந்தனையில் உதித்தது என்றுதான் இந்த பட்ஜெட்டில் வருகிறது. அதனால்தான் அப்படிச் சொன்னேனே தவிர...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் இருக்கின்ற 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலத்தையும் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டுமென்ற திட்டம் இதுவரை வேறு யாருடைய சிந்தனையிலும் உதிக்கவில்லை என்பதை நான் உறுதிபடக் கூறுகிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். 25,000 ஏக்கர் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, முதன்முறையாக, முந்திரி, வேம்பு, பழச்செடிகள் போன்றவை அங்கே பயிரிடப்பட்டுள்ளன என்று ஏற்கெனவே எங்கள் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போது செய்யவில்லை, செய்யவில்லை என்றால் என்ன அர்த்தம்? 25,000 ஏக்கர் தரிசு நிலத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, பேச்சுக்கு வாருங்கள். முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். உங்களுடைய கருத்தைச் சொல்லி முடியுங்கள். வெறும் புலம்பலாகவே இருந்தால் எப்படி? சரிப்பட்டு வராது.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் பேசுவது புலம்பல் என்று உங்களுக்குத் தெரிகிறது. உங்களைப் பொறுத்தவரையில் எல்லாமே தெரியும். ** (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி இளம்வழுதி, கண்ணியத்திற்கு மாறாகவும், மரபுக்கு விரோதமாகவும் பேசிய பேச்சுகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. பரிதி இளம்வழுதி பேசுவதற்குரிய தகுதியை இழந்துவிட்டார் என்று தெரிகிறது. பரிதி, உட்காருங்கள். அடுத்தவரைப் பேச அழைக்கிறேன். அடுத்து திரு. பி.ஆர். சுந்தரம் (கூச்சல்-குழப்பம்) பரிதி, உங்களுக்குத் தரப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. உங்களுக்குத் தரப்பட்ட நேரமும் முடிந்துவிட்டது, உங்களுடைய தரமும் தெரிந்துவிட்டது. உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) திரு. பி.ஆர். சுந்தரம்.

முற்பகல் 10-35

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது முதன்முதலாக என்னைப் பேச அனுமதித்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த இராசிபுரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்— (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள். (கூச்சல்) உட்காருங்கள். மாண்புமிகு ஜெயக்குமார்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. பரிதி இளம்வழுதி:** **

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் தரக்குறைவான, கண்ணியமற்ற, நாகரீகமற்ற வார்த்தைகளை, காட்டுமிராண்டித்தனமாக இங்கே பேசியிருக்கின்றார். எனவே, அவர்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிய தரக்குறைவான பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. அவருக்கு வழங்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. ஆகவே, திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். *(கூச்சல்)* ஆளும் கட்சித் தரப்பில் அனைவரும் உட்காருங்கள். அவர் தரக்குறைவாகப் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றி அவர் பேச, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி அவர்கள் இன்னும் பக்குவப்படுத்தப்படாத தரிசு நிலமாகவே இருக்கிறார் என்பது தெரிகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர் பக்குவப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம். *(கூச்சல்)*

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(கூச்சல்)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது முதன்முதலாக என்னைப் பேச அனுமதித்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த இராசிபுரம் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. பரிதி இளம்வழுதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....(கூச்சல்)*

**திருமதி டி. யசோதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். திரு. பி.ஆர். சுந்தரம், பேசுங்கள்.*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *சதிகளை சகித்துக்கொண்டு.....(கூச்சல்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமர வேண்டுகிறேன். திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் பேசுகிறார். (கூச்சல்) ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள்.*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *சதிகளை சகித்துக்கொண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாகியுள்ளார்கள். 1972 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கிய தர்ம யுத்தத்தை தர்மத் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு வெற்றிகரமாக நடத்தி பீடுநடை போட்டுவருகிறார்கள்.*

**திருமதி டி. யசோதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி சொல்லுங்கள்.*

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் உங்களுடைய பாதுகாப்பின்கீழ் பெண் உறுப்பினர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுடைய மனம் புண்படும்படியான வார்த்தைகளினுடைய அந்தத் தடிமனைக் குறைப்பதற்கு வழிவகைகளைக் காணுவதற்கு நீங்கள் நிச்சயமாக உதவியாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் சொல்லப்படுகின்ற கருத்துகள் எல்லோரையும் சாரும் பொதுவான கருத்துகள். பேசுபவர்கள் மட்டுமல்ல, கேட்பவர்களும்கூட அதனால் பாதிக்கப்படுகிறார்கள். அவைக்கு ஒரு தரம் இருக்கிறது. அதனுடைய கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து எல்லோரையும் பாதித்திருக்கிறது. குறிப்பாக, எங்களைப் போன்றவர்கள் இந்த அவையில்

உட்காருவதா? இதுவரையில் நீண்ட நாட்கள் நான் இந்த அவையிலே இருந்திருக்கிறேன். இப்பேர்பட்ட ஒரு கருத்து சொல்லப்பட்டதாக என்னுடைய ஞாபகத்தில் இல்லை. எனவே, நீங்கள் வெறுமனே அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டால் மட்டும் போதாது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, அதற்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

*முற்பகல் 10-40*

## 4. அரசினர் தீர்மானம்

### உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியை சட்டப் பேரவையிலிருந்து இரு தினங்களுக்கு நீக்கி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமருங்கள். இந்த அவைக்கு என்று ஒரு கண்ணியம் இருக்கிறது, ஒரு மரபு இருக்கிறது, நீண்ட பாரம்பரியமும் இருக்கிறது. சந்து முனையிலே பேசக்கூடிய வார்த்தைகளையெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே பேசக்கூடாது என்கிற முறை இருக்கிறது. இந்த முறைகளையெல்லாம் மீறியும், இத்தனைக்கும் பெருந்தன்மையோடு அவருடைய பேச்சுக்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிற அந்தச் சூழ்நிலையிலும்கூட, கண்ணியத்தை மறந்து, தரக்குறைவான வார்த்தைகளைப் பேசிய பரிதி இளம்வழுதி அவர்களை இரண்டு நாட்களுக்குச் சட்டமன்றத்திலிருந்து நான் விலக்கி வைக்கிறேன். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அதற்கான தீர்மானத்தை முன்மொழிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அவையினுடைய கண்ணியத்திற்கு மாறாக, சட்டப் பேரவையில் இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த உயர் பண்புகளுக்கு மாறாக, அமங்கலமாகப் பேசிய சட்டப் பேரவை உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களைச் சட்டப் பேரவையிலிருந்து இரு தினங்களுக்கு நீக்கி வைக்க வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

2001 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை'.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

பரிதி இளம்வழுதி இரண்டு நாட்களுக்குச் சட்டமன்றத்திலிருந்து நீக்கப்படுகிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவையில் பேசப்பட்ட பேச்சையும், கருத்தையும் உடனடியாக மறுத்து அதை நீக்கியதாக அறிவித்துவிட்டார்கள். அப்போதே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. நான், பரிதி இளம்வழுதி இரண்டு நாட்களும் அவைக்கு வர வேண்டும் என்பதற்காக இப்போது பேசவில்லை. நீங்களே ஒரு தீர்ப்பு வழங்கி, அது உங்களுடைய பேச்சாக தவறாகவோ, சரியாகவோ, சொல்லப்பட்டது உண்மையல்ல என்ற அடிப்படையில் நீங்கள் நீக்கியபோதே, சட்டசபையினுடைய நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்குவதாகச் சபாநாயகர் சொன்ன காரணத்தினால் அது அப்போதே முடிந்துவிட்டது. அது ஒரு குற்றம் என்று கருதினால்கூட அந்தக் குற்றம் நீக்கப்பட்டுவிட்டது. அதற்காக அவர் வருத்தம் தெரிவிக்கிறாரா, இல்லையா என்பது வேறு. நான் வருத்தம் தெரிவிக்கக்கூடத் தயார். ஏனென்றால் எதையும், எங்கேயும் சொல்லலாம் என்ற கொள்கையை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். சபாநாயகர் அவர்களே சொல்கிறபோது வெளியிலே எங்கேயோ முச்சந்தியிலே பேசுகிற பேச்சு இங்கே சொல்லப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அது எதுவாக இருந்தாலும் அதைச் சட்டமன்றத்தில் சொல்ல வேண்டுமென்பது நியாயமும் அல்ல, அவசியமும் அல்ல. அது, உணர்ச்சிவசப்பட்டு எதற்காகவோ பதில் சொல்கிறபோது அந்த வார்த்தை சொல்லப்பட்டு, அதைத் தாங்களே நீக்கிவிட்டீர்கள். தாங்களே நீக்கியதற்குப் பின்னர் தாங்களே தண்டனை வழங்குவது அவசியமா என்பதைத் தாங்கள் கருதிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2001 ஆகஸ்ட் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் என்பவர் இந்த அவையினுடைய ஒட்டுமொத்த உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளினுடைய ஒரு வடிவம், ஒரு பிரதிநிதி. நான் என்னுடைய கருத்துகளை மட்டுமே இங்கே திணிக்க விரும்பவில்லை. பேரவையிலே வழங்கக்கூடிய கருத்துகள் பேரவையினுடைய பெரும்பாலான உறுப்பினர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய கருத்துகளாக இருக்குமானால் அவற்றை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. (கூச்சல்-குழப்பம்)

*(பேராசிரியர் க. அன்பழகன் அவையிலிருந்து வெளியேறினார்.) (கூச்சல்-குழப்பம்)*

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (இ) நல்லிணக்க நாள் உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். பழைய நிகழ்ச்சிகள் முடிந்துவிட்டன. பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"நல்லிணக்க நாளை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்திற்கு அருகிலுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் நல்லிணக்க நாள் உறுதிமொழியைச் செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்."

ஆகவே, இப்போது பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை 11-15 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*முற்பகல் 11-15*

*முற்பகல் 11-15* மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 3. திருத்திய வரவு செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்-*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதிகளை சகித்துக்கொண்டு, சூழ்ச்சிகளுக்கு இரையாகாமல், தன்னந்தனியாக நின்று, புது சகாப்தத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். 1972-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கிய தர்ம யுத்தத்தை தர்மத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு வெற்றிகரமாக நடத்தி பீடுநடை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த இக்கட்டான பொருளாதாரச் சூழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை மூலம் இந்திய நாட்டிலுள்ள முதல்வர்களுக்கெல்லாம் முன்னோடி முதல்வராக, சிறந்த சிந்தனையாளராக, வீரம் மிகுந்த முதல்வராக, விவேகம் மிகுந்த முதல்வராக, கம்பீரம் மிகுந்த முதல்வராக நமது அம்மா புரட்சித் தலைவி அவர்கள் திகழ்கிறார்கள் என்பதை *18-8-2001* Economic Times-ல் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுடைய தொலைக்காட்சிப் பேட்டி நிரூபித்திருக்கிறது. தீட்டப்படுகின்ற திட்டங்கள் அடித்தள மக்களின் இதயத்தைத் தொட்டதாக வேண்டும் என்கிற உணர்விலே எத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பதல்ல முக்கியம், எத்தகைய மக்களுக்காக, எத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பதுதான் முக்கியம் என்கிற இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் அண்ணா அவர்களுடைய மேற்கோளை எடுத்துக் கூறினார்கள். அது முற்றிலும் தவறு. தாங்கக் கூடியவர்களுக்கு வரியும், தாங்க முடியாதவர்களுக்குச் சலுகையும் அளிக்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குக் கூறினார். To pinch the rich and to quench the poor. This is the basic principle of Anna and also Dr. Puratchi Thalavi Amma Avargal.

அண்ணாவின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் இந்த நிதிநிலை அறிக்கை மூலம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், புரட்சித் தலைவரின் ஒரே அரசியல் வாரிசாக மட்டுமல்லாமல், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அற்புதத் தாயாக விளங்குகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் ஆர்ப்பரிக்கின்ற அடுக்குமொழி வசனங்கள் இல்லை. விவசாயிகளை ஏமாற்றும் ஏமாற்றுத் திட்டங்கள் இல்லை. சமத்துவபுரம், சமத்துவபுரம் என்று கூறிக்கொண்டு, சமத்துவபுரத்தை ஆரம்பித்துவிட்டு, சாதிக் கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொள்ளும் திட்டங்கள் இல்லை. தன்னை நம்பி வாக்களித்த ஏழை, எளியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், சமுதாயப் பண்பாடுகளை தூய்மைப் படுத்தும் தெளிவான தொலைநோக்கு கொண்ட சிறந்த நிதிநிலை அறிக்கையை டாக்டர். புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இந்த மாமன்றத்திலே கடந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையை தி.மு.க.வைச் சார்ந்த முன்னாள் முதல்வர் சமர்ப்பித்தபோது அந்த விவாதத்திலே கலந்து கொண்டு நான் பேசினேன். இதுதான் நீங்கள் வாசிக்கின்ற கடைசி பட்ஜெட், அடுத்த பட்ஜெட்டை எங்கள் அம்மா டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மாமன்றத்திலே சமர்ப்பிப்பார் என்று அன்று கூறினேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு முதல்வராக இருந்தவர் நான் பேசியதைக் கேட்டு ஏளனம் செய்தார், எள்ளி நகையாடினார், சிரித்தார். இந்த நூற்றாண்டின் சிறந்த joke-ஐ சுந்தரம் பேசுகிறார் என்று கூறினார். இன்று நான் சொல்கின்றேன், 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும் தர்மம் வெல்லும்' என்ற கூற்றுப்படி இந்த ஆட்சிக் கட்டிலிலே அம்மா அவர்கள் அமர்ந்துள்ளார்கள். அன்று நான் பேசியபடியே இன்று இந்த முத்தான, சத்தான பட்ஜெட்டைத் தாக்கல் செய்திருக்கிறார்கள், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நான் அன்றைக்குச் சொன்னது பலித்துவிட்டது. இந்த பட்ஜெட் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் முன்னாள் முதல்வர் ஓடி ஒளிந்திருப்பதுதான் இந்த 2001 ஆம் ஆண்டினுடைய தலைசிறந்த joke என்று இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்தார்கள். ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்தவுடன் பல அற்புதமான சாதனைகளையெல்லாம் செய்தார்கள். ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்த 50 நாட்களில் எந்த முதலமைச்சரும் 5 ஆண்டுகளிலே சாதிக்க முடியாததைச் சாதித்துக் காட்டினார்கள். பொறுப்பேற்றவுடன் தமிழகம் இருளிலே மூழ்கி இருந்தது. நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில் தொழிலாளர்கள்

மேற்கொண்ட வேலை நிறுத்தத்தினால் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டு தமிழகத்தில் மின்சார நெருக்கடி ஏற்படும் சூழ்நிலை உருவானபோது, அண்டை மாநிலமான கேரள மாநில முதல்வருடன் தொடர்புகொண்டு கூடுதலாக மின்சாரத்தைப் பெற்றுச் சமாளித்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். தேர்தல் அறிக்கையில் அறிவித்ததையும், அறிவிக்காததையும் நடைமுறைப்படுத்தி வருபவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்தவுடன் முதல் அறிவிப்பு செய்தார்கள். விவசாயிகளின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று 30-9-2001-க்குள் கூட்டுறவுக் கடன்களைச் செலுத்தும் விவசாயிகளுக்கு சுமார் 310 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், அன்றைய முதல்வர், நாங்கள் எல்லாம் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சட்டமன்றத்தில் பேசியபோது, உங்கள் அம்மா அவர்கள் NABARD BANK-க்கு எழுதிக் கொடுத்துவிட்டார்கள். அதனால்தான் விவசாயக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்ய முடியாது என்று நொண்டிச் சமாதானம் கூறினார்கள். இங்கே இருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் இது தெரியும் என்று நினைக்கிறேன். இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் விவசாயிகளுடைய கடனுக்கான வட்டி, அபராத வட்டி இவற்றையெல்லாம் தள்ளுபடி செய்தவர் டாக்டர் புரட்சித் தலைவி என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-20*

அடுத்தபடியாக, ஆதிதிராவிட மாணவிகள் மேல்நிலைப் படிப்பு பயில பள்ளிகளுக்குச் செல்வதற்காக, சைக்கிள் திட்டத்தை அறிவித்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். இதனால் ஒரு இலட்சம் மாணவிகள், கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் அளவுக்குப் பயனடைய இருக்கிறார்கள். ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்த கல்வித் திட்டத்தினை மேம்படுத்தி, சீரமைத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

அடுத்தபடியாக, தேயிலைக்கு நியாய விலை கேட்ட தொழிலாளர்களை, விவசாயிகளை காவலர்களை விட்டு அடிக்காமல், தேயிலைக்கு நல்ல விலை கிடைப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

கிராமப்புற மாணவர்களின் கல்வித் திறனை உயர்த்தும் வகையில், தொழில் படிப்புக் கல்லூரிகளில் கிராமப்புற மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தி ஆணை வெளியிட்டவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்காக வெளிப்படையான, தெளிவான இட மாற்ற வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பெற்று கலந்தாலோசித்தல் அடிப்படையில் ஆசிரியர்களுக்குப் பொது மாறுதல் வழங்குவதற்கு ஆணையிட்டு, ஆசிரியர்கள் வயிற்றில் பால் வார்த்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். மேலும், மருத்துவர்களின் நலனையும் கருத்தில்கொண்டு, அவர்களுக்கும் counselling முறையில் இடமாற்றம் அளிக்க வழி வகைகளைச் செய்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

இப்படி அவர்கள் ஆட்சிக் கட்டிலுக்கு வந்ததற்குப் பிறகு பல அற்புதமான திட்டங்களை அறிவித்தார்கள். நெடுஞ்சாலைகளில் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களை மனதில் கொண்டு, நெடுஞ்சாலைகளில் விபத்துக்காய நிவாரண மையங்களை ஏற்படுத்தி விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடியாக மருத்துவ வசதி அளிக்க நடவடிக்கை எடுத்து வருபவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

பட்டா பாஸ் புத்தகம் உடனடியாக வழங்குவதற்கு ஆணையிட்டவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். கதர் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் 30 சதவீதம் தள்ளுபடி வழங்கியதுடன் ரேஷன் பொருட்கள் ரேஷன் கடைகளில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வழங்குவதற்குரிய ஏற்பாட்டைச் செய்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

அடுத்தபடியாக, அனைத்து ஏழையெளிய மக்களுக்கும் அன்னையாக விளங்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களும் சமையல் எரிவாயு வசதி பெற வேண்டுமென்ற எண்ணத்துடன் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் புதிதாக திருமணமான தம்பதிகளுக்கு இலவச சமையல் எரிவாயு வழங்கும் திட்டத்தினை அளித்துள்ளார்கள்.

இரயில்களில், லாரிகளில் தண்ணீர் கொண்டு வந்து சென்னையினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்கள். இந்தச் சாதனைகளெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 50 நாட்களில் செய்து முடித்தவை.

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கை. நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் எனக்கு முன்னால் பேசியவர் தரிசு நில மேம்பாடு திட்டத்தினைப்பற்றிச் சொன்னார். தரிசு நில மேம்பாடு திட்டத்தினைப்பற்றி நானும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது செயல்படுத்தப்பட இருப்பதைப்போல இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்படவில்லை. அதைத்தான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அவையில் எடுத்துக் கூறினார்கள். அதாவது, எந்த அரசும் இதுமாதிரி செயல்படுத்த முடியாத அளவில், தற்போது அதற்குப் புத்துயிர் கொடுத்து, இதயசுத்தியோடு எந்த வகையில் அதை நடைமுறைப்படுத்தினால் அந்தத் திட்டத்தினை நன்றாகச் செயல்படுத்த முடியும் என்று ஆராய்ந்து, அந்தத் திட்டத்தினை மூன்று முக்கிய கூறுகளாகக் கொண்டு சிறப்பாகச் செய்வதற்கு செயல்வடிவம் கொடுத்தவர்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக விவசாயிகள் வாழ்க்கை மேம்பாடு அடையும்; கிராமப்புற வளர்ச்சி அதிகரிக்கும்; பொருளாதார ரீதியில் விவசாயிகள் வாழ்க்கை முன்னேற்றம் அடையும். இந்த அரிய திட்டத்தினைக் கொண்டுவந்து அற்புதமாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

அடுத்தபடியாக, வேளாண் கொள்கை. புதிய வேளாண்மைக் கொள்கை வகுக்கப்பெற்று, வேளாண் பொருட்களின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, வேளாண்-வணிகத் துறை என்ற புதிய துறையை அரசு ஏற்படுத்தும் என்ற செய்தி இப்போது விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்ப்பதாக இருந்துகொண்டிருக்கிறது. விவசாயிகள் நெல்லுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு ஏதுவாக டி.கே.எம்.9 இரக நெல்லையோ அல்லது அரிசியையோ வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதி அளித்து விவசாயிகளின் துயர் துடைத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அடுத்தபடியாக, மகளிர் மேம்பாட்டுத் திட்டம். பெண்களுடைய முன்னேற்றத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எப்போதுமே ஓர் அக்கறை உண்டு. கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கும் மேலாக பத்திரிகைகள், பொது மேடைகள், நாடாளுமன்றத்தின் வாயிலாக இந்த நாட்டிலுள்ள பெண்களுடைய நிலை குறித்தும், அவர்கள் அடக்குமுறைகளுக்கு ஆளாவது குறித்தும் புரட்சித் தலைவி அவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். பெண்களுடைய வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்காக பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-25*

நடப்பு நிதியாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் பயிற்சிகள் பெற ஏதுவாக ரூபாய் 15 இலட்சம் செலவில் ஆறு சமுதாய நிதி ஆதார மையங்கள் அமைக்கப்படவுள்ளன. மகளிர் சுய வேலைவாய்ப்பை அதிகரிக்க 5 இலட்சம் மகளிருக்குத் தொழில் செய்ய கடன் உதவி செய்யப்படவுள்ளது.

ஒரேயொரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பத்தில் பெற்றோர் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருந்தால் அந்தக் குழந்தையின் பெயரில் 20 ஆண்டுகளுக்கு தொடக்க வைப்பீடாக ரூ.20,650 அளித்தும், இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமிருந்து, ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் பெற்றோரில் எவரேனும் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்டிருந்தால் அப்பெண் குழந்தைகள் ஒவ்வொன்றின் பெயரிலும் ரூ.14,450 தொடக்க வைப்பீடாகக் கொடுக்கப்படும் என்றும் ஓர் அற்புதமான திட்டத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பெண் சிசுக் கொலை என்ற கொடிய செயலுக்கு எதிராகப் பெருமளவு பிரச்சாரம் செய்து பெண் சிசுக் கொலையைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

அடுத்தபடியாகச் சொல்ல வேண்டுமென்றால், பத்திரிகையாளர்கள் நலன். இப்போது சில அரசியல் தலைவர்கள், சில பத்திரிகை அதிபர்களையும், பத்திரிகையாளர்களையும் கையிலே வைத்துக்கொண்டு இந்த அரசுக்கு எதிராகக் கொம்பு சீவிவிடும் வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் பத்திரிகையாளர்கள் குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை 50,000 ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளார்கள். பத்திரிகையாளர்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகளை வாங்குவதற்கு இயலும் வகையில் திட்டம் ஒன்றும் தீட்டப்பட்டுள்ளது. இந்தச் சலுகைகளை எல்லாம் இந்தியாவிலேயே வழங்கிய ஒரே முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஒரு மூத்த பத்திரிகையாளன் என்று மூச்சுக்கு முன்னூறு தடவை கூறிக்கொண்டிருப்பவர்கள் இந்தத் திட்டத்தை வரவேற்காவிட்டாலும், அவர்களுடைய பத்திரிகையில் பணியாற்றும்

பத்திரிகையாளர்கள் இன்றைக்கு உள்ளுக்குள் அம்மாவை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள், புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, விளையாட்டுத் துறையைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றால், விளையாட்டுத் துறையில் முக்கிய கவனம் செலுத்தி வருபவர் புரட்சித் தலைவி அவர்கள். இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்குமே அவர்கள் இதில் விசேஷ கவனம் செலுத்தியிருக்கிறார்கள்.

1991-96 ஆம் ஆண்டுகளில் முதலமைச்சராக இருந்போது ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தை சர்வதேச தரத்தில் உருவாக்கி சாதனை படைத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். தமிழ்நாட்டின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றிய நீச்சல் வீரன் குற்றாலீஸ்வரன், Athletic வீராங்கனை அமுதா போன்ற விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் கொடுத்து அவர்களின் திறமையை உலகறியச் செய்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல இந்த பட்ஜெட்டில்கூட இதுவரை இந்தியாவில் எந்த மாநில முதலமைச்சரும் அறிவிக்காத அளவுக்கு ஒலிம்பிக் மற்றும் உலக விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் தங்கப் பதக்கம் பெற்றால் ஒரு கோடி ரூபாயும், வெள்ளிப் பதக்கம் பெற்றால் 50 இலட்சம் ரூபாயும், வெண்கலப் பதக்கம் பெற்றால் 25 இலட்சம் ரூபாயும் பரிசுத் தொகையாக வழங்கப்படும் என்று டாக்டர் புரட்சித் தலைவி அறிவித்ததை விளையாட்டுத் துறையில் உள்ள வீரர்கள் மட்டுமல்ல, அத்தனை விளையாட்டு ரசிகர்களுமே வரவேற்கிறார்கள், வாழ்த்துகிறார்கள்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்காலிகமான ஒரு ஏற்பாட்டைத்தான் முந்தைய அரசு எடுத்திருந்தது. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு சென்னை நகரைச் சுற்றியுள்ள ஏரிகளைப் பராமரித்து, நீர் ஆதாரங்களை உருவாக்கி, மழை நீரைச் சேமிக்க ஏற்பாடு செய்து, இந்தப் பிரச்சினையை மிகச் சிறந்த முறையில் தீர்த்து வைத்திருக்கிறார்கள். மாநிலத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 690 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங்களிலே குடிநீர் வசதியைப் பெருக்க பல திட்டங்கள். சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க புதிய வீராணம் திட்டம், பள்ளிப்பாளையம் திறந்த நிலை கால்வாய்த் திட்டம், குழாய்கள் மூலமாக மேட்டூரிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம்

என்று அற்புதமான பாராட்டுக்குரிய திட்டங்கள் அறிவிக்கப் பட்டிருக்கின்றன.

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், ஆலய நிருவாகத்தில் அரசியல்வாதிகள் தலையீடு இல்லா்மல் இருக்கச் செய்வது மிகவும் பாராட்டுக்குரியது. திருக்கோயில்களில் தினமும் ஒருகால பூஜையாவது நடைபெற வழிவகை செய்யும் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கும் திட்டம் ஆராதனைக்குரியது. அழகர் முருகன் குடிகொண்டுள்ள பழனி மலை உச்சிவரை செல்ல கேபிள் கார் வசதியும், கிரிவலப் பாதை வசதியும் பக்தர்களுக்கு மிகுந்த பயன் அளிக்கும் திட்டங்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள பல்வேறு சிறப்புத் திட்டங்களுக்கு இடையில் புரட்சிகரமான, மிகத் துணிச்சலான ஒரு முடிவை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துள்ளார்கள். நம் நாட்டில் இளைஞர் சமுதாயமும், மாணவர் சமுதாயமும் பான் மசாலா, குட்கா போன்ற கொடிய போதைப் பழக்கத்திற்கு ஆட்பட்டுள்ளார்கள். இந்தக் கொடிய பழக்கத்தால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய மிகக் கொடிய நோய்களிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற தாய் உள்ளத்தோடு பான் மசாலா, குட்கா போன்றவற்றுக்குத் தடை விதிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். இன்றைக்குத் தாய்க் குலமும், தந்தைக் குலமும் இதைப் போற்றி வரவேற்கிறார்கள். இதுவே முந்தைய ஆட்சியாக இருந்திருந்தால் இதற்கும் ஒரு 4 rate வைத்திருப்பார்கள். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், சில சமுதாயத் தலைவர்களுக்கு சமூகப் பழக்க வழக்கங்களைப்பற்றிக் கவலை இல்லை. சமுதாயம் எக்கேடு கெட்டாலும் அவர்களுக்கு அதுபற்றிக் கவலையில்லை. பணம் சம்பாதிப்பது ஒன்றுதான் அவர்களுக்கு ஒரே வழி. அந்தப் பணம் எப்படி வந்தாலும் பரவாயில்லை என்று நினைக்கிறார்கள். உதாரணத்திற்கு சில தலைவர்களுடைய குடும்பத்தினர் ஸ்னோ பௌலிங், பில்லியர்ட்ஸ், ஸ்நூக்கர் போன்ற விளையாட்டுகள் பெயரால் காமக் களியாட்டங்களை, கும்மாளங்களை நடத்தி இளைஞர் சமுதாயத்தை இப்போது கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விளையாட்டு என்ற பெயரால் நடக்கும் அந்த மையங்களுக்கு விதிக்கப்படும் 20 சதவீதம் வரி போதாது. அந்த மையங்களை மூட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுதாவது புரியும் என்று நினைக்கிறேன். இளைய சமுதாயத்தை வாழ வைப்பவர் யார், இளைய சமுதாயத்தைக் கெடுத்துக்

கொண்டிருப்பவர்கள் யார் என்பது இந்த உலகத்திற்குத் தெரியும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-30

கல்வியைப் பொறுத்தவரையில், வாழ்க்கையில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முக்கியமான காரணம் கல்வியறிவு இல்லாமைதான். அனைவருக்கும் கல்வி என்ற புதிய திட்டம் அனைவராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அறியாமை என்ற இருள் அகன்றிட இந்தத் திட்டம் உதவும். பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டுவிட்ட குழந்தைகளுக்கும், பள்ளியில் இதுவரை சேராத குழந்தைகளுக்கும் கல்வி என்ற அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடிப் பார்வையில் ஒரு பேரியக்கம், ஆசிரியர்களை நியமனம் செய்வதில் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்திற்கு அதிகாரம் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. நடப்பாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் ஆவடிக்கு அருகில் திருமுல்லைவாயிலில் 290 ஏக்கர் பரப்பளவு நிலம் உள்ளது. அங்கு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சிறு மற்றும் குறு தொழிலுக்கு புதிய தொழிற்பேட்டை ஒன்று தொடங்கப்படும் என்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருப்பதை இன்றைக்கு சிறுதொழில் முனைவோர்கள் பாராட்டுகின்றார்கள்.

காவல் துறையைப் பொறுத்தவரையில், நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள், வாகனங்கள், உயர் தொழில்நுட்ப ஆயுதங்கள், குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கான கணினிமயமாக்கப்பட்ட மேம்பட்ட தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக காவல் துறையை நவீனப்படுத்த 108 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததும், புதியதாக 50 மகளிர் காவல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுத்திருப்பதும் பாராட்டுக்குரியது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கழிப்பிடங்களைப் பொறுத்தவரையில், 12,619 கிராம ஊராட்சிகள் அனைத்திலும், படிப்படியாக மகளிர் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில், ஒருங்கிணைந்த மகளிர் துப்புரவு வளாகங்களை அமைக்க ஆணையிட்டுள்ளார்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். ஒவ்வொரு

வளாகத்திலும் போதிய மின் வசதி மற்றும் தண்ணீர் வசதியோடு ரூ.2.00 இலட்சம் செலவில் கழிப்பிடம் மற்றும் குளியல் வசதிகள் செய்து தரப்படும் என்பதை ஒட்டுமொத்த தாய்க்குலமும் இன்று பாராட்டிக்கொண்டிருக்கிறது. அதேபோல, நகர்ப்புறங்களில் வாழும் மகளிர்களுக்கு இன்றியமையாத தேவையான துப்புரவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தண்ணீர் வசதியுடன்கூடிய 1,341 கழிப்பிடக் கட்டடங்கள் கட்ட 42.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன், வாழ்த்துகின்றேன்.

மீனவர் நலனுக்காக ஒரு வீட்டுக்கு 37,000 ரூபாய் செலவில் 4,000 வீடுகள் கட்டித் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீனவர்கள் மீன்பிடிக் கடல் மண்டலப் பகுதிகளில் மீன் பிடிக்க இயலும் வகையில், கடலில் பகலும், இரவும் கடல் எல்லை தெரியும் வகையில் வழிகாட்டு விளக்குகளுடன் கூடிய மிதவைகளை இந்த அரசு நிறுவ உத்தேசித்துள்ளதை நான் பாராட்டுகின்றேன்.

அடுத்தபடியாக, கிராம நிருவாக அலுவலர்களுக்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகிலும் ரூ.60,000 செலவிலே அலுவலகக் கட்டடம் கட்டித் தரும் திட்டம் அனைவராலும் பாராட்டப்படுகின்றது.

எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை மாற்றி புதியதாக எம்.ஜி.ஆர். அறிவு நகர் என அமையும் வகையில் பெரும் திட்டம் ஒன்றை வகுத்ததை வரவேற்கின்றேன்.

அரசு மருத்துவமனை என்றாலே ஓர் அலட்சியப் போக்கு இன்று மக்கள் மனதிலே உள்ளது. அதை மாற்றி மக்களுக்குத் தரமான மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற பகுதிகளில் அளிக்கப்படும் மருத்துவப் பணிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆரம்ப சுகாதார மையங்கள் படிப்படியான முறையில் 30 படுக்கைகள் மற்றும் சிறப்பு மருத்துவம் கொண்ட ஒரு சிறிய மருத்துவ நிலையமாக உயர்த்துவோம் என்று கூறியிருப்பதை வரவேற்கின்றேன். ஒவ்வொரு அரசு மருத்துவக் கல்லூரியிலும், செவிலியர் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த அரசு ஆராய்ந்து வருகிறது.

அடுத்தபடியாக பொது விநியோகம். பொது விநியோக முறையில் நடைபெறும் தில்லுமுல்லுகளைக் கண்டறிந்து, அவற்றைக் களைவதற்கு அரசுக்குப் பரிந்துரை கூறுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட

குழு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது. முந்தைய ஆட்சியில் இரயில் மூலம் பொது விநியோகத் துறையினுடைய அரிசி கடத்தப்பட்டது. அந்த ஊழலைக் கண்டுபிடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு சாதனைகளை இந்த 100 நாட்களிலேயே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சாதித்து இருக்கின்றார்கள்.

புரட்சித் தலைவி அவர்களைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு தொடர்ந்து தனது உயிரைத் துச்சம் என மதித்து தீவிரவாதத்தை எதிர்த்து குரல் எழுப்பி வருகின்றார்கள். தமிழ்நாட்டில் எத்தகைய வடிவத்தில் தீவிரவாதம் தலைதூக்கினாலும் அதை இரும்புக் கரம்கொண்டு ஒடுக்குவேன் என்று சொன்ன துணிச்சல் உள்ள ஒரே முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவிதான். விடுதலைப் புலிகளை நாட்டைவிட்டு ஓட்டியவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். காட்டிலுள்ள கொலைகாரன் வீரப்பனுடன் பேசிய ஒரு முதலமைச்சரைத்தான் இந்த நாடு முன்பு பார்த்திருக்கின்றது. ஆனால், அத்தகைய கொலைகாரனானாலும் சரி, மத தீவிரவாதியானாலும் சரி, நக்சலைட்டாக இருந்தாலும் சரி, தீவிரவாதத்தை எந்த வடிவத்திலும் நான் அனுமதிக்க மாட்டேன் என்று கூறுகின்ற நெஞ்சுரமும், துணிவும் கொண்ட ஒரே தலைவி டாக்டர் புரட்சித் தலைவிதான். அவருடைய உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பது உண்மைதான். அதற்காகத்தான் அவருக்குக் கறுப்புப் பூனைப் படை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேசமயம், தீவிரவாதிகளுக்கு எதிராகப் பேசாமல் ஆதரவாகப் பேசுகின்ற சில தலைவர்களுக்கும் இந்த நாட்டிலே கறுப்புப் பூனைப் படை பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது எதற்காக? புரியவில்லை. புரியாத புதிராக இருக்கின்றது. ஏன் அவர்களுக்குக் கறுப்புப் பூனைப் படை? எதற்காக? தீவிரவாதத்தை அவர்கள் ஆதரிப்பதற்காகவா? இதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், இன்னும் 15 உறுப்பினர்கள் பேச வேண்டும். எனவே, இன்னும் 5 மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்களும் மதுரைக்காரர். முன்பிருந்தவரும் மதுரைக்காரர். (சிரிப்பு)

தேர்தல் பிரச்சாரத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்ன கூறினார்கள்? நான் முதல்வரானால், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, முதல்வராக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந்தாலும் சரி, கைது செய்து சிறையில் அடைப்பேன் என்று கூறினார்கள். மக்கள் அதற்காக அவர்களுக்கு வாக்களித்திருக்கின்றார்கள். அதனால்தான், மேம்பாலங்கள் கட்டியதில் 12 கோடி ரூபாய்க்கு ஊழல் நடைபெற்றது என்பதற்காக முன்னாள் முதல்வரைக் கைது செய்திருக்கின்றார்கள். இதில் என்ன மனித உரிமை மீறிவிட்டது? ஏன் கூக்குரல் இடுகின்றீர்கள்? தண்டவாளத்திலே தலை வைத்துப் படுத்தவர்கள் நீங்கள். சிரித்துக்கொண்டே சிறைக்குச் செல்வோம் என்று கூறியவர்கள் நீங்கள். ஏன் பயப்படுகிறீர்கள்? ஒரு வழக்கிற்கே இப்படியாகியிருக்கிறீர்களே, இன்னும் ஓராயிரம் வழக்குகள் பின்னால் வருகின்றனவே, அவற்றுக்கு நீங்கள் என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) இதில் என்ன மனித உரிமை மீறப்பட்டுவிட்டது? இந்த மனித உரிமை மீறல்பற்றிப் பேசுபவர்கள் யார்? நான் கேட்கின்றேன். அன்றைக்கு அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெறுவதற்காகச் சென்றீர்களே, உங்களுக்கு டாக்டர் பட்டம் கொடுக்கக்கூடாது என்பதற்காக மாணவர்கள் போராட்டம் நடத்தினார்களே, உதயகுமார் என்ற மாணவனுடைய பிணத்தின் மீது சென்று டாக்டர் பட்டத்தைப் பெற்றீர்களே, அன்றைக்கு இந்த மனித உரிமையைப்பற்றிப் பேசுவதற்கு யாருக்கும் யோக்கியதை இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி மாவட்டத்தில் இன்றைக்கு புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்தவர்களோடு தோளோடு தோள் சேர்ந்திருக்கிறீர்களே, அன்றைக்கு 17 தலித்துகள் துப்பாக்கிச் சூட்டிற்குப் பயந்து, ஆற்றிலே குதித்து உயிரை விட்டார்களே, அன்றைக்கு மனித உரிமையைப்பற்றிப் பேசுவதற்கு யாருக்குமே யோக்கியதை இல்லையா? ஏன், இந்த மாமன்றத்திலே இதே இடத்திலே 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள், வரலாற்றில் ஒரு கறுப்பு நாள். இந்த மாமன்றத்தில் எங்கள் அன்னைக்கு, அன்றைக்கு ஏற்படுத்திய கொடுமைகள் வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாது; நா கூசுகின்ற அளவிற்கு அப்போது நடந்துகொண்டீர்களே! எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் கூறினார்களே இப்போது, பேராசிரியர் தவிர, அனைவருமே கண்ணியம் அற்றவர்கள் என்பதை நிரூபித்து இருக்கிறீர்கள் என்று. இன்றைக்கு இத்தனை பேருக்கும் மத்தியிலே நீங்கள் இவ்வளவு கேவலமான வார்த்தைகளால் வேண்டுமென்றே பேசியிருக்கிறீர்களே, அன்றைக்கு நாங்கள் இருந்ததோ 27 நபர்கள். அந்த

*27* நபர்கள் முன்னிலையில் மிகக் கேவலமாக, வார்த்தைகளால் சொல்ல முடியாத கொடுஞ்செயல்களை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு ஏற்படுத்தினீர்களே. இங்கு முன்னாலே பேசினாரே ஓர் உறுப்பினர், தன்னுடைய பெயர் பத்திரிகையிலே வர வேண்டும் என்பதற்காக சபாநாயகருடைய தீர்ப்பே இறுதியான தீர்ப்பு, அந்தத் தீர்ப்பிற்கு மேல் பேசுவதற்கு யாருக்குமே உரிமையில்லை என்று, என்னையெல்லாம் தூக்கி எறிந்தார்களே அன்றைக்கு. இந்த மாமன்றத்திலே இருந்த அனைவருக்குமே தெரியும். அவர் பேசுகின்றார். துகில் உரித்த அந்த துச்சாதனர்களுக்கெல்லாம் அன்றைக்கு மனித உரிமையைப்பற்றிப் பேசுவதற்கு யோக்கியதை இல்லையா? இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கின்றது மனித உரிமையைப் பற்றிப் பேசுவதற்கு? தவறு செய்தவர்களைத்தான் சிறையிலே அடைத்திருக்கின்றார்கள். அதில் என்ன தவறு? பேரவைத் தலைவர் அவர்கள் கூறினார்கள், எனவே, அதனுள் அதிகம் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும், அந்த மனித உரிமையைப் பற்றி நான் பேசியே ஆகவேண்டும். அன்றைக்கு இல்லாத அந்த மனித உரிமையைப் பற்றி, இன்றைக்குக் கூக்குரல் இடுகிறீர்கள். அதுவும், அவர்களைக் கைது செய்தபோது, பாலமா, நான் கட்டினேனா, ஸ்டாலினைக் கேள், நான் கட்டவில்லை என்று கூறியதெல்லாம் எங்களுக்குத் தெரியும். தவறு செய்தவர் ஸ்டாலின் என்று நீங்கள் ஒத்துக்கொள்கின்றீர்கள். அந்த வார்த்தைகளெல்லாம் விசாரணைக் Commission–லே தெரியவரும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் எதற்காக வெளியிலே திசைதிருப்புகிறீர்கள், உள்ளே எதற்காக திசைதிருப்புகிறீர்கள், தெரியாதா எங்களுக்கு? மேலும் வழக்குகள் வரும்.

*முற்பகல் 11–40*

ஸ்டாலினுடைய உற்ற நண்பர் ரமேஷ். அவர் அவருக்கு நெருங்கிய நண்பர். அவருடைய தற்கொலையில் பெரிய மர்மம் அடங்கியிருக்கிறது என்று பேசிக்கொள்கிறார்கள். அந்த மர்மங்கள் வெளிவந்தால். எத்தனை பேர் மோசடிப் பேர்வழிகள் என்பது தெரியும். எப்படி அவர் இறந்தார், அந்த மரணத்திலே என்ன சூட்சமம் இருக்கிறது என்பது வெளி உலகத்திற்குத் தெரிந்துவிடும். அவையெல்லாம் தெரிந்தால், நாம் கைது செய்யப்படுவோம், ஆயுள் முழுவதும் சிறையிலே அடைக்கப்படுவோம் என்று அதனைத் திசை திருப்புவதற்காக அந்த அதிகாரிகளை மாற்ற வேண்டுமென்கின்றீர்கள். இதுதானே உண்மை. பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், மாண்புமிகு முதல்வர்

அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். ரமேஷ் மரணம் குறித்து தீவிரமாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மற்றும் ஒன்று. ஆட்சிப் பொறுப்பேற்ற 50 நாட்களில் இவ்வளவு சாதனை படைத்துவிட்டார்கள். 100 நாட்களிலே அற்புதமான பட்ஜெட்டைப் போட்டுவிட்டார்கள். இவர்களை இன்னும் 5 ஆண்டுகாலம் ஆளவிட்டால், தி.மு.க. என்ற கட்சியை இல்லாமல் ஆக்கிவிடுவார்களோ, நாம் ஆயுள் பூராவும் சிறையிலே இருக்க வேண்டுமோ என்ற எண்ணத்திலே, இன்று வெளியிலே கலவரம் செய்கின்றீர்கள். உள்ளே கலவரம் செய்கின்றீர்கள். பேசக்கூடாத வார்த்தைகளை வேண்டுமென்றே, அனைவருக்கும் கோபம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலே பேசுகின்றீர்கள். உங்களுடைய கட்சித் தலைவர் அமருங்கள், அமருங்கள் என்று கூறினாலும், கடமையை மறந்து, கண்ணியத்தை மறந்து, கட்டுப்பாட்டை மறந்து, மிகத் தரக்குறைவாக இன்றைக்கு நடந்துகொண்டீர்கள்.

அம்மா அவர்களே, எங்களுடைய கைகளை நீங்கள் கட்டிப்போட்டு இருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து அந்தக் கை விலங்கை தகர்த்தெறியுங்கள். எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள். இந்தச் சட்டமன்றத்திலே, நாங்கள் பேசுவதன் மூலமாக, அந்த வார்த்தைகள் குந்தகம் ஏற்படுவதாகயிருந்தால், உங்கள் புகழுக்குக் களங்கம் ஏற்படுவதாக இருந்தால், இந்தச் சட்டமன்ற உறுப்பினர் பதவியைக்கூட நாங்கள் தூக்கியெறிந்திடத் தயாராக இருக்கின்றோம். ஆணையிடுங்கள் தாயே. இன்றைக்கு வீண் வசனம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களைப்பற்றி எங்களுக்குத் தெரியாதா? நாங்கள் பேரறிஞர் அண்ணா.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், நல்ல உச்சகட்டத்திற்கு வந்திருக்கிறீர்கள். இதோடு பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். எப்படியாவது இந்த ஆட்சியைக் கலைத்துவிட வேண்டும், இந்த ஆட்சியை வீட்டிற்கு அனுப்பிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு சிலபேர் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் நினைவிற்காக ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர், பொன்மனச்

செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆரிடம் அரசியல் கற்றுக்கொண்டவர்தான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். 1980 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சி கலைக்கப்பட்டபோது அவருக்குப் பின்னால் சிப்பாயாக நின்ற இலட்சோப இலட்சம் போர்ப்படைத் தளபதிகள் இன்று புரட்சித் தலைவியின் பின்னால் அணிவகுத்து நின்றுகொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) சிங்கத்தை குகையிலே சந்தித்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். இந்தச் சிறு நரிகளுடைய சலசலப்பிற்கெல்லாம் அவர்கள் அஞ்சமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சோதனைகளைச் சாதனைகளாக்கியவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். நெருப்பாற்றில் நீந்தித்தான் இன்றைக்கு முதலமைச்சர் பதவிக்கே வந்திருக்கின்றார்கள். அவர் சந்திக்காத சதிகளா? இவற்றையெல்லாம் மீறித்தான் இன்றைக்கு அவர்கள் எங்களை வழி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அவையிலே இல்லையென்பதற்காக நான் கண்ணியம் தவறி, கடமை தவறி, கட்டுப்பாட்டை மீறிப் பேசத் தயாராக இல்லை. என்னால் பேச முடியும். இருந்தாலும், புரட்சித் தலைவருடைய அரசியல் வாரிசு புரட்சித் தலைவியின் பின்னால், அவர்கள் இட்ட கட்டளைக்குப் பணிந்து கண்ணியமான முறையிலே நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

எரியும் எரிமலை எங்கள் புரட்சித் தலைவி. அந்த எரிமலை மீது யாராவது ஏற முயன்றால் அந்த எறும்புக் கூட்டங்கள் அத்தனையும் சுக்கு நூறாகிவிடும் என்று கூறிக்கொண்டு இத்தனை சிறப்பான பட்ஜெட்டைக் கொடுத்த புரட்சித் தலைவி அவர்களை மனமாரப் பாராட்டி ஒருசில கோரிக்கைகளை உங்கள் முன்னால் வைத்து விடைபெறலாம் என்று இருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் எவ்வளவோ வாய்ப்பு இருக்கிறது, சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படுகின்ற I.R.D.P.. கடன்கள் தற்போது கிராமப்புற ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. அதை பேரூராட்சியில், நகராட்சியில் வசிக்கின்ற ஆதிதிராவிடர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏரி, குளங்களை மராமத்து செய்ய ஆக்கிரமிப்பு நிலங்களை அகற்றும்போது, நிலமற்ற ஆதிதிராவிடர்களுக்கு ஏழையெளிய மக்களுக்கு, நஷ்டயீடு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நீண்ட பல மாதங்களாக அனுமதிக்கப்படாமல் நிலுவையிலுள்ள முதியோர் உதவித் தொகையை விரைவில் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பழையகால வீடுகள் அனைத்தும் இடிந்துவிட்டன. சில வீடுகள் பழுதடைந்துவிட்டன. அவற்றைப் பழுதுபார்க்கவும், இடிந்த வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகள் கட்டித் தரவும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் கிராமப்புறங்களிலே அறிமுகப்படுத்தப்பட்ட கிராமப்புற குடிசைகளுக்கு ஒரு விளக்கு மின் திட்டத்தை பேரூராட்சியில், நகராட்சியில் வசிக்கும் ஏழை தலித் குடிசைவாழ் மக்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு வழிவகுத்த எங்களுடைய அருமைத் தலைவர் அய்யா மூப்பனார் அவர்களுக்கும், 50 கிலோமீட்டருக்கு மேலாக என்னுடைய தொகுதியில் எனக்காக வாக்கு கேட்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கடலாடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு ஆட்சி முடிந்து, புதிய ஆட்சி இன்று உருவாகி இருக்கிறது. வள்ளலார் அவர்கள்,

"கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த சன்மார்க்கர் ஆள்க
பொருள் நிறைந்த நல்லோர் நினைந்த நலம் பெறுக
எல்லோரும் வாழ்க இசைந்து"

என்று ஒரு பாடல் பாடி இருக்கிறார்கள். அதற்கு இலக்காக கருணை இல்லாத ஆட்சி ஒழிந்து இன்று ஒரு நல்லாட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையில், நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், மிகச் சிறப்பான முறையில் மக்களுடைய தேவைகளை உணர்ந்து நல்ல முறையில் பல கொள்கைகளை வகுத்திருக்கிறார்கள். குறிப்பாக கடந்த சட்டமன்றத்திலே, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து நாள்தோறும் வலியுறுத்திக்கொண்டிருந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய கோரிக்கையை இன்று நல்ல முறையிலே நிறைவேற்றி இருக்கிறார்கள். 310 கோடிக்கு மேற்பட்ட தொகையைக் கொடுத்து, விவசாயிகளுடைய கடனுக்கான வட்டியையும், தண்ட வட்டியையும் நீக்கியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலை நம்முடைய அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். இதுகுறித்து பேசும்போது எங்களுடைய கட்சி உறுப்பினர் ஹக்கீம் அவர்கள் ஒரு கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று கேட்டார்கள். நான் அப்போதே சொன்னேன். ஒரு கோடி ஒதுக்கமாட்டார்கள். இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சி என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே 82 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்குவார்கள் என்று நான் முதலிலேயே சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) Great men think alike என்று சொல்வார்கள். என்னுடைய கருத்தும், இந்த அரசினுடைய கருத்தும் ஒன்றாக இருந்ததைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த 82 இலட்சம் ரூபாய் தொகுதியில் நல்ல முறையில், நாங்கள் எங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுவதற்கு வழிவகுக்கும் என்பதால் நம்முடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பது இன்று தமிழகத்திலே மிகப்பெரிய ஒரு சோதனையான சூழ்நிலையாகி, மழையே பெய்யாமல் கடும் வறட்சிக்கு உள்ளான மாவட்டங்களில் ஒன்றான எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் மாறியிருக்கிறது. தருமபுரி மாவட்டம், எல்லாவற்றுக்கும் மேலாக இன்று சென்னை நகரம், குடிதண்ணீருக்காக அல்லல்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் நம்முடைய புதிய அரசு குடிதண்ணீருக்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கி இருக்கிறது. இராமநாதபுரம், தருமபுரி போன்ற மாவட்டங்களில், பெரிய திட்டங்களை உருவாக்கி எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கொடுப்போம் என்று சொல்லி இருப்பது மகிழ்ச்சிக்குரிய, வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அதை விரைவிலேயே செய்யவேண்டும் என்று நான் இந்த அரசைப் பணிவுடன்

கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய கடலாடி தொகுதி, மிகப்பெரிய வறட்சிக்கு உள்ளாகி, குடிதண்ணீரே இல்லாமல், மக்கள் நாள்தோறும் விலைக்கு வாங்கி தண்ணீர் குடிக்கின்ற ஒரு கொடுமையான சூழ்நிலை அங்கே நிலவுகிறது. ஆகவே, நம்முடைய அரசு நிரந்தர குடிதண்ணீர் கொடுப்பதற்கு முன்பாக லாரிகள் மூலமாவது அந்த வறண்ட பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும். சென்னையில் நீங்கள் எப்படி குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கிறீர்களோ, அதே அளவுக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக என்னுடைய கடலாடி தொகுதியில் லாரிகள் மூலமாக தண்ணீர் கொடுத்து அந்த மக்களைக் காப்பாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறீர்கள். அது வரவேற்கக்கூடிய ஒரு நல்ல திட்டம். தருமபுரிக்கு நாங்களெல்லாம் சென்ற நேரத்தில் அங்கேயுள்ள மக்கள் சொன்னார்கள். தருமபுரியில் அலுவலகம் இருப்பதா, கிருஷ்ணகிரியில் அலுவலகம் இருப்பதா என்று ஒரு பெரிய போராட்டமே நடந்து கொண்டிருந்தது; சட்டமன்றத்திலேயே நடந்துகொண்டிருந்தது. ஆளும் கட்சிக்காரர்களே சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த நேரத்தில் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று சொன்னபோது, அதற்குத் தலைநகரம் எதுவென்று நாங்களெல்லாம் சண்டை போட்டுக்கொண்டிருந்தோம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னால் நாங்களெல்லாம் இராமநாதபுரத்தைத்தான் தலைநகரமாக ஆக்க வேண்டுமென்று கேட்டோம். சிவகங்கையில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சிவகங்கை வேண்டுமென்று சொன்னார்கள். அவர் கொஞ்ச நேரம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, இராமநாதபுரமும் தருகிறேன், சிவகங்கையும் தருகிறேன் என்று நாங்களே எதிர்பாராத ஒரு நல்ல செய்தியைச் சொன்னார்கள். அதேபோல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரிக்கும், தருமபுரிக்கும் இரண்டு மாவட்டங்களை உருவாக்கிக் கொடுத்து, அந்த மாவட்ட மக்களுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் அதை நானும் பாராட்டுகிறேன்.

தரிசு நில மேம்பாடு என்பது மிக முக்கியமானது. வளர்ந்து வருகின்ற ஒரு நாட்டில் தரிசு நிலங்களை மேம்படுத்த வேண்டுமென்பது மிக

முக்கியமான கடமையாகும். நான்கூட சென்ற சட்டமன்றத்தில் பேசினேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மூன்று பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். ஒன்று, வளம் மிக்க, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய கிழக்குப் பகுதிகள். குறிப்பாக, செங்கற்பட்டு, தஞ்சாவூர் போன்ற பகுதிகள். இன்னொன்று, வளம் மிக்க, நல்ல மழை பெய்து, விளையக்கூடிய கோயம்புத்தூர், திண்டுக்கல் போன்ற பகுதிகளை ஒரு பகுதியாகப் பிரிக்கவேண்டும். வறட்சிக்கே உள்ளான சில பகுதிகள், குறிப்பாக ஈரோடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தருமபுரி போன்ற பகுதிகள், அதாவது, காவிரி ஓடினால்கூட, காவிரி தாண்டாத பகுதிகளும் அங்கே இருக்கின்றன என்பதற்குத்தான் சொல்கிறேன். இப்படிப்பட்ட பகுதிகளையெல்லாம் தனியாகப் பிரித்து அந்தப் பகுதிகளுக்கு, நல்ல பயிராகக்கூடிய பொருட்களை ஆராய்ந்து செயல்படுத்துவதற்கு எங்களையெல்லாம் நீங்கள் இஸ்ரேல் நாட்டுக்கு அனுப்பி, அந்த நாட்டிலே இருக்கிற பகுதிகளில் என்னென்ன வளத்தோடு அந்தப் பகுதிகளை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து வருவதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று பழைய அரசைக் கேட்டேன். அவர்கள் செய்யவில்லை, இந்த அரசாவது என் போன்ற ஆர்வம் மிக்க விவசாயிகளை இஸ்ரேல் நாட்டுக்கு அனுப்பி வறண்ட பகுதிகளை எப்படியெல்லாம் வளமாக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து வருவதற்கு நீங்கள் ஒரு வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்து வருகின்ற இந்த நாட்டில் இன்று விவசாயிகளை மேம்படுத்துவதை மிகப் பெரிய கடமையாக நாம் கருதிக் கொண்டு இருக்கிறோம்; கருத வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இன்று தண்ணீர் என்பது தமிழ்நாட்டுக்கு ஒரு சோதனையாகப் போய்விட்டது. ஆந்திராவிலிருந்து தண்ணீர் வரவில்லை, கர்நாடகாவிலிருந்து தண்ணீர் வரவில்லை, கேரளாவிலிருந்தும் தண்ணீர் வரவில்லை. ஆகவே நாம் தண்ணீருக்கு எங்கே போவது என்ற ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகியிருக்கிற இந்த நேரத்தில் அங்கே வறண்ட பகுதிகளில் வளமாக எப்படி விவசாயம் செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, அதன் மூலம் விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நம்முடைய அரசு வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தஞ்சை விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்ததைப் போல, டி.கே.எம்.9 இரக நெல்லை வெளிமாநிலங்களுக்கு, குறிப்பாக கேரளாவுக்கு அனுப்புவதற்கு நீங்கள் அனுமதி கொடுத்ததற்காக நான் பாராட்டுகிறேன். நாங்கள் தஞ்சைக்குச் சென்றிருந்த நேரத்தில் அங்கு,

எங்களுக்கு நெல்லை தவிர வேறு எதுவும் கிடையாது, அந்த நெல்லைக்கூட விற்பனை செய்ய வழியில்லை என்று எல்லோரும் சொன்னார்கள். அதை நன்கு உணர்ந்து, அந்த நெல்லுக்கு ஒரு விடுதலை கொடுத்ததற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

சுற்றுலாவைப் பொறுத்தவரையில் சென்ற அரசு அதைப் பற்றி சிந்தனையே செய்யவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கடலாடி பகுதியில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கடலுக்குள்ளாக மிக அருமையான நல்லதண்ணீர் தீவு என்று ஒன்று இருக்கிறது. மிகப் பெரிய பணக்காரர்களெல்லாம் படகின் மூலம் அங்கு சென்று நாள் கணக்கில் அமர்ந்து அருமையாகச் சமையல் செய்து சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். எனவே அகில உலகத்திலேயும் இருந்து அங்கு சென்று கடலுக்கு நடுவில் நல்லதண்ணீர் தீவில் இருந்து மகிழ்ந்து வருவதற்கு வசதியாக அதை ஒரு சுற்றுலாத் தலமாக உருவாக்கி அங்கே கட்டடங்கள் கட்டி சிறப்பான முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று நீலகிரி மாவட்டத்தை ஒரு சுற்றுலா மாவட்டமாக நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது. மகிழ்ச்சி. அதே நேரத்தில் வால்பாறை என்பது மிகச் சிறந்த ஒரு சுற்றுலா மையமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு கோவை தங்கம் அவர்கள் அந்தத் தொகுதியைப் பற்றி எனக்கு ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். வால்பாறை இயற்கை நிறைந்த பகுதி. அங்கே படகு விடக்கூடிய ஆழியார் அணை, சோலையார் அணை, நீராறு அணை, பரம்பிக்குளம் அணை, காடம்பாறை அணை, டான் ஸ்லிப் (குறுக்கீடு) டாப் ஸ்லிப், கிராஸ் ஹில்ஸ், மங்கி பேலஸ்ஸா (குறுக்கீடு) மங்கி ஃபால்ஸ்....

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இஸ்ரேலுக்குச் செல்வதற்கு முன்னால் வால்பாறைக்குப் போய்விட்டு வருவது நல்லது என்று தோன்றுகிறது. (சிரிப்பு)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அது வறண்ட பகுதி. இது குளிர்ந்த பகுதி, வனம் நிறைந்த பகுதி என்று கோவை தங்கம் அவர்கள் எனக்கு எழுதிக் கொடுத்து இதை நீங்கள் சட்டமன்றத்திலே வலியுறுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த வால்பாறை பகுதியையும்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் இருக்கின்ற நல்லதண்ணீர் தீவையும் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டும்.

ஒரு தடவை நான் இராமேஸ்வரத்திற்கு ஒரு மத்திய அமைச்சரை— காங்கிரஸ் ஆட்சி நடந்துகொண்டிருந்தபோது சொல்கிறேன்— அழைத்துக்கொண்டு சென்றேன். இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடிக்குச் செல்லுகின்ற வழியில் கடலுக்கு நடுவில் மிக அருமையான ஓர் இடம். அங்கே கோதண்டராமர் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. அதைச் சுற்றி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள். அதைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம் என்கின்ற அளவுக்கு ஒரு சிறப்பான பகுதியாக இருக்கிறது. இவற்றையெல்லாம் கண்டுபிடித்து நம்முடைய அரசு சுற்றுலா மையங்களை உருவாக்கி, அரசுக்கு சரியான வருமானத்தை ஈட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரை இன்று எனக்கு ஒரு மிகப் பெரிய கடமை இருக்கிறது. நான் சட்டமன்றத் தேர்தலுக்கு வாக்கு கேட்டு ஓர் ஊருக்குச் சென்ற நேரத்தில் இளைஞர்கள் 10 வயது, 15 வயது உள்ளவர்கள் - எல்லோருக்கும் இந்த அனுபவம் இருக்கும் என்று நினைக்கிறேன். எல்லோரும் - கிரிக்கெட்டுக்கு எங்களுக்குப் பணம் கொடு, பணம் கொடு என்று ஒரு நோட்டைத் தூக்கிக்கொண்டு வருவார்கள். நான் அவர்களைச் சமாளிப்பது எப்படி என்று கண்டுபிடித்து பட்ஜெட் முடிந்த உடனே உங்களுக்கு 25,000 ரூபாய்க்கு எல்லாப் பொருள்களும் வாங்கிக் கொடுத்துவிடுகிறேன் என்ற உறுதிமொழியைச் சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்தி வந்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில் மட்டும் 75 கிராமங்களுக்கு நான் வாங்கிக் கொடுத்தாக வேண்டும். ஆகவே விளையாட்டுத் துறைக்காக தனி நிதி ஒதுக்கி இந்த இளைஞர்களுக்கு அந்தப் பொருட்களையெல்லாம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கதருக்கு ஆண்டு முழுவதும் 30% தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். கதர் போடுகிறவன் என்ற முறையில், தனிப்பட்ட முறையில் நான் உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது தருமபுரியை எப்படி நீங்கள் பிரித்து இரண்டு மாவட்டங்களாக ஆக்கினீர்களோ அதைப்போல என்னுடைய தொகுதியான கடலாடி தொகுதி — அதனுடைய வரலாற்றை கொஞ்சம் இங்கே சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தெய்வத் திருமகன்

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்கள் நீண்ட நெடுங்காலம், வெள்ளையர் காலத்திலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை முதுகுளத்தூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். அப்பொழுது முதுகுளத்தூர், கமுதி, கடலாடி என்ற ஒரு தொகுதி. அதேபோல இராமநாதபுரம் சேதுபதி மன்னர் சண்முகராஜேஸ்வர சேதுபதி அவர்கள் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக இருந்தார்கள். அப்பொழுது அது இராமநாதபுரம், மண்டபம், திருப்புல்லாணி என்ற ஒரு தொகுதி. இந்த இரண்டு பெரிய தலைவர்களும் மறைந்த பிறகு 1967-லிருந்து இந்த இரண்டு தொகுதிகளிலேயிருந்து கடலாடி என்கின்ற ஒரு தொகுதியைப் பிரித்து உருவாக்கி, அது நீண்ட கடற்கரை பகுதியாக மீனவர்கள் வாழ்கின்ற பகுதியாக, பனை மரத் தொழிலாளர்கள் வாழ்கின்ற பகுதியாக, உப்பளத் தொழிலாளர்கள் வாழ்கின்ற பகுதியாக ஒரு வறண்ட பகுதியாக இருக்கிறது. அந்தத் தொகுதிக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று அதிகாரிகளைத் தேட வேண்டுமானால், இராமநாதபுரம் போக வேண்டும்; பரமக்குடி போக வேண்டும்; அருப்புக்கோட்டை போக வேண்டும்; கமுதி போக வேண்டும். இப்படி பல ஊர்களுக்கு நான் அலைய வேண்டியிருக்கிறது. ஆகவே தயவுசெய்து எங்களுடைய கடலாடி பகுதியை ஒரு தனிக் கோட்டமாக, தனி Division ஆக உருவாக்கி அனைத்து அலுவலகங்களும் அங்கே வந்து, அங்கேயுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மைகள் செய்வதற்கு இந்த அரசு உதவ வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

இராமேஸ்வரத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் உருவாக்க இருப்பதாக இங்கே அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய கடலாடி தொகுதியில் மூக்கையூர், வாலிநோக்கம், நொச்சிமாநகர் போன்ற மூன்று இடங்களிலுள்ள அத்தனை பேரும் மீன் பிடிக்கக்கூடியவர்கள். அவர்கள் தங்களுக்கு Jetty கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அலை அடிக்காத அளவுக்கு தடுப்புச்சுவர் ஒன்று கட்டிக்கொடுப்பீர்களானால், நாங்கள் ஆண்டு முழுவதும் இங்கே மீன் பிடித்துக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். அங்கே கிடைக்கின்ற மீன்போல உலகத்திலே வேறு எங்கேயும் கிடைக்காத அளவிற்கு நல்ல மீன்கள் கிடைக்கின்றன. அங்கே படகுகளை நிறுத்தி வைக்க முடியாத ஒரே காரணத்தினால் இராமேஸ்வரம் சென்று இலங்கையர்களால் நாங்கள் சுட்டுக் கொல்லப்படுகிறோம். ஆகவே, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக்கொடுங்கள் என்று என்னிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை இந்த அரசிடம் நான் வைக்க விரும்புகிறேன்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் உள்ள ஏர்வாடி பகுதியைப் பற்றி சென்ற சட்டமன்றத்தில் நான் விரிவாகப் பேசியும்கூட அவர்கள் காதுகொடுத்து கேட்காத காரணத்தால் இப்போது 28 உயிர்கள் பாதிப்புக்கு உள்ளாகிவிட்டன. இருந்தாலும் நம்முடைய அரசு துரித நடவடிக்கை எடுத்து மீதமுள்ள 500-க்கும் மேற்பட்ட மனநலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நல்ல வாழ்வைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், நேற்று நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் இராமநாதபுரத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்று ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதோடு ஏர்வாடியிலேயும் அதனுடைய கிளை ஒன்று இருந்தாக வேண்டும். காரணம். ஏர்வாடி என்பது இஸ்லாமிய மக்களுடைய புனிதத்தலமாக, ஒரு தர்கா இருக்கின்ற இடம். என்னதான் நாம் தடுத்தாலும்கூட, மக்கள் அங்கே பாதிக்கப்பட்டவர்களைக் கொண்டு வந்து விடாமல் இருக்க மாட்டார்கள். ஆகவே அவர்களெல்லாம் உண்மையிலேயே மனநலம் பாதிக்கப்பட்டவர்களா என்பதை அறிந்து செயல்படுவதற்கு அரசு மனநல மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சாதாரண சோப்புக்கு வரி, கடலைக்கு வரி, பிஸ்கெட்டுக்கு வரி என்றெல்லாம் இங்கே பேசினார்கள். இந்த வரிகளெல்லாம் போட்டது என்பது மக்கள் மத்தியில் நம்முடைய அரசுக்கு ஒரு கெட்ட பெயரை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் கிடையாது. ஆனால் அதே நேரத்தில், சமச்சீர் வரியைக் கொடுக்காவிட்டால், மத்திய அரசு நமக்கு உதவி செய்யாது. ஆகவே, இந்த வரிகளைப் போட்டுத்தான் ஆக வேண்டும் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசோடு போராடியாவது இதுபோன்ற சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற பொருட்களுக்கு வரியை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த நுழைவு வரி என்பது ரொம்ப ஆபத்தானது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1983 ஆம் ஆண்டே இந்த நுழைவு வரி வந்தது. வியாபாரிகளெல்லாம் மிகப்பெரிய போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் நடத்தி, அதன்பிறகு அன்றைய அகில இந்தியச் செயலாளராக இருந்த நம்முடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் இங்கே ஒரு மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்களிடம் வியாபாரிகளெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். அவர்கள் உடனடியாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து, இது மக்கள் விரோத

வரியாகத் தெரிகிறது. ஏன் இதை நீங்கள் ரத்து செய்யக்கூடாது என்று கேட்டதன்மூலம், அந்த வரியை அன்று ரத்து செய்த வரலாறு உண்டு. அதைக்கூட வியாபாரிகள் மே 5 என்று ஆண்டுதோறும் விழாவாகக் கொண்டாடி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நுழைவு வரி வியாபாரிகளை மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாக்கும். ஆகவே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வணிகர்களை எல்லாம் அழைத்துப் பேசி இதற்கு ஒரு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

கரும்புக்கு 1000 ரூபாய் கொடுங்கள் என்று நாங்கள் ஆண்டு முழுவதும் கேட்டுக்கொண்டிருந்த அவை இந்த அவை. இந்த பட்ஜெட்டில் 1000 ரூபாய் பற்றி இல்லையே என்பது எங்களுக்கெல்லாம் மிக்க வருத்தம். 1000 ரூபாய் கொடுக்க முடியுமா, முடியாதா என்பதுபற்றி நான் இங்கே விவாதிக்க விரும்பவில்லை. 1000 ரூபாய் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஏனென்று சொன்னால் அந்த கரும்பு விவசாயிகள் படுகின்ற துன்பங்கள், துயரங்கள் என்பது ஒரு அளவு கடந்த சூழ்நிலைக்குப் போய்விட்டது. ஆகவே, கரும்புக்கு 1000 ரூபாய் கொடுப்பதற்கு நீங்கள் தயங்கக் கூடாது. அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இன்னும் கொஞ்சம்தான், முடித்துவிடுகிறேன்.

கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் நான் இங்கே ஒரு கோரிக்கை வைத்தேன். கரும்புச் சாற்றிலிருந்து எத்தினால் என்கின்ற ஓர் எரிபொருள் தயார் செய்து, அதை பெட்ரோலோடு கலந்துகொடுக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்தேன். அதன்மூலம் விவசாயிகளுக்கும் நன்மை ஏற்படும். அதே நேரத்தில் பெட்ரோலுக்குப் பதிலாக இந்த எத்தினாலையும் பயன்படுத்தலாம். இது உலகத்தில் அமெரிக்காவில் நடந்துகொண்டிருக்கிறது. மெக்சிகோவில் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசும் இந்த எத்தினால் தயாரிக்கின்ற தொழிற்சாலையைத் தொடங்குவதன் மூலம், கரும்பு விவசாயிகளுக்கும் நன்மை ஏற்படும். அவர்களுடைய கரும்புக்கு நல்ல விலை கொடுக்கவும் முடியும். இதுபற்றி, விரிவாக ஏற்கெனவே நான் சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். மேலும், இதுபற்றி நம்முடைய நிதியமைச்சர் அவர்களைத் தனியாகப் பார்த்து விளக்கிப் பேசவும் தயாராக இருக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரிகையாளர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய நல்ல செய்திகளை அறிவித்திருக்கிறீர்கள். பத்திரிகைத் துறையில் வேலை பார்க்கின்ற மற்ற ஊழியர்களுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொப்பரைக்கு வரி போடப்பட்டிருப்பது. ஏற்கெனவே கொப்பரை விலை குறைந்து போய் இருக்கிறது. இப்போது அதற்கு வரியை வேறு போட்டால் என்னாவது? ஆகவே எப்படி தேயிலைக்கு அரசு பொறுப்பு ஏற்றிருக்கிறதோ, அதேபோல கொப்பரைக்கும் அரசு பொறுப்பு ஏற்று, அதன் விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று, நம்முடைய கலைஞர் கருணாநிதி அவர்களை இந்த அரசு ஓர் ஊழல் குற்றச்சாட்டுக்காக கைது செய்தது. அது இன்று வழக்கில் இருப்பதால் அதுபற்றி உள்ளே போக நான் விரும்பவில்லை.

ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் அசுர வெற்றியை, அதாவது ராட்சச வேகத்தில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. 182 இடங்களுக்கு மேல் பெற்றது. காங்கிரஸ் படு தோல்வி அடைந்தது. காங்கிரசைப் பற்றியும், நம்முடைய தலைவர் காமராஜரைப் பற்றியும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் மிக இழிவாக, மிகக் கேவலமான வார்த்தைகளில் எல்லாம் பேசி, எழுதி, போஸ்டர் அடித்துக்கொண்டிருந்த நேரம் அது. அப்போது நவசக்தி என்ற பத்திரிகையை, நம்முடைய தலைவர் காமராஜர் அவர்களுடைய உண்மைத் தொண்டர் தனுஷ்கோடி நாடார் என்பவர் நடத்திக்கொண்டிருந்தார். அந்தப் பத்திரிகையில் ஒரு கட்டுரை வந்தது. இது, தி.மு.க., கருணாநிதியினுடைய வெற்றி என்று சொல்ல முடியாது. இது எம்.ஜி.ஆருடைய வெற்றி. அன்னை இந்திராகாந்தியினுடைய வெற்றி என்று போட்டு, அரசாங்கத்தை மிகக் கடுமையாகச் சாடி ஒரு கட்டுரை வந்தது. (குறுக்கீடு) நாகரீகமாகத்தான் வந்தது. ஆனால், இது கலைஞருக்குப் பொறுக்கவில்லை. உடனே அந்த பத்திரிகையில் எழுதியவரையும், பத்திரிகை ஆசிரியரையும் பிடித்து உள்ளே போடு என்று உத்தரவு போட்டார். 11 மணிக்கு தனுஷ்கோடி நாடாரை கைது செய்ய வருகிறார்கள். தனுஷ்கோடி நாடார் யார் என்பதை நான் உங்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தனுஷ்கோடி நாடார் விருதுநகரில் நம்முடைய அருமைத் தலைவர் காமராஜருக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட ஒரு தியாகி. அவரோடு படித்தவர், அவரோடு அரசியலிலே இருந்தவர், அவரோடு சிறைக்குச் சென்றவர், அவர் மாதிரியே திருமணம் செய்துகொள்ளாமலே

வாழ்ந்தவர், அவருக்கு எல்லாமே காமராஜர்தான். அவரைப்பிடித்து உள்ளே போடப்போகும்போது, அவர் தன்னுடைய குடும்பத்திலே இருந்தவரிடம் என்ன சொன்னார் என்றால், இதை தயவுசெய்து காமராஜரிடம் சொல்லிவிடாதீர்கள், அவர் தூங்கமாட்டார், காலையிலே இந்தச் செய்தியைத் தெரிந்துகொள்ளட்டும் என்று சொல்லிவிட்டுச் சிறைக்குப் போய்விட்டார். காலையிலே இந்தச் செய்தி காமராஜருக்குப் போகிறது. தனுஷ்கோடி நாடாரை இரவு அரஸ்ட் பண்ணிவிட்டார்கள். பத்திரிகையிலே ஏதோ எழுதாம விட்டுவிட்டார்கள். அவர் பதறிப் போய்விட்டார். ஐயோ இந்த 75 வயதிலே தியாகி அவரால் ஜெயிலிலே இருக்க முடியாது. உடனே ஜாமீனில் எடுக்க வேண்டும் என்று சொல்லி, தலைவர் காமராஜரே வரதாச்சாரியார் என்ற வழக்கறிஞரிடம் நேரில் சென்று உடனே ஜாமீனில் எடுக்க வேண்டும் என்று கெஞ்சினார். ஆனால் அங்கே போட்ட செக்ஷன் பயங்கரமான செக்ஷன். தனுஷ்கோடி நாடார் 22 நாள் சிறையில் இருந்தார். இதை இந்த நேரத்தில் இதோடு முடித்துக்கொண்டு "வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி இறுதியாக நம்முடைய நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் இந்த ஆண்டு சமீபத்தில் நம்மை விட்டு பிரிந்துவிட்டார். அவருக்கு நல்ல நினைவுச் சின்னம் எழுப்பவேண்டும் என்று கேட்டதோடு,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்று சொல்லி, நீங்கள் இறையோனாக வாழ வேண்டும் என்று வாழ்த்தி உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*பிற்பகல் 12-10*

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஈ) மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு: "27-8-2001 ஆம் நாள் முதல் 1-9-2001 முடிய எடுத்துக்கொள்ளப்பெறும் மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் இன்று 20-8-2001 பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு

அளிக்கப்பெறவேண்டும் என்று ஏற்கெனவே செய்தித்தாள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக அம்மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் நாளை (21-8-2001) பிற்பகல் 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்திற்கு அளிக்கப்பெற வேண்டும் என உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஏனைய மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் 23-8-2001 ஆம் நாள் பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அளிக்கப்பெற வேண்டும்."

## 3. திருத்திய வரவு செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் என். ரெங்கநாதன் பொது விவாதத்தில் பேசுவார்.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதியின் கடைமடைப் பகுதியான பூம்புகார் பகுதியிலே சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த நான் வணங்கும் தெய்வம், தமிழகத்தின் விடிவெள்ளி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பூம்புகார் தொகுதி மக்களின் சார்பாக முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்க இருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே கூறிய அனைத்து சிறப்பு அம்சங்களையும் கொண்டது இந்த 2001-2002 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையாகும். இந்த அரசு விவசாயிகளுடைய அரசு என்பதை நிரூபிக்கின்ற வகையிலே விவசாயத்தைப் பொறுத்தவரை 310 கோடியே 50 இலட்சம் ரூபாய்க்கான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து இருக்கிறது. அதனைத் தொடர்ந்து, தஞ்சை, திருச்சி, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களின் முக்கிய நெல்லான டி.கே.எம்.9 என்ற நெல்லை யாரும் கொள்முதல் செய்யாத நேரத்திலே அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச் சென்று இந்த நெல்லை விற்பனை செய்யலாம் என்ற அறிவிப்பை அளித்ததன் மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த விவசாயிகளுக்கு பல நன்மைகள்

செய்கிறார்கள் என்பது எடுத்துக்காட்டாக விளங்குகிறது. மீண்டும் 6விவசாயத் துறை மூலமாக சொட்டு நீர்ப் பாசனம், கசிவு நீர்க் குட்டைகள், பெட் டேம் என்ற தடுப்பு அணைகள் மூலம் தண்ணீர் சேமிக்கும் திட்டத்தை அமைத்துத் தரவும் இந்த அரசு உறுதி கொண்டுள்ளது, விவசாயப் பெருங்குடி மக்களிடையே மிகவும் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

அதைப்போல தோட்டக்கலைத் துறையின் மூலமாக உணவுப் பொருள் பதனிடும் தொழிலையும் மேம்படுத்த வேளாண்-வணிகத் துறை என்ற ஒரு புதிய துறையை ஏற்படுத்திய இந்த அரசுக்கு பூம்புகார் தொகுதி மக்கள் சார்பாகவும், தஞ்சை, திருச்சி விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாகவும் நன்றி கலந்த வணக்கத்தை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், விவசாயத் துறையின் மூலமாக 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை மேம்பாடு செய்து பண்ணைத் தோட்டங்கள் அமைப்பதற்காக ஆணையிட்டு 2001-2002 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே 5 ஆண்டுகளுக்குள் செய்வதாக அறிவித்த தானைத் தலைவி, புரட்சித் தலைவிக்கு எங்கள் தொகுதியின் சார்பாக மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

கால்நடையைப் பொறுத்தவரையில், டென்மார்க் நாட்டின் உதவியோடு கால்நடை வளர்ச்சித் திட்டத்தைச் செயலாக்கம் செய்து ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக அனைத்து ஊராட்சிகளிலும் அதைச் செயல்படுத்தச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிய மீன்பிடித் துறைமுகமாக இராமேஸ்வரத்தை அறிவித்ததற்காகவும், பழையாறு மீன்பிடித் துறைமுகத்திற்கு 10 கோடி ரூபாயை விஸ்தரிப்பதற்காக வழங்கியதற்காகவும் புரட்சித் தலைவிக்கு எங்கள் பகுதியின் சார்பாக மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பிற்பகல் 12-15*

மீனவர்களைப் பொறுத்தவரையிலே இந்த அரசு மீனவர்களுடைய நலன் காக்கும் அரசாகும். மீனவர்கள் சேமிப்பு மற்றும் துயர் துடைப்பு நிதியை மாதத்திற்கு ரூ.90 கட்ட வேண்டும் என்றிருந்த நிலையை மாற்றி மாதம் ரூ.45 கட்டினால், ரூ.1080-லிருந்து ரூ.1200 என்று மாற்றி அமைத்துத்

தந்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீனவ சமுதாய மக்களின் சார்பாக மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடல் எல்லைக் கோட்டைக் கடந்து அப்பால் சென்றால், இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டு வந்த நிலையை மாற்றுவதற்காக நான்கு மைல் தொலைவில் வழிகாட்டும் விளக்குகளை அமைத்துத் தந்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இருக்க இடம் இல்லை என்ற நிலையை மாற்ற ரூ.60,000 செலவில் வீடு கட்டிக் கொடுத்ததற்காகவும், காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.100 கோடி செலவிலே 75,250 எக்டேர் நிலத்தைச் சீரமைத்து காடு வளர்ப்புத் திட்டத்தை மேம்படுத்தியதற்காகவும் தானைத் தலைவிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை, எம்.ஜி.ஆர். அறிவு நகர் என்று மாற்றியதும், காவிரி வடிநில மாவட்டங்களில் 204 பாலங்களை NABARD உதவி மூலம் ரூ.200 கோடி முதலீட்டிலே புதுப்பிக்கும் திட்டமும், எங்கள் பகுதி மக்களாலே, தமிழக மக்களாலே பாராட்டப்படக்கூடிய திட்டங்களாகும்.

மாணவர்களுக்கு இலவசப் பேருந்து அட்டைகளை வழங்க ரூ.150 கோடி உதவித் தொகை வழங்கியதற்காகவும், விடுதியில் படிக்கும் மாணவர்களுக்கான தொகையை ரூ.225-லிருந்து ரூ.300 ஆக மாற்றியமைத்ததற்காகவும் தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழக மாணவர்களின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கிராமப்புறங்களில் மருத்துவ வசதியை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை அமைப்பதற்கு ஆணையிட்ட தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி. வீட்டுமனைப் பட்டா வாங்கியவர்களுக்கு, அடிப்படை வசதிகளைச் செய்யும் நோக்கத்தோடு சாலை வசதி, மின் வசதி, குடிநீர் வசதி மேம்படுத்தப்படும் என்று அறிவித்தமைக்காகவும் மகளிர் சுய உதவிக் குழு மூலம் மகளிரின் பொருளாதாரத் திட்டத்தை உயர்த்தியும் பல்வேறு கடன்களை வழங்குவதற்கும் இந்த 2001-2002 ஆம் ஆண்டு பட்ஜெட்டிலே அறிவித்தமைக்காகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மாணவர்கள் கல்லூரியில் இலவசமாக படிக்கும் திட்டமும், ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த

பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கும் மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டமும் இந்த நாட்டு மக்களாலே வரவேற்கத்தக்க திட்டங்களாகும்.

பத்திரிகையாளர்கள் இறந்தால் ரூ.50,000 உதவித் தொகை என்றிருந்த நிலையை மாற்றி 2 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கியதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு வீட்டு வசதி அமைத்துத் தருவதற்காக இந்த பட்ஜெட்டிலே அறிவித்த தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பள்ளி மாணவர்கள் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக, குட்கா, பான் மசாலா போன்ற சுவை பொருள்களுக்குத் தடை விதித்ததற்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூ.77 இலட்சம் என்றிருந்ததை மாற்றி ரூ.82 இலட்சமாக உயர்த்தித் தந்த தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

நலிந்த பிரிவினர்களுக்கு நல்ல பல திட்டடங்களை அறிவிக்கின்ற இந்த பட்ஜெட் அனைத்துத் தரப்பு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தயார் செய்யப்பட்ட பட்ஜெட் ஆகும். கஜானாவைக் காலி செய்துவிட்டுச் சென்ற நிலையிலே, இப்படிப்பட்ட நிலை இருந்தாலும்கூட ஏழையெளிய பாட்டாளி வர்க்கத்தினருக்கு நல்ல பல திட்டங்களைச் செய்ய வேண்டுமென்ற சீரிய நோக்கத்தின் அடிப்படையில் இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரிப் பொழிந்தது போல உள்ளது என்பதைக் கூறி எனது தொகுதியிலுள்ள சில குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பூம்புகார் தொகுதியின் அத்தியாவசியத் தேவைகளான வாணகிரி-மருதம்பள்ளம்-சேவகனாற்றுப் பாலத்தை உடன் கட்டித் தர வேண்டுமாயும், நண்டலாற்றின் குறுக்கே காருகுடி-படுக்கை கிராமத்திற்கு இடையே விளாகம் ஊராட்சியில் பாலம் கட்டித் தர வேண்டுமாயும், சேமங்கல் ஊராட்சியில் அய்யாவையனார் ஆற்றின் குறுக்கே புதுப்பேட்டை பாலத்தைக் கட்டித் தரவேண்டுமாயும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழகத்தில் உள்ள பெரிய ஊராட்சி ஒன்றியங்களிலே பூம்புகார் தொகுதி செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம் 58 ஊராட்சிகளைக் கொண்டதாகும். அந்த ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, செம்பனார்கோவில் ஒன்றியத்தை ஒரு தலைமையிடமாகவும், தரங்கம்பாடியை ஒரு தலைமையிடமாகவும் கொண்டு பிரித்துத் தரவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

என்னுடைய பூம்புகார் தொகுதியிலே 25 கி.மீ. தொலைவிற்கு மீனவப் பகுதி மக்கள் இருக்கின்றார்கள். 13 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அந்த மீனவ சமுதாய மக்கள் நலம் பெறுகின்ற வகையிலே அவர்களுக்கு குடிநீர் வசதி, சாலை வசதி ஆகியவற்றை மேம்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பூம்புகார் அல்லது தரங்கம்பாடியிலே உடனடியாக மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமாயும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்தி அங்கே குழந்தைகள் விளையாடுவதற்கு விளையாட்டுப் பூங்கா ஒன்றை அமைத்துத் தருமாறும், குடிநீர் வசதி, சாலை வசதி ஆகியவற்றை மேம்படுத்தித் தரவேண்டுமாயும், பூம்புகார் கடற்கரை ஓரங்களிலே மின்விளக்குகள் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமாயும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய பகுதி தரங்கம்பாடி சுற்றுலாத் தலத்தில் டேனிஷ் கோட்டையைப் புதுப்பித்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும், அதன் அருகில் பூங்கா மற்றும் கடற்கரை சாலைக்கு மின்வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமாயும் கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த

நிதிநிலை அறிக்கையில் மக்கள் நல மேம்பாட்டிற்குரிய திட்டங்கள் பற்றி நிறைய அறிவிப்புகள் செய்யப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த அவையிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண்கள், இளைஞர்கள், மாணவர்களுக்கு பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று. குறிப்பாக, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசுகிறபோது, பல்வேறு பிரச்சினைகள் பற்றி எடுத்துவைக்கிறபோது, விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் பேசினேன். சென்ற முறையும் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது பல்வேறு முறை இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியிலே விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனைப்பற்றி ஏறெடுத்துப் பார்க்கவும் மறுத்தார்கள். பல்வேறு விவாதங்கள் மூலமாக எடுத்துச் சொல்லியும், அதற்குத் தீர்வுகாண மறுக்கப்பட்டது. அதற்குச் சொன்ன காரணங்கள் எல்லாம், NABARD மறுக்கிறது என்ற செய்தியைச் சொன்னார்கள். அப்படிச் சொன்ன செய்தி தவறு என்பது இந்தச் சட்டமன்றத்திலேயே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இன்றையதினம் நாங்கள் கோரிக்கை வைத்தபோது, கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்து, விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்தபோது, தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 310 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருப்பது பாராட்டத்தக்கதாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக, விவசாயிகள் பெற்றிருக்கிற இந்தக் கடன் சுமையைக் குறைப்பதற்குரிய முயற்சியை எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இணைந்த முறையிலே ஒரு வேண்டுகோளாக வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்குரிய காலக்கெடு நிர்ணயித்திருப்பது, விவசாயிகளாலே செலுத்த இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இருக்கிற வட்டி, அபராத வட்டியைச் செலுத்துவதற்கு 2002-க்கு மேல் கால அவகாசம் கொடுத்து அடுத்த ஆண்டு வரையிலும் செலுத்துவதற்கான முயற்சிகளை எடுத்து நமது அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதித் துறை அமைச்சர் அவர்களும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பலன் விவசாயிகளைச் சென்றடையும் என்கிற காரணத்தினாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய கால அவகாசத்தை இந்த அவையிலேயே அறிவிக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, வேளாண்மை, பாசன இடுபொருட்கள் இதையெல்லாம் கவனத்திலேகொண்டு புதிய வேளாண்மைத் திட்டத்தை உருவாக்குவதற்கான முயற்சி இதிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்கள், பல புதிய செய்திகள், நிரம்பச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே, சிறு விவசாயி என்ற முறையிலேயும், அதற்காகக் குரல் கொடுக்கின்ற உறுப்பினர் என்ற முறையிலேயும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எல்லா வகையிலும் செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

அதோடு, நெல் கொள்முதலுக்கான ஊக்கத் தொகையாக ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது, வரவேற்கக்கூடியது. அதிலே ஒரு செய்தி என்னவென்றால், 50 கோடி என்பது எந்த அளவில் என்பது விளங்காமல் இருக்கிறது. ஆகவே, இந்த 50 கோடி என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், கொள்முதல் செய்யப்படுகிற நெல்லுக்கு, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.100/-க்கு குறையாமல் ஊக்கத் தொகையை அறிவிப்பதற்கான முயற்சியை அவசியம் எடுக்கவேண்டும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி அறிவிப்பதன் மூலமாகத்தான் விவசாயிகளைப் பாதுகாக்க முடியும். ஆகவே, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.100/- ஊக்கத் தொகை வழங்குவதற்கான அறிவிப்பைச் செய்து, அதற்குத் தேவையான நிதியையும் ஒதுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பல்வேறு செய்திகள் இதில் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி. மாண்புமிகு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிலே திருப்தி அடைந்துவிட்டார்கள். எனக்கு அதிலே வருத்தமாக இருக்கிறது. இங்கேயிருக்கிற அவை உறுப்பினர்களுக்குக் கண்டிப்பாகத் திருப்தி ஏற்படாது. அது ஆசையின் காரணத்தினால் அல்ல. ஆகவே இந்த 82 இலட்சம் ரூபாய் என்பதை ஒரு கோடி ரூபாயாகக் கண்டிப்பாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவிப்பார்கள் என்று முழு நிறைவோடு நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதை அறிவிப்பு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அனைத்து உறுப்பினர்கள் சார்பிலேயும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

அடுத்து, சிறு தொழில்கள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு விலை முன்னுரிமைக் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அரசாணை எண் 75-ன் மூலமாக ரத்து செய்திருந்தது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி, எங்களுடைய திட்டங்களை எல்லாம் அப்படியே மறுபதிப்பாகச் செய்து இங்கே அறிக்கை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியென்று சொன்னால், இந்த ஆணையை ரத்து செய்துதான் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. மறுபதிப்பாக இங்கே அறிவிக்கப்படவில்லை. ஆகவே, இந்த சிறு, குறு தொழில்களுக்கு எதிராகப் போடப்பட்ட சட்டத்தை மாற்றி அந்த ஆணை ரத்து செய்யப்பட்டு உரிய வடிவிலே சட்டம் தயாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒன்று. ஆகவே, இந்த சிறு தொழில்களை எல்லாம் வளர்ச்சியடையச் செய்வதற்கான முயற்சியாக இது இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்டச் சாலைகள் மேம்பாட்டுக்காக ஒரு பெரிய திட்டம் உலக வங்கி உதவியோடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1900 கோடி ரூபாய்க்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக, குறிப்பாக காவிரி வடிநிலப் பகுதியிலேயிருக்கிற பழமையான பாலங்கள், சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலே அமைக்கப்பட்ட பாலங்கள் எல்லாம் செப்பனிடப்படும், 204 பாலங்கள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது என்னுடைய தொகுதியிலே ஏராளமான பாலங்கள் இருக்கின்றன. நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் இதை கவனத்திலே கொள்ள வேண்டும். குறிப்பாக, என்னுடைய தொகுதியையும், திருத்துறைப்பூண்டி தொகுதியையும் இணைக்கக்கூடிய கோரையாறு பாலம் இப்போது இடிந்து விழுகிற அபாயத்திலே இருக்கிறது. நாகூர் போல அல்லது திருவையாறைப் போல ஆகிவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது. அதைப் போலவே மண்ணத்துக்கொண்டான்-செந்தாமரைக்கண், இணைப்பதற்கான ஒரு புதிய பாலம் வேண்டுமென்ற கோரிக்கை நீண்டநாட்களாக வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் இணைத்துக் கட்டித் தர வேண்டும். அதேபோல மன்னார்குடி பகுதியிலே பாமணி ஆற்றிலே புதிய பாலம் கட்டித்தர வேண்டும். இவற்றையெல்லாம் நான் தனியாக இப்போது பேசுவதற்குரிய வாய்ப்பாக எடுக்க வேண்டாம், என்னுடைய நேரம் குறையும் என்ற காரணத்தினாலே அதை எல்லாம்

கவனத்திலே வைத்துக்கொண்டு நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, கல்வியைப் பொறுத்தவரையிலும் உடனடியாக அறிவிக்கப்பட்டது பாராட்டுக்குரிய ஒன்று. 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் அறிவித்திருப்பது மிகப்பெரும் பாராட்டுக்குரிய ஒன்று. நான் கடந்த முறை எல்லாம் சட்டமன்றத்திலே கேட்டுப் போராடி ஒன்றிரண்டு பெற்றிருக்கிறேன் என்று சொன்னாலும்கூட இந்த முறை பெரிய அளவிலே நல்ல எண்ணிக்கையை வழங்கி, கல்விக்குரிய முக்கியத்துவத்தை அளித்திருப்பது பாராட்டுக்குரியது. மேலும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கல்விக் கொள்கையிலே குறிப்பிட்டுச் சொல்கிறபோது, ஐந்தாவது வகுப்பு வரையிலான தாய்மொழி வழிக் கல்வி பற்றி இதிலே குறிப்பிடப்படாமலிருக்கிறது. ஆகவே இதை கவனத்தில் கொண்டு தாய்மொழி வழிக் கல்விக்குரிய முக்கியத்துவம் அளித்து ஐந்தாம் வகுப்பு வரையிலே தாய்மொழி வழிக் கல்வியை உறுதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கான வயது வரம்பு இப்போது பிரச்சினையாக மாறியிருக்கிறது. 35 வயது என்று நிர்ணயம் செய்து அதற்குரிய ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எடுத்தது. ஆனால் இப்போது நீங்கள் பொறுப்பேற்றிருக்கிற சமயத்திலே இந்தச் சட்டம் வருகிறது. இந்தச் சட்டம் வருகிறபோது இந்த ஆட்சி அதைச் செய்துவிட்டதாக மக்கள் கருதுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதற்கான சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே அதை ரத்து செய்து, வயது வரம்பை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது 35 வயதுக்கு மேல் வந்துவிட்டால் பட்டதாரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு பெற முடியாது என்ற ஒரு சட்டம் இப்போது வந்திருப்பதாக, செயல்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார். இதுபற்றி பத்திரிகையிலேயும் பல செய்திகள் வந்திருக்கின்றன. இதைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதன் காரணமாக அவற்றைப் பிறகு விளக்கமாக அறிவிக்க இருக்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது,

இந்த 35 வயது என்பது யாரும் இப்போது கொண்டு வந்த சட்டம் கிடையாது. இது முன்பேயிருக்கிற சட்டம்தான். ஆனால் நடைமுறைப்படுத்துவதிலே சில தவறுகள் இருப்பதன் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இது இன்றைய அரசு கொண்டுவந்த ஒரு சட்டம் கிடையாது. பல ஆண்டுகளாக இருக்கும் ஒரு சட்டம். ஆகவே அந்தச் சட்டத்தை ஏதோ இப்போது இருக்கிற அரசு கொண்டு வந்தது என்ற தவறான செய்தியை மக்களிடையே பரப்பிக்கொண்டிருப்பது உண்மைதான். அது தவறு என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நன்றி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது இந்தச் சட்டம் பல ஆண்டுகளாக இருப்பதாகச் சொன்னார்கள். முதலிலே இருந்தது, பிறகு இடையிலே தளர்த்தப்பட்டு, சென்ற ஆண்டு ஆறாவது மாதத்திலேயிருந்து ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டு, 35 வயதுக்கு மேற்பட்ட முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களை, பட்டதாரி ஆசிரியர்களை பணிக்கு எடுக்க முடியாது.

*பிற்பகல் 12-30*

அதிலே military people, ஆதிதிராவிடர்கள், உடல் ஊனமுற்றவர்களுக்கு மட்டும் சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு ஆறாவது மாதத்திலிருந்துதான் இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து மீண்டும் நீங்கள் அதைத் தளர்த்த வேண்டும் என்கின்ற கோரிக்கையை வைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டது போல முன்பு எந்தத் தளர்ச்சியும் கிடையாது. தளர்வுகள் செயல்பட்டது கிடையாது. அந்தச் சட்டத்தை மதிக்காமல் சில தவறுகள் நடந்ததாகத்தான் அதிகாரிகள் எனக்கு குறிப்புகள் தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல, சட்டத் தளர்வு ஏற்பட்டிருந்தால் அதை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Deputy Speaker Sir, அதாவது அமைச்சர் அவர்கள் அரசினுடைய நிலையில் உள்ள ஒரு பகுதியை விளக்கினார். ஆனால், 17 வருடம், 18 வருடம், 20 வருடங்களாகப் பட்டதாரிகள் Employment Exchange-ல் பெயர் பதிவு செய்தும் அவர்களுக்கு

வேலைவாய்ப்பு வரவில்லை என்ற காரணத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு கொடுப்பது பற்றி அரசு ஏதாவது பரிசீலிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** நான் தெளிவாக மாண்புமிகு உறுப்பினருக்குச் சொன்னதைப்போல உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். இதனுடைய நடைமுறை சிக்கல்களைப் பற்றியும் அதை எவ்வாறு செயல்முறைப்படுத்துவது என்பது பற்றியும் இந்த அரசு ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,......

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீங்கள் பேசுங்கள். திரு. அப்பாவு, நீங்கள் உங்களுடைய பேசும் உரிமை வரும்போது பேசலாம்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக ஒரு விளக்கம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதன்முதலில் மாண்புமிகு கல்வி அமைச்சருடைய மானியக் கோரிக்கைதான் வருகிறது. அப்போது நீங்கள் பேசிக்கொள்ளலாம். மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். மேலும், அதன்மீது உரிய முறையிலே தகுந்த ஆதாரங்களோடு விளக்கம் அளித்து அந்த வயது வரம்பை நீக்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, சத்துணவு அங்கன்வாடிகளில் பணிபுரியக்கூடிய பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய வேலையை உத்தரவாதம் செய்வதற்கான முயற்சி எடுக்க வேண்டும். 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர்கள் எல்லாம் அவர்களில் இருக்கிறார்கள். அவர்களையும் பணியமர்த்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையிலே இருப்பவர்களுக்கு ஊக்கத் தொகை அறிவிக்கப்பட்டிருப்பது மிகப் பாராட்டுக்குரிய ஒன்று. ஆகவே இதன் மூலமாகத் திறமையானவர்களைக் கண்டறிந்து வளர்ப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

அடுத்து மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிற குடிநீர்ப் பிரச்சினை. அதைப்பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம், இராமநாதபுரம் குடிநீர்த் திட்டம் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல மிக முக்கிய பிரச்சினையான அத்திக்கடவு-அவினாசி குடிநீர்த் திட்டத்தைப் பற்றி இதிலே சொல்லப்படவில்லை என்பது அந்தப் பகுதி மக்களுக்கு வேதனையாக இருக்கிறது. குறிப்பாக, கோவை, ஈரோடு மாவட்ட மக்களுக்கு உரிய மிகத் தேவையான பிரச்சினையாக இருக்கிறது. 10 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மேற்பட்ட பகுதிகளுடைய மக்கள் பயனடைகிற திட்டம் இது. ஆகவே, அதற்குத் தீர்வு காணுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். குறிப்பாக, தேர்தல் சமயத்திலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரச்சாரம் செய்கிறபோது அதற்குரிய வாக்குறுதியையும் அவினாசியிலே அறிவித்து இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நினைவூட்டுவதோடு அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அடுத்து வீராணம் திட்டம் மூலம் சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக பரிசீலனைக்குரிய பகுதியாக பள்ளிப்பாளையம் பகுதியைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. வீராணம் திட்டம் நிறைவேற்றுவதனாலே விவசாயப் பாசனம் பெறுகிற பகுதிகள் பாதிக்கும் என்ற ஒரு கருத்து இருக்கிறது. இதை நான் எதிர்மறையான கருத்தாக சொல்வதற்காகக் கூறவில்லை. இதைப்பற்றி மேலும் கொஞ்சம் ஆழமாக ஆராய்ச்சி செய்வது நல்லது என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, பள்ளிப்பாளையம் திட்டம் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக சென்னைக் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

அடுத்து மருத்துவம். மக்கள் நல்வாழ்வுத் துறையிலே பல்வேறு நல்ல திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை

உயர்த்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையை உயர்த்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியிலே அப்படி பல்வேறு கோரிக்கைகளை நான் கடந்த 5 ஆண்டுகளாக வைத்தேன். குறிப்பாக, திருமக்கோட்டை, பரவாக்கோட்டை, வடபாதிமங்கலம் போன்ற பகுதியிலேயும், எனது தொகுதியும், திருத்துறைப்பூண்டித் தொகுதியும் இணைந்து வருகிற தலைமை இடமாக இருக்கும் கோட்டூருக்கும் இப்படிப்பட்ட மருத்துவமனை வழங்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். செவிலியர் கல்லூரி ஏற்படுத்துவதற்கான திட்டம் வரவேற்கக்கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

*பிற்பகல் 12-35*

**திரு. வை. சிவபுண்ணியம்:** கொஞ்சம் முக்கிய விஷயங்கள் இருக்கின்றன. சொல்லிவிடுகிறேன். மன்னார்குடி அரசு வட்டத் தலைமை மருத்துவமனையை அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்வையிடுவதாக அறிவித்திருக்கிறார்கள். பார்வையிட்டு உரிய முறையிலே புதிய கட்டடங்களையும் கட்டுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, பத்திரிகையாளர் நலன் பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக்கூடிய ஒன்று. பொதுவாக, இங்கே நமது சட்டசபையிலே நடந்து இருக்கின்ற சம்பவங்கள், கருத்துகளைப் பற்றி இப்போது நாம் பேசினோம். நான் அதற்குள்ளே விவாதமாகச் செல்லவில்லையென்று சொன்னால்கூட, மக்களுடைய நலன் கருதி முக்கியப் பிரச்சினைகள்மீது தலையிட்டு உரிய கவனத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக, மக்கள் பிரச்சினைகள்மீது கவனம் இல்லாமல் போய்விடுமோ என்ற வேதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இருக்கிறது. ஆகவே இந்த உணர்வுகளை நான் வெளிப்படுத்துவதற்கான சூழ்நிலையாக இதைக் கருதுகிறேன். அப்படிப்பட்ட பாதிப்புகள் வராதவண்ணம் எல்லாவகையான பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காணுகிற முயற்சியாக இந்த மன்றம் அமைய வேண்டும். சில சங்கடமான நிலைமைகள் ஏற்படுகின்றன. நாகரீகமாக, பண்பாட்டு ரீதியாகச் செயல்பட வேண்டிய ஒரு களமாக இந்த மன்றத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்வதோடு அதற்குரிய எல்லாவகையான வாய்ப்புகளையும் பத்திரிகைத் துறைதான் எடுக்க வேண்டியிருக்கிறது.

அவர்களுக்குப் பல பாதிப்புகள் வந்திருக்கின்றன என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. அதிலே எங்களுக்கு வேறுவிதமான கருத்துகள் கிடையாது. பாதிப்புகள் வருகிறபோது அவர்களுக்குரிய பாதுகாப்புகள் அளிக்கப்படுவதிலே தவறுகள் இருக்குமானால் அதைத் திருத்துவதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும். அதேநேரத்தில் நடுநிலையாகவும் இந்தச் செயல்பாடுகள் வரவேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம் பொதுமக்கள் மத்தியில் தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாகவே தமிழக மக்கள் குழம்பியிருக்கிறார்கள் என்ற ஒரு பொதுவான கருத்து இருக்கிறது. அதையும் கவனத்திலேகொள்ள வேண்டும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, முக்கியமான செய்தியாக மத்திய அரசாங்கத்தால் நமக்கு வழங்கப்படுகிற ராயல்டி தொகை அளிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே ஒரு செய்தியைச் சொன்னேன். எங்களது ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட பகுதிகளில் O.N.G.C. மூலமாக எண்ணெய் எரிவாயு எடுக்கப்படுகிறது. இதன்மூலமாக பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திற்குச் செல்கிறது. அதற்குரிய ராயல்டி தொகை என்னவாயிற்று என்று நான் கேட்கிறபோது அன்றைய முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் அதற்கு ஒரு பொத்தாம்பொதுவான பதிலைத்தான் சொன்னார். அந்த எரிவாயு எங்களுடைய மாவட்டப் பகுதியிலே எடுக்கப்படுகிறது, ஆனால் அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்காக அந்த நிதி பயன்படுத்தப்படாத ஒரு குறை இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்தினுடைய சாலைகளையும், முக்கிய பணிகளையும் நிறைவேற்றித் தருவதற்குரிய வகையில் அந்த ராயல்டி தொகை பயன்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டேன். ஆனால், கிடைக்கவில்லை. ஆனால், இப்போது நிலக்கரிக்கு ராயல்டி கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொல்கிறபோது, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தினுடைய உரிமைகளைப் பற்றி, கடமைகளைப் பற்றி, மனிதநேயத்தைப் பற்றி மட்டும் பேசுகிறபோது. இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சிக்குரிய நிதிப் பங்கை செலுத்துவதற்கு மறுக்கிறது என்று சொல்கிறபோது, இந்த மன்றமே இணைந்து அதை வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்பதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே பல்வேறுவிதமான பாதிப்புகள் நம்முடைய தமிழகத்திற்கு வந்திருப்பதாக செய்தி இருக்கிறது.

அடுத்து பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் இன்று முதல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 2-1/2 இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள், 1300-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகளிலே அந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய உரிமையாளர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அமைச்சர் அழைத்தும் வர மறுக்கிறார்கள் என்பதுதான் வேதனைக்குரிய செய்தி. ஆகவே, இந்தப் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு கண்டு, அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இல்லையென்று சொன்னால், 10(பி) பிரிவின்கீழ் நடவடிக்கை எடுத்து அதைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று அந்தச் சங்கங்களுடைய கூட்டமைப்பு கேட்டிருக்கிறது. அதை நிறைவேற்றச் செய்வதற்கான முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விசைத்தறித் தொழில் பாதிப்பு அடைந்துகொண்டிருக்கிறது. அதைப் பாதுகாப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். மத்திய அரசினுடைய தாராள இறக்குமதிக் கொள்கையினாலே பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, சத்தியம் கமிட்டியினுடைய பரிந்துரையை அரசு அப்படியே ஏற்றுக்கொள்வில்லையென்று சொன்னால்கூட, அமல்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள். அதனால் பெரிய அளவிலே பாதிப்பு ஏற்படுகிறது. மத்திய அரசினுடைய 9.2 சதவீத கலால் வரி விதிப்பு இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழ்நாடு அரசு அதைப் போலவே கோன் நூலுக்கு 4 சதவீதம் வரி போட்டிருக்கிறது. ஆகவே, இந்த வரிகளை நம்முடைய மாநில அரசு விதித்திருக்கிற வரியை இரத்து செய்ய வேண்டும். மத்திய அரசு வரியை இரத்து செய்வதற்கான கோரிக்கையை நாம் இங்கே தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும். அதேபோல், நான்கு மாத கட்டணத்தை விசைத்தறியாளர்கள் டெபாசிட்டாகக் கட்ட வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 12 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முக்கியமான பிரச்சினை Controversial -ஆகப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Controversy இல்லை என்பது இல்லை. இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நிதிநிலை அறிக்கையிலே பேச வேண்டிய விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கிறேன். பல விஷயங்களுக்கு நேரம் கொடுத்துக்கொண்டே இருப்போம், இந்த அவையிலே. இதிலே பேசுவதற்குக் கொஞ்சம் நேரம் கொடுக்கலாம் தவறில்லை. மின் கட்டணங்களை நான்கு மாதத்திற்கு டெபாசிட்டாகக் கட்ட வேண்டுமென்று சொல்கிறபோது விசைத்தறியாளர்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாகிறார்கள். ஆகவே, அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். ஏழு நாட்களில் கட்டவில்லையென்றால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆந்திராவிலே, மகாராஷ்டிராவிலே......

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டதுபோல தி.மு.க. அரசினுடைய நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக இந்த ஆண்டு மின்சார வாரியத்தில் மட்டும் எதிர்நோக்கியுள்ள நஷ்டம் 1938 கோடி ரூபாய். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அந்த டெபாசிட் கட்ட வேண்டும். வருடத்திற்கு ஒருமுறை கட்ட வேண்டிய அவசியம் இல்லை. எனவே, இதை நம்முடைய உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எல்லாம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு எடுத்து வந்தவுடன் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கூடுதல் வைப்பு நிதியை — Additional Current Consumption Deposit—ஐ ஆறு தவணைகளாகக் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளார்கள். எனவே, இதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**திரு. வை. சிவபுண்ணியம்:** நன்றி. அடுத்து விவசாயிகளுடைய மிக முக்கியமான பிரச்சினை. குறுவை சாகுபடியைப் பாதுகாக்க முடியாமல் தண்ணீர் இல்லாமல் குறிப்பாக காவிரி டெல்டா பகுதியில் இருக்கிற விவசாயிகள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நட்ட பயிர்கள் எல்லாம் கருகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தண்ணீர் 15 தினங்களுக்குத்தான் இருக்கும் என்ற அபாய அறிவிப்பு இருக்கிறது. அணையிலே நீர் இல்லை என்பதையும் உணர்ந்துதான் நான் பேசுகிறேன். ஆகவே, உரிய முறையிலே கர்நாடக அரசுடன் பேசி, விரைவாக தண்ணீரைப் பெற்று, விவசாயத்தைப்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையென்று சொன்னால், இந்த ஆண்டு உற்பத்தி பாதிப்பதற்கான ஓர் அபாயச் சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் ஒரு புதுமையான வேலை நடந்துகொண்டிருக்கிறது. மர்மமான முறையிலே திடீர் திடீரென்று தீ விபத்துகள் நடந்துகொண்டிருக்கின்றன. அது எப்படியென்றே புரிந்துகொள்ள முடியாத புதிராக இருக்கிறது. இதை சமூக விரோதிகள் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான வீடுகள் பகலிலே திடீர் திடீரென்று எரிகின்றன. போன் மூலமாக மிரட்டல்கள் வருகின்றன. பல பேர்களைக் கண்டுபிடித்தார்கள் என்று சொல்கிறார்கள். யார்? பெயர் என்ன? அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதெல்லாம் கேள்விக்குறியாக இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில், இப்போது 15, 20 தினங்களாக இரவில் பல ஆயிரக்கணக்கான மக்கள் நூற்றுக்கணக்கான கிராமங்களில் தூங்குவதே கிடையாது. அப்படியொரு மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை உரிய முறையிலே பரிசீலித்து, இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இதை நான் சொல்கிறபோது, இதையொரு சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக்கி, அரசியலாக்குவதற்கான முயற்சிகளை வேறு சிலபேர் எடுப்பார்கள். நான் அந்த இடத்திற்குள் போக விரும்பவில்லை. இதிலேயிருக்கிற வழிகளின் மூலமாக இதைத் தடுப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. இளவழகன்.

***திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெருப்பாற்றிலே நீந்தி, பல்வேறு சோதனைகளைக் கடந்து, கழகத்தையும், கழகத்தினுடைய கோடானுகோடி தொண்டர்களையும் கட்டிக்காத்து, மீண்டும் தமிழகத்தில் பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சியை அமைத்துக் கொடுத்த இந்தியத் திருநாட்டில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்போன்ற அடிமட்டத் தொண்டர்களின் சார்பாக நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். கழகத்தினுடைய அடிமட்டத் தொண்டனாக செயலாற்றிக் கொண்டிருந்த என்னை

கழகத்தின் ஒன்றியச் செயலாளராக, மாவட்டக் கழகத்தின் செயலாளராக உயர்வு தந்து, இன்று சட்டமன்ற உறுப்பினராக்கி, சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக் கழகத்தின் உயர் பதவியைத் தந்த இதய தெய்வம் அம்மா அவர்கள் அமர்ந்திருக்கும் இந்த திருச்சபையிலே பேசக்கூடிய தகுதியை, நிலையை, உருவாக்கித் தந்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருப்பாதங்களில் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக, என் நன்றியை நான் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடந்த 1996-97 ஆம் ஆண்டு பதவி விலகியபோது ரூபாய் 874 கோடி ரொக்க இருப்பை விட்டுச்சென்றது. கடந்த 5 ஆண்டு காலத்திற்குப் பிறகு தற்போது ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசை உற்று நோக்குகையிலே, முந்தைய மக்கள் விரோத அரசு, இருப்பிலே இருந்த தொகையையெல்லாம் செலவு செய்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு 700 கோடி ரூபாய் தொகையை ஒப்பந்தக்காரர்களுக்கும், பொருள் வழங்குபவர்களுக்கும் மற்றும் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்தும் ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்கவேண்டிய பண்ச்சுமையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மீது விதித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் புதுமையான, புரட்சிகரமான, பல்வேறு நலத் திட்டங்களை, இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே வழங்கியிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த நிதிநிலை அறிக்கைக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல, தோட்டக் கலையையும், உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்களையும் மேம்படுத்தும் வகையிலே வேளாண் வணிகத் துறை, மேலும் பதினொன்றாம், பனிரெண்டாம் வகுப்பு படிக்கக்கூடிய ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச சைக்கிள், மேலும் உயர் கல்லூரிப் படிப்பு வரை இலவசக் கல்வி, 493 கோடி ரூபாய் செலவிலே சென்னை மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம், 12,169 கிராம ஊராட்சிகளில் மகளிருக்கு ரூபாய் இரண்டு இலட்சம் செலவிலே துப்புரவு வளாகங்கள், நகர்ப்புறங்களிலே வாழும் மகளிருக்கு ரூபாய் 42 கோடி செலவிலே 1341 கழிப்பிடக் கட்டடங்கள், காவிரி டெல்டா பகுதியிலே நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே கட்டப்பட்ட 204 பழைய பாலங்களைப் புதுப்பிக்க, மேம்படுத்தக்கூடிய வகையிலே 200 கோடி ஒதுக்கீடு, மேலும், 12,619 ஊராட்சிகளில் தலா ரூ.60,000 செலவில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடம், மேலும் 385 ஊராட்சி ஒன்றியங்களில் 30 படுக்கைகள் கொண்ட சிறப்பு மருத்துவர்கள் கொண்ட

மருத்துவமனைகள், விவசாயத் துறையிலே டி.கே.எம்.9 ரக நெல்லை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற விவசாயிகளுடைய நீண்டகால கோரிக்கை நிறைவேற்றம், 1,217 காவல் நிலையங்களில் ஒரு பெண் உதவி ஆய்வாளர், 2 பெண் காவலர்கள், 50 புதிய மகளிர் காவல் நிலையங்கள் போன்ற அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 12-45*

அதோடு மட்டுமல்லாமல், ஒரேயொரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பங்களுக்கு ரூ. 20,650/-ம், இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே உள்ள குடும்பங்களுக்கு ரூ.14,450/- ரொக்க வைப்பீடு 20 ஆண்டுகளுக்கு, அதன் வட்டியில் கல்விச் செலவு, அதன் முதிர்வுத் தொகையில் உயர்கல்வி, திருமணச் செலவு என்கின்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போன்ற உலகப் போட்டிகளில் வெற்றி பெறும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு 1 கோடி ரூபாய் முதல் ஊக்கப் பரிசுத் தொகைகள் போன்ற புதுமையான, புரட்சிகரமான பல்வேறு திட்டங்களை இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், புரட்சித் தலைவி அம்மா அவர்களை செய்தியாளர்கள் சந்தித்து, உங்களுடைய ஆட்சியின் நோக்கம் என்ன என்று கேட்டார்கள். பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்டு முடிப்பதற்குள்ளாகவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் "attack on poverty will be my priority" என்று உடனடியாகப் பதிலுரைத்தார்கள். அதன் அடிப்படையிலே, அதை நிறைவேற்றும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொலைநோக்குத் திட்டத்துடன் தயாரிக்கப்பட்டு இம்மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதை அனைத்துத் தரப்பு மக்களும் குதூகலத்துடன் வரவேற்கின்றார்கள்.

"மங்கையராய்ப் பிறப்பதற்கோர் மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா"

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல் வரிகளுக்கிணங்க பெண்களுக்குப் பெருமை சேர்க்கவும், பெண்களாய்ப் பிறப்பது போற்றுதலுக்குரியது என்பதை உறுதிப்படுத்தவும், பெண்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள்.

பெண் சிசுவைக் கொன்றுவந்த கொடுமையைக் கண்டு மனம் வெதும்பி, அதைத் தடுக்கக்கூடிய வகையிலே தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டுவந்தார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்தத் திட்டத்தை முந்தைய தி.மு.க. அரசு செயல்படுத்தாமல் கைவிட்டுவிட்டது. நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே இந்த நிதிநிலை அறிக்கையிலே மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ரூ.12.96 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய குழந்தையேற்பு மையங்களை அமைத்து, இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளித்துள்ளார்கள்.

பெண் குழந்தை பிறப்பது பாவம், சுமை என்று நினைத்திருப்பதை அகற்றிட, மாற்றிட ஒரு புதுமையான புரட்சிகரமான தொலைநோக்குத் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கின்றார்கள்.

அதேபோல், மகளிருக்கு நன்மை பயக்கும் பல்வேறு திட்டங்களை, இந்திய நாட்டில் எந்த மாநிலத்திலும், எந்த அரசும் செயல்படுத்தாத அற்புதமான திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதை தமிழகத்து தாய்மார்கள், மகளிர் அனைவரும் மனமகிழ்ச்சியோடு வரவேற்கின்றார்கள்.

மகளிர் மேம்பாட்டிற்கு, சுயவேலைவாய்ப்பு அதிகரிக்க 5 இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் அறிவித்திருக்கிறார்கள். மேலும், நடப்பு நிதியாண்டில் ரூ.15 இலட்சம் செலவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயிற்சி பெற 6 சமுதாய நிதி ஆதார மையங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். அங்கே அவர்களுக்குக் கணினி மற்றும் இணையத் தளம் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவச் சகோதரிகள் கல்லூரிகளில் மேல்படிப்புவரை படிப்பதற்கு இலவசமாகக் கல்வி என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆதிதிராவிட, பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

கிராமங்களிலே எடுத்துக்கொண்டால், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த சகோதரிகளும் அதேபோன்று பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த

சகோதரிகளும் 8 ஆம் வகுப்பு படித்துவிட்டு அதற்குப் பின்னாலே வயலுக்கு கூலி வேலைக்குச் சென்று, 20 ரூபாய் கிடைக்குமா அல்லது 25 ரூபாய் கிடைக்குமா என்று எண்ணி ஏங்கி வாழ்க்கை நடத்தக்கூடிய அந்த மக்களுடைய வாழ்க்கையில் பால் வார்த்தது போல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மகத்தான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இதைக்கண்டு தமிழகத்திலுள்ள பெண்கள், தாய்மார்கள், மாணவியர்கள் என அனைவரும் இன்முகத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

*பிற்பகல் 12-50*

மேலும், கிராமங்களிலேயும், அனைத்து ஊராட்சிகளிலேயும்— கிராமங்களிலே 2 இலட்சம் ரூபாய் வசதியில் கழிப்பிடம் மற்றும் குளிப்பதற்கான குளியலறை வசதி ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள். கிராமங்களிலே நாம் பார்த்திருக்கின்றோம். கிராமத் தாய்மார்கள் மழைக் காலங்களிலே குளிப்பதற்குச் செல்லவும், வெளியிலே செல்லவும் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதை நாம் கிராமப் பகுதியிலே பார்த்திருக்கின்றோம். நானும் ஒரு கிராமப் பகுதியிலேயிருந்து வந்தவன் என்கின்ற முறையிலே சொல்கின்றேன். நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையிலே இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். இதைப் பார்க்கின்றபோது நிச்சயமாக ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய அனைத்து குடும்பத்துத் தாய்மார்களும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இப்போது உளமார வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அதேபோல, காவல் நிலையம். காவல் நிலையத்திற்குப் புகார் கொடுக்க மகளிர் சென்றால் அந்தப் பெண்களுக்குப் பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலை காவல் நிலையங்களிலே நிலவி வருகின்றது. அதை மாற்றிடத்தான் அனைத்து காவல் நிலையங்களிலும் உதவி ஆய்வாளர் ஒருவரும், இரண்டு பெண் காவலர்களும் பணியமர்த்தப்படுவார்கள் என்கின்ற புரட்சிகரமான திட்டத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

உழவுத் தொழிலைப் பொறுத்தவரையில்,

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்பது வள்ளுவரின் குறள். இதிலே வள்ளுவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால் உழவுத் தொழில் செய்பவர் இந்த உலகத்திலுள்ள இதர அனைவரையும் அச்சாணியாக இருந்து தாங்குகிறார் என்ற பொருள்படக் கூறியிருக்கின்றார்கள். ஆகவேதான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண் தொழில் வளரவும், உழவுத் தொழில் செய்பவர்கள் வளரவும் இந்த நிதிநிலை அறிக்கையில் புதுமையான, புரட்சிகரமான இந்த அறிவியல் தொழில் நுட்பம் வளர்ந்துள்ள காலத்தில் சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொகுதிக்கு வாருங்கள்.

**திரு. ப. இளவழகன்:** இன்னும் பழனி மலைக்கெல்லாம் போக வேண்டும் துணைத் தலைவர் அவர்களே, (சிரிப்பு).

கொளுத்தும் அக்னி நட்சத்திர வெயிலில் கடுமையாக உழைத்து பாதங்கள் கொப்பளிக்கப் பாடுபடும் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளிலே பெற்ற கடனை அடைக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு தத்தளித்துக் கொண்டிருந்தபோது, கடந்த மக்கள் விரோத ஆட்சியில் அராஜகமான முறையிலே வீட்டுக்குள் புகுந்து அண்டா, குண்டா சாமான்களையெல்லாம் ஜப்தி செய்யக்கூடிய கொடுமையான நிலை உருவாகியது. அதைத் தொலைநோக்குப் பார்வையிலே கண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 310.50 கோடி ரூபாய் அளவுக்கு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்களினுடைய வீடுகளிலே மீண்டும் ஒளி விளக்கை ஏற்றி வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் மீண்டும் தொழில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பல்வேறு நலத் திட்டங்களைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்து வருகிறார்கள். மீனவர்களுக்கென்று 4000 வீடுகள். கடற்கரையிலே வாழும் மீனவர்கள் போதிய பாதுகாப்பு இல்லாமல் வீடுகள் இல்லாமல் இருப்பதை அறிந்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 4000 வீடுகளைக் கட்டித்தர முடிவு செய்திருக்கிறார்கள். இது எப்போதும் இல்லாத ஒரு புரட்சிகரமான திட்டமாகும்.

அதேபோல, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழில் துறையிலே ஒரு மாபெரும் புரட்சியைச் செய்திருக்கிறார்கள்.

முந்தைய மக்கள் விரோத, ஜனநாயக விரோத ஆட்சியிலே — எனக்கு முன்பாகப் பேசிய ஒரு மாண்புமிகு உறுப்பினர்கூட மிகத் தெளிவாகப் பேசினார்கள் — சிறு தொழில் துறையில் 19-2-1997 ஆம் நாள், 75 ஆம் எண் அரசாணையை இயற்றினார்கள். சிறுதொழில் நிறுவனங்களிலிருந்து கொள்முதல் செய்யக்கூடிய பொருட்களுக்குத் தடை விதிக்கக்கூடிய அந்த அரசாணை தற்போதும் நிலுவையில் இருக்கின்றது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக அரியணையிலே இருந்தபோது G.O. Ms.No. 343/89, என்று ஒரு அரசாணையை 1989 ஆம் ஆண்டு இயற்றினார்கள். அதன்படி அரசுப் பணிகளுக்கு, அரசாங்கத் தொழிற்சாலைகளுக்கு சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டுமென்கின்ற அரசாணை இருந்து வந்தது. அதனுடைய அடிப்படையில் நான் சார்ந்துள்ள அரியலூர் தொகுதியிலுள்ள அரசு சிமெண்ட் தொழிற்சாலை பல கோடி ரூபாய் இலாபத்திலே இயங்கி வந்தது. ஆனால், முந்தைய மக்கள் விரோத ஆட்சியிலே G.O. 75 அரசாணை இயற்றப்பட்டதற்குப் பின்னாலே அரசு சிமெண்ட்டை வாங்குவதற்கு ஆள் இல்லாமல், அரசுப் பணிகளுக்குக்கூட வாங்கப்படாமல் அங்கே சரக்குகள் தேக்கம் அடைந்து பல கோடி ரூபாய் நட்டத்திலே இயங்கக் கூடிய சூழ்நிலை உருவானதைக் கண்டு, அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றக்கூடிய தொ.மு.ச. தொழிற்சங்கத்தைத் தவிர இதர தொழிற்சங்க நிர்வாகிகள் அனைவரும் சென்னையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை அன்றைக்குச் சந்தித்தார்கள். அதன் அடிப்படையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நான் ஆட்சிக்கு வருவது உறுதி, நான்தான் முதலமைச்சராக வருவேன், நிச்சயமாக இந்த அரசாணை 75-ஐ நான் ஆட்சிக்கு வந்தவுடன் நீக்கிவிடுகிறேன் என்றார்கள்.

*பிற்பகல் 12-55*

முதல்கட்டமாக 4-5-2000 அன்று சென்னையிலே தங்கசாலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அந்த சிமெண்ட் தொழிலாளர்களுடைய வயிற்றிலே பால் வார்க்கக்கூடிய வகையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆர்ப்பாட்டம் அறிவித்தார்கள். முந்தைய அரசின் ஒரு சிமெண்ட் குடும்பம் அந்தத் தொழிற்சாலையைச் சுருட்டுவதற்காகப் போட்டிருந்த திட்டம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னையிலே நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அஞ்சி, தனியார்மயப்படுத்தவில்லை என்று சொல்லி, அன்று மாலையே சட்டசபையிலே அறிவிக்கப்படக்கூடிய நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, இதய தெய்வம் அம்மா அவர்கள் அந்த அரசாணை 75-ஐ நீக்குகிறேன் என்று சொல்லியிருப்பதைக் கண்டு நேற்றையதினத்திலிருந்து புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பல்வேறு வாழ்த்துச் செய்திகள், பல்வேறு தொழில் நிறுவனங்களிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அரியலூர் அரசு சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்களின் சார்பாகவும், அரியலூர் தொகுதி மக்களின் சார்பாகவும் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நம்முடைய பல்வேறு பத்திரிகையாளர்களுக்கு இங்கே இதய தெய்வம் அம்மா அவர்கள் நலத் திட்டங்களை அறிவித்தார்கள். சுற்றுலாத் துறையில் 1997 ஆம் ஆண்டு 4.89 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். 2000-2001 ஆம் ஆண்டு 5.50 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். இதய தெய்வம் அம்மா அவர்கள் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக ரூபாய் 17.50 கோடி இன்றைக்கு வழங்கி, சுற்றுலாத் துறையை மாபெரும் துறையாக மாற்றியமைக்கக்கூடிய வகையிலே இன்றைக்கு மகத்தான புரட்சியை படைத்திருக்கின்றார்கள். சுற்றுலாத் துறை மூலம் மதுரையிலே இயங்கி வந்த ஒலி, ஒளிக் காட்சி மீண்டும் இயக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள்.

அதேபோல, தஞ்சை, மாமல்லபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் ஒலி, ஒளிக் காட்சிகள் அமைக்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். வாடிய பயிர்களைக் கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளலார். அதுபோல், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாயில்லா ஜீவன்கள் என்று அழைக்கப்படக்கூடிய கால்நடைகளின் வயிற்றுக்கும் சிறிது ஈய வேண்டும் என்ற அடிப்படையில் மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலத்தை பிற பணிகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலத்தை வேறு பணிகளுக்குப் பயன்படுத்தினால் மேய்ச்சல் தரைக்காக அதற்கு ஈடான நிலத்தை வழங்க வேண்டும் என்ற மகத்தான திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆயிற்று. பழனிக்கு வந்து முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. ப. இளவழகன்:** பழனிக்கு வந்துவிட்டேன். துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் தமிழ் வளர்ச்சி இந்து சமய அறநிலையத் துறையில் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்களும் ஆன்மீக வாழ்விற்கும் தங்களை அர்ப்பணித்த வள்ளலார், காரைக்கால் அம்மையார், அருணகிரிநாதர், ஆழ்வார்கள், தேவார திருவாசக நால்வர் ஆகியோர் பெயரில் தமிழ் வளர்ப்பவர்களுக்கு விருதுகள் வழங்கும் புரட்சிகரமான திட்டத்தை இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பழனி மலைக்கு Cable Car வசதியும், கிரிவலப் பாதையும் அமைத்துத் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

என்னுடைய அரியலூர் தொகுதியைப் பொறுத்தவரையில், இதய தெய்வம் அம்மா அவர்கள் திருச்சியிலிருந்து பிரித்து உலகப் பொதுமறை இயற்றிய திருவள்ளுவருடைய பெயரிலே பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம் என்ற புதிய மாவட்டத்தை, 5 தொகுதிகள் உள்ளடக்கிய புதிய மாவட்டமாக அறிவித்து திறம்படச் செயலாற்ற வைத்தார்கள். சும்மாக் கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்று சொல்வார்களே, அதுபோல் முந்தைய மக்கள் விரோத ஆட்சியில் பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம் பிரிக்கப்பட்டு, அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய அரியலூர் மாவட்டத்தை அறிவித்த அறிவிப்பு வெறும் காகிதப் பூவாகவே இன்று வரை இருந்து வருகிறது.

*பிற்பகல் 1-00*

இரண்டு தொகுதிகளை உள்ளடக்கி பெரம்பலூர் மாவட்டம் என்றும் 3 தொகுதிகளை உள்ளடக்கி அரியலூர் மாவட்டம் என்றும், திரு. கருணாநிதியினுடைய அரசு பிரித்து அறிவித்தது. இந்தியாவிலேயே இரண்டு தொகுதிகளை மட்டுமே உள்ளடக்கிய ஒரு மாவட்டமாக, சிறு மாவட்டமாக இயங்குகிறது. இப்படிப்பட்ட ஒரு பிரிவினை, இப்படிப்பட்ட ஓர் அறிவிப்பு எந்த மாநிலத்திலும் ** அறிவிக்கப்படவில்லை என்பது முந்தைய அரசு அவசியமின்றி செய்ததற்கு இதைவிட வேறு ஓர் உதாரணம் எதுவுமே இல்லை. அரியலூர் மாவட்டத்தை அறிவித்த அறிவிப்போடு மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டும்தான் அங்கு நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார். அதன் பின்னாலே அங்கு மாவட்ட நிருவாகத்திற்குத் தேவையான பல்வேறு அதிகாரிகளை திரு. கருணாநிதியினுடைய அரசு நியமனம் செய்யவில்லை.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

6 மாத காலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டும்தான் இயங்கி வந்தார்கள். வேறு எந்த அலுவலரும் அங்கு நியமனம் செய்யப்படவில்லை.

உதாரணத்திற்கு, மாவட்ட அலுவலகத்திலே, Rural Development Agency, P.A. to Collector (Development), A.D. Panchayat, P.A. Noon Meals, District Panchayat Officer, Assistant Executive Engineer (Water Supply), District Supply Officer, District Treasury Officer, Joint Director of Agriculture, Joint Registrar of Co-operative Societies, (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. ப. இளவழகன்:** District R.T.O., J.D., Health Service, D.D., Health Service, D.D., Rural Health and Family Welfare, District Court போன்ற அனைத்து அலுவலர்கள் பதவிகளும் திரு. கருணாநிதியினுடைய அரசால் நிரப்பப்படாமல் இருந்தன. வெறும் மாவட்டத்தைப் பிரித்துமட்டும் அறிவித்தார்கள். இப்பொழுது இதய தெய்வம் அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இந்த அவல நிலையை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துச்சொன்னதற்குப் பின்னாலே அங்கு மாவட்ட அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

அரியலூர் தொகுதிக்கு அழகு சேர்க்கும் வண்ணம், மக்களுடைய தேவைகளாக மருதையாற்றின் குறுக்கே அணையைக் கட்டி, சிறிய நீர்த் தேக்கங்களை அமைத்தால் வீணாக ஓடுகின்ற மழை நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தக்கூடிய வகையிலே மாற்றியமைத்தால் அதன் மூலமாக 30,000 ஏக்கர் நிலம் புதியதாகப் பாசன வசதி பெறும்.

சுக்கிரம் ஏரி, கண்டிராத் தீர்த்தம் பெரிய ஏரி, கடுகூர் பெரிய ஏரி, ராயம்புரம் ஏரி, புள்ளம்பாடி வாய்க்கால் ஆகியவற்றில் ஏரிகள் அமைத்த காலத்திலிருந்து இன்று வரை தூர் வாரும் பணி மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. இந்த ஏரிகளில் தூர் வாரும் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் தொகுதியில் நெல், கரும்பு சாகுபடி விவசாயிகள் அதிகமான அளவில் இருப்பதன் காரணமாக அங்கே கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றும், நவீன அரிசி ஆலை ஒன்றும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் மாவட்டம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே கடல் பகுதியாக இருந்த காரணத்தினாலே, அந்தப் பகுதியிலே பன்னெடுங்காலத்திற்கு முன்னாலே வாழ்ந்த ஆழ்கடல் உயிரினங்கள் இப்போது அங்கே கல்லாக மாறிப் போயிருக்கின்றன. அந்தப் பகுதியிலே ஒரு அடி diameter உள்ள டைனோசர் முட்டை கிடைக்கப்பெற்று பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றது. அதைப்போல பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த மரம் ஒன்று, கல் மரமாக மாறி காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. 3-1/2 அடி உயரத்திற்கு நத்தையினுடைய ஓடு கிடைத்திருக்கின்றது. இப்படிப்பட்ட உயிரினங்கள் வாழ்ந்த பகுதியாக அந்தப் பகுதி இருக்கின்ற காரணத்தினாலே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கார்த்தி அவர்கள். (குறுக்கீடு) நீங்களே சுற்றுலாத் துறை Chairman. நீங்களே பார்த்து நடவடிக்கை எடுக்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, பேசி முடியுங்கள்.

**திரு. ப. இளவழகன்:** Fossil museum அமைக்க வேண்டுமென்றும்....

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்து விடட்டும்.

**திரு. ப. இளவழகன்:** ஆயிரம் ஆண்டு காலத்திற்கு முன்பு இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட கங்கைகொண்ட சோழபுரத்தையும், வேட்டைகுடி பறவைகள் சரணாலயத்தையும் சுற்றுலா மையங்களாக அறிவித்த இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படிப்பட்ட புதுமையான பல்வேறு திட்டங்களை அறிவித்த இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் புதுமைகள் இல்லை என்று சொல்லி, முதுமை அடைந்தவர்கள் சிலர் இன்றைக்குக் கோஷம் இட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அவையில் நடந்த அவல நிலைக்குப் பிறகு வெளியிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர், தி.மு.க.-வைச் சார்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் சட்டசபைக்கு வெடிகுண்டு வைப்பேன் என்று மிரட்டி விட்டுச் சென்றிருக்கிறார்கள். இங்கேயிருக்கிற பத்திரிகை ஆசிரியர்கள் அனைவருக்கும் இது தெரியும். அந்தப் பகுதியிலே இருந்த 50-க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இது தெரியும். இந்தச்

சட்டமன்ற உறுப்பினர் சட்டசபை வளாகத்திற்குள்ளே இப்படிப் பேசுகிறார் என்று சொன்னால் அது தி.மு.க. தலைவரைப் பொறுத்தவரையில்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கார்த்தி அவர்கள்.*

**திரு. ஜி. பழனிசாமி:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. ஜி. பழனிசாமி:*

**திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஏதோ மாவட்டப் பிரிவினையிலே ** என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *தவறுதலான வார்த்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படும். அடுத்து, திரு. கார்த்தி அவர்கள்.*

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். திருவாரூர் சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த அசோகன் என்கின்ற அந்த சட்டமன்ற உறுப்பினர் சட்டசபை வளாகத்திலே நின்றுகொண்டு சட்டசபைக்கு வெடிகுண்டு வைப்பேன், ஜாக்கிரதையாக இருங்கள், விலகிப்போங்கள் என்று மிரட்டிவிட்டு இன்றைக்கு வெளியே சென்றிருக்கிறார். இது அந்தப் பகுதியிலே இருந்த பத்திரிகை செய்தியாளர்கள் அனைவருக்கும் தெரியும் என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-05*

பல்வேறு புதுமைகளை அடக்கிய நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நிதிநிலை அறிக்கையை சில முதுமைகளால் கண்டுகொள்ள முடியவில்லை. 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்று சொல்லுவார்களே அதைப்போல கண்ணியத்துடன் வந்த காவல் துறையினரை, கைது செய்ய வந்த காவல் துறையினரைக் கண்டு 'கொலை பண்ணுகிறார்கள் அப்பா, கொலை பண்ணுகிறார்கள் அப்பா' என்று சொல்வதற்கு கூலிக்கு ஆள் பிடித்து கோஷமிட்ட கோமாளி அல்ல புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கக்கூடிய சக்தி படைத்த, ஆற்றல் படைத்த சிங்க நிகர் தலைவி எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்த்து, இங்கே ஒரு சட்டமன்ற உறுப்பினர் 'எங்களைப் பார்த்து அச்சமா' என்று கேட்கிறார். நான் அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன், ஜனநாயகரீதியில் எங்களுடைய புரட்சித் தலைவி அமமா அவர்களைச் சந்திப்பதற்கு இந்தியத் திருநாட்டில் எந்தத் திக்கிலும் எவரும் பிறக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, கண்ணியத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதி மக்கள் சார்பாக இந்த மாமன்றத்திலே இதயதெய்வம் அம்மா அவர்கள் முன்பாக பேச வாய்ப்பளித்த வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இதயதெய்வம் அம்மா அவர்களுடைய காலடியிலும் எனது நன்றியைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கார்த்தி.

***திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைப் பெற்ற தாய், தந்தை அவர்களுக்கும், சேலம்-2-வது தொகுதியின் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் என்னை போட்டியிட வாய்ப்பளித்த தமிழினப் போராளி டாக்டர் ஐயா அவர்களுக்கும், பசுமைத் தாயகத்தின் தலைவர் டாக்டர் சின்ன ஐயா அவர்களுக்கும், இந்தச் சபையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் ஜி.கே.எம்., எம்.எல்.ஏ. அவர்களுக்கும் மற்றும் என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், செயல் வீரர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த சேலம்-2 தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2001-2002 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் சில நல்ல திட்டங்களை வரவேற்கிறோம். குறிப்பாக,

20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை வருகின்ற 5 ஆண்டு காலத்திலே மேம்படுத்தும் திட்டம், சுற்றுலாத் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கு 17.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு, இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம், வெள்ளி போன்ற பதக்கங்களை வெல்கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு ஒரு கோடி ரூபாய், 50 இலட்சம் ரூபாய் என பரிசுகளை வழங்கி ஊக்குவிக்கும் திட்டம் மற்றும் இதுபோன்ற சில நல்ல திட்டங்களை வரவேற்கிறேன்.

அதேபோன்று, தரமான கட்டாயக் கல்வி, ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் பல நல்ல திட்டங்கள் முழுமையாக இடம்பெறவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாநகர் பகுதியிலே, குறிப்பாக சேலம் இரண்டாவது தொகுதிக்கு முழுவதும் பயன்படக்கூடிய வகையிலே அஸ்தம்பட்டி பகுதியிலே, 110/22 கே.வி.ஏ. துணை மின் நிலையம் ஒன்று அமைத்திட 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தேவையான நிலம் இல்லாததால் அந்தத் திட்டம் நிறைவேறாமல் 4 ஆண்டு காலமாக நிலுவையில் உள்ளது. சேலம் மத்தியச் சிறைக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலத்தை இதற்கு ஏற்ற இடம் என்று கருதுகிறார்கள். ஆகவே, துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கவேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம்-2 தொகுதி, செட்டிச்சாவடி கிராமத்தில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக, நூற்றுக்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் முப்போகம் விளையக்கூடிய வகையில் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால், Minerals இருக்கிற காரணத்தாலே அந்தப் பகுதிக்கு இதுவரையில் பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முப்போகம் விளையக்கூடிய விவசாய நிலங்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம்-2 தொகுதி, மிட்டா ஐயம்பெருமாம்பட்டி கிராமத்தில் ஏற்காடு மழைநீர் மூக்கனேரி மூலம் தேங்கி நிற்பதால் அந்தப் பகுதியிலுள்ள சிறு விவசாயிகள் முப்போகமும் நெல், கரும்பு, மல்லிகைப் பூ போன்ற பல பயிர்களை பயிர் செய்து வருகிறார்கள். அந்த நிலங்கள் தரிசு நிலங்கள் என்று கூறி, 267 ஏக்கர் நிலங்களை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் புறநகர்த் திட்டத்திற்கு என்று பல ஆண்டுகளுக்கு முன்பாகக்

கையகப்படுத்தியது. கையகப்படுத்தும்போது அரசு அதற்கு நிர்ணயம் செய்த தொகை 35 பைசாவிலிருந்து 50 பைசாவாக இருந்தது. ஆனால், கையகப்படுத்தப்பட்ட அந்த நிலங்கள் தற்போது சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியாகும். இந்த நிலங்களில் கட்டப்பட்ட வீடுகள் உள்ள இடங்களில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால், அந்த வீடுகள் பல ஆண்டுகளாகியும் இன்னும் விற்பனை ஆகாமல் உள்ளன. தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றிட அரசு முயற்சி எடுத்து வரும் இந்த வேளையில் முப்போகம் விளையக்கூடிய அந்த விவசாய நிலங்களை அரசு நேரடியாகப் பார்வையிட்டு, அவை விவசாய நிலங்களா என்பதைக் கண்டறிந்து, கையகப்படுத்திய நிலங்களை நீக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

தமிழ்நாட்டிலுள்ள 6 மாநகராட்சிகளில் சேலம் மாநகராட்சியில் மட்டும்தான் இதுவரை பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாமல் உள்ளது. இதனால் சேலம் மாநகராட்சி பகுதி முழுவதும் சாக்கடை நீர் தேங்கி நிற்கும் நிலை உள்ளது. ஆகவே, பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியில் புதியதாகச் சேர்க்கப்பட்ட 21 பஞ்சாயத்துகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாக்கடை வசதி, மின்சார வசதி, சாலை வசதி ஆகிய அடிப்படை வசதிகள் இல்லாததால், இப்பகுதி ஒரு கிராமம் போலக் காட்சியளிக்கின்றது. எனவே, மாநகராட்சியில் சேர்க்கப்பட்ட புதிய பகுதிகளுக்கு அரசு தனியாக நிதி ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாநகராட்சியில் புதியதாகச் சேர்க்கப்பட்ட 21 பஞ்சாயத்துப் பகுதிகளில் 17 இடங்களில் குடிநீர்த் தொட்டி கட்டுவதற்கு 2000 ஆண்டில் அரசு அனுமதி அளித்து, அதில் கடந்த ஆண்டு 6.60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இரண்டு குடிநீர்த் தொட்டி அமைக்கப்பட்டு இப்போது சேலம் மாநகராட்சியில் உள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினை ஓரளவிற்குச் சரி செய்யப்பட்டிருக்கிறது. பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேற்படி திட்டம் முழுமையான அளவில் நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகின்ற மீதி இருக்கின்ற நிதியை வழங்க வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம்-2 தொகுதியில், நால்ரோடு பகுதியில் சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, செயின்ட் மேரீஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஜங்ஷன் ரோட்டிலுள்ள சாரதா பள்ளி மற்றும் கல்லூரி அமைந்துள்ள இடங்களில் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் சாலையைக் கடக்கும்போது, பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் பகுதியில் சுரங்கப்பாதை அல்லது நடை மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம்-2 தொகுதியில் ஓமலூர் பகுதி எல்லையிலுள்ள ஏற்காடு மலை அடிவாரத்தில் உயிரியல் பூங்கா ஒன்றுள்ளது. இது சேலம் நகரப் பகுதியிலிருந்து 2 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. இங்கே அதிகமாக பொதுமக்கள் வந்து செல்கிறார்கள். இது சென்னையிலுள்ள வண்டலூர் உயிரியல் பூங்கா போன்று விரிவுபடுத்தத் தேவையான அனைத்து வசதிகளும் கொண்டுள்ளது. போதிய நிதி வசதியில்லாத காரணத்தினால் அது இயங்காமல் இருக்கிறது. ஆகவே, அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கியோ அல்லது தனியாரிடம் ஒப்படைத்தோ சேலம் மாவட்டத்திலுள்ள மக்கள் அதை மிகச் சிறப்பான சுற்றுலாத் தலமாகப் பயன்படுத்திக்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து நீர் ஓடைகள், வாய்க்கால்கள், ஆறுகள், ஏரிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி அபிவிருத்தி செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுதந்திர தின விழா உரையில் தெரிவித்திருக்கிறார்கள். இது சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உதவும் மிக முக்கியமான திட்டமாகும். அந்தப் பணியை முழுமையாக நிறைவேற்ற ஒரு கால வரம்பும், தனி அதிகாரியை நியமனம் செய்ய வேண்டுமென்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியில் மட்டும் Town Planning துறையில் தனியாக local planning குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மனைப் பிரிவுகள் அனுமதி மற்றும் கட்டட அனுமதி பெறுவதற்கு பொதுமக்கள் இரண்டு அனுமதிகளை வாங்க வேண்டியுள்ளது. இதனால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனால் கட்டடத் தொழிலாளர்கள், மனைப் பிரிவினர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அந்த நிலையை மாற்றி, பொதுமக்களுக்கு நன்மை செய்யும் வகையில் உள்ளாட்சிகளே அனைத்து அனுமதிகளையும் வழங்க அரசு உத்தரவிட வேண்டும். இதற்காக அக்டோபர் 2000-ல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் மற்றும் விதிகளை மீண்டும் அமல்படுத்த அரசு உத்தரவிட வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சேலம் கண்ணங்குறிச்சி ஏரி சுமார் 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடமாக இருக்கிறது. இதில் தண்ணீர் தேங்கியிருக்கின்ற காரணத்தாலே அந்தப் பகுதி மிகவும் எழுச்சி பொங்கும் இடமாக அமைந்திருக்கிறது. சுற்றுலாத் துறை மூலமாக படகு சவாரி செய்கின்ற அளவிற்கு ஏற்ற இடமாக அது இருப்பதால், அரசு அதனைச் சுற்றுலாத் தலமாக அமைத்திட, அதற்குத் தேவையான நிதி ஒதுக்கி படகு சவாரி செய்கின்ற அளவிற்கு ஒரு வசதியைச் செய்து தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் அரசு மருத்துவமனையில் புதியதாக அறுவைச் சிகிச்சைக்காகக் கட்டப்பட்ட கட்டடங்கள் பல மாதங்களாக அதற்கான அறுவைச் சிகிச்சைக் கருவிகளும், மருத்துவர்களும் இல்லாமல் செயல்படாமல் இருக்கின்றன. ஆகவே, அரசு அதற்குத் தேவையான கருவிகளையும், மருத்துவர்களையும் வழங்கி, அந்த மருத்துவமனை சிறப்பாகச் செயல்படுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம், செவ்வாய்பேட்டை லாரி மார்க்கெட்டில் ஆயிரக்கணக்கான லாரிகள் தினமும் வந்து செல்கின்றன. அந்தப் பகுதிக்குச் செல்கின்ற லாரிகள், முறையான வசதிகள் இல்லாத காரணத்தினால் நிற்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அரசு அதற்கு சரியான பராமரிப்பு ஏற்பாட்டினைச் செய்து, அந்த லாரி மார்க்கெட்டை நவீனப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை வெள்ளிக் கொலுசு தொழில் தற்போது நலிவுற்றுள்ளது. இந்தத் தொழிலில் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தொழிலைச் செம்மையாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, சேலம் லீ பஜார் வர்த்தக சங்கத்தைப் பொறுத்தவரை, சேலம், நாமக்கல், தருமபுரி ஆகிய பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வர்த்தகம் செய்யக்கூடிய இடமாக இருக்கிறது. அந்த இடத்தை அரசு நவீனப்படுத்தி, அந்த லீ பஜார் வர்த்தக சங்கத்தை நல்ல முறையில் பராமரிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

VAIMAYE VELLUM / TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவ்ர்களே, மன்ற உறுப்பினர்களே, அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில் கடந்த தேர்தல் காலத்தில் மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் என்னை வேட்பாளராக நிறுத்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், வெற்றிக்கு உறுதுணையாக இருந்து, பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அகில இந்திய பார்வர்டு பிளாக், தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய தேசிய லீக், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த சகோதரர்களுக்கும், தேர்தல் காலத்தில் சிரமம் பாராமல் இரண்டு முறை சுற்றுப்பயணம் செய்து, தொகுதியின் வெற்றியைத் தக்கவைப்பதற்குப் பாடுபட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மதச்சார்பற்ற ஜனநாயக அணியினுடைய வேண்டுகோளை ஏற்று நல்ல வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த மதுரை கிழக்கு தொகுதியினுடைய வாக்காளர் பெருமக்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியறிதலை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன்.

நிதிநிலை அறிக்கை இங்கே முன்வைக்கப்பட்டது. உண்மையிலேயே இந்த அறிக்கையைத் தடங்கல் இல்லாமல், சொற்குற்றம், பொருட்குற்றம் எதுவும் இல்லாமல் சிறப்பான முறையில் வாசித்தளித்த மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களை நான் அன்போடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கையில் பாராட்டத்தக்க பல அம்சங்கள் இருப்பதை என்னுடைய கட்சியின் சார்பாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர் நலன்.

“கரைமேல் பிறக்க வைத்தான்; எங்களைக்
கண்ணீரில் மிதக்க வைத்தான்”

என்று கவிஞர் வாலி அவர்கள் எழுதிய வரிகளை படகோட்டி திரைப்படத்தின் மூலமாக முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மக்களுக்குத் தெரிவித்தார்கள். திரைப்படப் பாடல் வரியினை நினைவில் கொண்டு, அந்த மக்களுக்கு நன்மை கிடைக்க

TRUTH ALONE TRIUMPHS

வேண்டும் என்பதற்காக வீடுகள் அமைவதற்கு வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில், கல்வி மறுக்கப்பட்ட சூழலில், சமூகத்தில் ஒதுக்கப்பட்ட சூழலில் இருக்கக்கூடிய ஆதிதிராவிட மாணவர்கள், மாணவியர், பெண்கள் — குறிப்பாக பெண்கள் என்று சொல்கிறபோது, அவர்களைப் பற்றிய பார்வையிலேயே பழுது கொண்டவர்கள் பொறுப்பான இடத்தில் இருப்பதை நாம் அறிவோம். நேற்றையதினம்கூட நாளேடுகளில் ஒரு செய்தி வந்தது. முன்னாள் முதலமைச்சர் பேட்டி தருகிறார். அதிலே பல விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார். அதற்கெல்லாம் பதில் பின்னால் வரும். ஆனால், ஒன்றைக் குறிப்பிடுகிறார். நிருபர்கள், ஏற்கெனவே உங்கள் கட்சி வெளிநடப்பு செய்திருக்கிறதே என்று கேட்கிறார்கள்; நானும் அந்தக் கட்சிதான் என்று சொல்கிறார். நாளைக்கு என்ன செய்வீர்கள் என்று கேட்கிறார்கள். அதை நாளைக்குப் பாருங்கள் என்று சொன்னார். அது எது என்பது காலையில் அவருடைய கட்சியில் இரண்டு விதமாக வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டில் எதை அவர் ஏற்கிறார் என்பதை இன்று மாலையில் தெரிவிப்பார் என்று நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவரால் தேர்வு செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் வெறுப்போடு வெளியேறினார். அவருக்குக் கட்டுப்படாத உறுப்பினர்கள் அவரை வெறுத்து வெளியேறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் எது அவருடைய நிலை, முன்னாள் முதலமைச்சர் விரும்பியது? நாளைக்குப் பாருங்கள் என்று முன்னாள் முதலமைச்சர் சொன்னாரே, அது எது என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், நானெல்லாம் முதன்முதலாக சட்டமன்றத்திற்கு வரும்போது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. எதற்கு வந்திருக்கிறோம் என்றே இல்லாமல், வந்ததிலிருந்து, — விளையாட்டுக் களத்திற்கு விளையாட வருகிறவர்களும் இருக்கிறார்கள். ஆட்டத்திலே பங்கெடுத்து கபடி விளையாடுவார்கள். எவரையுமே விளையாட விடாமல் ஆக்கிக்கொண்டே போவதற்கு சிலபேர் கிரவுண்டிற்கு வந்து கொண்டேயிருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி என்ன நோக்கத்திலே வருகிறார்கள்? என்ன என்றே தெரியவில்லை. வரும்போது ஒரு நிலை, போகும்போது ஒரு நிலை. இடையிலே climax. இதெல்லாம் நல்லதல்ல. நல்ல தலைவர்கள் படங்கள் சட்டமன்றத்திலே இருக்கின்றன. இவர்களுக்கு எல்லாம் நாம் செய்கிற மரியாதையா இது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று தலைவர் சொல்லியிருக்கிறார். அண்ணா சொன்னார், சொன்னார் என்று சொல்லிவிட்டு, அதற்கு விரோதமாகவே நடந்து கொண்டே போனால், எந்தக் கடமையை முன்வைக்கிறீர்கள், எந்தக் கண்ணியத்தைச் சொல்கிறீர்கள், எந்தக் கட்டுப்பாட்டைச் சொல்கிறீர்கள் என்பதே புரியாமல் வரக்கூடிய தலைமுறையும் தவறாக அரசியல்வாதிகளைப் புரியக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதை நான் அன்போடு சுட்டிக்காட்டுகிறேன். நிதிநிலை அறிக்கையிலே சொல்லவேண்டிய பல விஷயங்களைச் சொல்லலாம். அதைவிட்டுவிட்டு, இப்படிப்பட்ட போக்கு சரியல்ல. தகாத வார்த்தைகளைப் பேசுவது, இதன் மூலம் மலிவான விளம்பரத்தைத் தேடுவது தவறு. விளம்பரத்திலே மலிவான விளம்பரத்தைத் தேடுவது மிகவும் மோசமான போக்கு. எனவே, வருங்காலத்திலே இதைக் கைவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இது ஒன்று. அப்படி இல்லாவிட்டால் தகுந்த தண்டனை கிடைக்கும். தமிழக மக்கள் தெளிவான தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். தெளிவான தீர்ப்பு. என்ன சிறப்பு இருக்கிறது என்று ஏற்கெனவே பேசினார்கள். இவர்தான் முதலமைச்சர் என்று 1952-லிருந்து இன்று வரைக்கும் என்றைக்கு சொல்லியிருக்கிறோம்? (மேசையைத் தட்டும் ஒலி) 1952-ல் யார் முதலமைச்சராக வருவார் என்று யாருக்குமே தெரியாது. இந்தத் தேர்தலிலேதான் இவர்தான் முதலமைச்சர் என்று சொல்லி, அந்தக் கட்சியும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு தெளிவாக தீர்ப்பு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லி, அன்றைக்கே மக்கள் தீர்ப்பை உணர்ந்து ஒப்புக்கொண்ட கவர்னரை மாற்றிவிட்டீர்கள். இதுதான் சிறுபான்மையினருக்கு நீங்கள் செய்திருக்கிற மரியாதை, தாழ்த்தப்பட்டவர்களுக்கு நீங்கள் செய்கிற நியாயம். அதைப் பின்னால் நாம் பேசுவோம். (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்டோருக்கும், சிறுபான்மையினருக்கும் அநீதி செய்துவிட்டு நீங்கள் மக்களுக்குத் தொண்டு செய்கிற மாதிரி பேசுவது பொருத்தமல்ல. பெண் என்று சொன்னால் எதையும் பேசலாம் என்ற மாதிரி ஆகி அதிலே விளம்பரத்தைத் தேடுகிற ஒரு போக்கை கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அந்த இதயத்தை அவரவர் அறிவார் என்ற முறையில், பெண்கள் கல்வி, தொழில் முனைவோரிலேயும் பெண்கள் வருவது என்கிற அடிப்படையில் அவர்களுக்கான மையங்களை ஏற்படுத்தி

இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்திருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

தொகுதி உறுப்பினர் நிதி 82 இலட்சம். 77 இலட்சம் நீடிக்குமா என்பது ஒரு கேள்வி. அதே நேரத்திலே 1 கோடி என்பது ஆசை. இது என்ன ஆகிவிட்டது என்றால், எம்.எல்.ஏ. என்றாலே பெரிய கோடீஸ்வரன் மாதிரி என்று கவுன்சிலர்கள் நினைத்து, எம்.பி. என்று சொன்னால் மிகப் பெரிய கோடீஸ்வரன் என்று எம்.எல்.ஏ-க்கள் நினைத்து, அண்ணே உங்கள் நிதி, நிதி என்று கேட்கிறார்கள் — யானைப் பசிக்கு சோளப்பொறி என்பார்கள் -- ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக செய்வதை எல்லாம் எம்.பிக்கள் / எம்.எல்.ஏ.க்கள் தலையிலே கட்டிவிட்டு, இது எந்த அளவிற்கு சிரமத்தை உண்டாக்கும் என்பதை நீங்கள் அனுபவத்திலே உணர்வீர்கள். கீழே போனால், யூனியன் சேர்மெனிலிருந்து கவனித்துவிடுங்கள், கவனித்துவிடுங்கள் என்கிறார்கள். இந்த 77 இலட்சத்தினை வைத்து எவ்வளவு பேரைக் கவனிப்பது? நாமும் சரி, சரி என்று வருகிறோம். ஆனால், guideline இனிமேல் வரப்போகிறது. இந்த வழிகாட்டு முறைகள் நீங்கள் தந்த பிறகு அதைச் செயல்படுத்துவோம். இப்போதைக்கு 82 இலட்சம் என்று அறிவித்திருப்பதற்கு மனப்பூர்வமான பாராட்டுக்கள். இருப்பதை வைத்து சிறப்புடன் செயல்படுவோம்.

அடுத்து இந்த மாநில அரசு மத்திய அரசுக்கு உட்பட்டது. நாம் வேளாண்மைத் துறையிலே விசேஷமான கவனம் எடுத்திருக்கிறோம். மகிழ்ச்சி. பாராட்டுக்குரியது. உழவிற்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்பது பாரதியின் குறி, கோட்பாடு, தேசிய இயக்கக் காலத்திலே முன்வைக்கப்பட்ட முழக்கம். உழவும் தொழிலும் இன்றைக்கு சிதைவிற்கு ஆளாகியிருக்கிறது. ஏகாதிபத்தியங்களுடைய வல்லூறு நோக்கத்திற்கு இந்தியத் திருநாடு இரையாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிடியிலிருந்து தமிழகத்தைக் காக்கின்ற முறையில் இந்த நிதிநிலை அறிக்கையில் வாசகங்கள் அமைந்திருக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கை நடைமுறையில் இருக்கிறது. அதற்கு உட்பட்டு நாம் என்ன செய்கிறோம் என்பதையும் கொண்டு வர வேண்டும். அதிலே உச்சவரம்பில் ஒரு தளர்வு இருக்கும் என்ற தொனி இந்த அறிக்கையில் இருக்கிறது. அந்த உச்ச வரம்புச் சட்டமே நீண்ட கால விவாதத்திற்குப் பிறகுதான் வந்திருக்கிறது. அதுவே போதாது என்பதுதான் நிலை. இன்னும் அதை ஒழுங்குப்படுத்த வேண்டும். அதிலே தளர்வு என்று வந்துவிட்டால் ஆபத்து. ஆகவே, அது கூடாது. உச்சவரம்புச் சட்டம் இன்னும்

வலிமையாக பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலம் கண்டறியப்பட்டிருப்பது மகிழ்ச்சி. அதிலே பண்ணை அமைப்பது நல்லது. இந்தப் பண்ணை யார் மூலம் அமைக்கப்படும் என்பது தெளிவுபடுத்திட வேண்டும். இல்லாவிட்டால் பழைய மிட்டா மிராசு கையிலே இந்தத் தரிசு நிலமும் போய்ச் சேர்ந்து, அவர்கள் மேலும் மேலும் பலம் அடையக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். நிலமற்ற உழவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். நிலக் குவியல் என்பது போக்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன். நிலக் குவியல் மூலமாக வறுமைதான் பெருகி இருக்கிறதே தவிர, வேறு புதிய நன்மைகள் இல்லை. எனவே, நிலக் குவியல் மாற்றப்பட்டு நிலமற்ற உழவர்களுக்கு நிலம் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் தரிசு நிலங்கள் எல்லாம் பண்ணைகளாக மாற்றப்பட வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

*பிற்பகல் 1-25*

அடுத்து மாணவர்கள் பிரச்சினை. மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் சொல்லி இருக்கிறீர்கள். அதேபோல போக்குவரத்திலேயும்கூட நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்தைப் பொறுத்தவரையில் நம் மாநில அரசு ஒதுக்குகிற நிதியில்தான் வாழ முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதிலே கூட, போக்குவரத்தை ஒரு மையமாக மாற்றுவதற்கு, நிர்வாகச் செலவைக் குறைக்க ஒரு மையமாக மாற்றுவதற்கு அரசு முனைகிறது என்று சொல்லி இருக்கிறீர்கள். வரவேற்கிறோம். ஆனால் அதே சமயத்தில், கடந்த காலத்திலே என்னதான் நடந்திருக்கிறது என்பதற்கு இப்போது வெள்ளை அறிக்கை ஒன்று வைத்திருக்கிறோம். இருப்பதிலேயே ரொம்பத் தவறாகப் பயன்படுத்தப்பட்ட துறையாக போக்குவரத்துத் துறை தெரிகிறது. இன்னும் கொஞ்சம் ஆழமாகக் கண்டறிந்து நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துவது எதிர்காலத்திலாவது போக்குவரத்து பாதுகாக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற நிலைமையை உருவாக்கும் என்பதைத் தெரிவிக்கிறேன். அது யாருக்குப் போனது, யாருக்கு வந்தது என்றே தெரியவில்லை. ஆனால் நஷ்டக் கணக்கு வந்துகொண்டே இருக்கிறது. தினமும் பஸ் ஓடிக்கொண்டே இருக்கிறது. அது இரவு பகலாக ஓடுகிறது. night bus வேறு ஓடுகிறது. இரவு பகலாக வண்டி ஓடியும் நஷ்டத்தில் ஓடுகிறது. இதே private ஆக இருந்தால் என்ன நடந்து இருக்கும்? அரசுத் துறை என்பதினாலே வெறும் நஷ்டக் கணக்காகக் காட்டிக்கொண்டு போனதைக் கண்டறிந்து அது

களைந்தெறியப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன். கல்லூரி மாணவர் பஸ் பாஸில், அரசுக் கல்லூரிக்கு மட்டும் என்று சொல்லுகிறோம். தனியார் கல்லூரியில் — Self Financing Colleges— நடத்துகிறவர்கள்தான் தனியாரே தவிர, அங்கே சேர்ந்து இருப்பவர்கள் எல்லாம் பாவப்பட்ட ஆட்கள்தான். எனவே அவர்களுக்கு இந்த பஸ் பாஸ் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலனில் கூடுதலாகவே அக்கறை எடுத்து இருக்கிறீர்கள். மகிழ்ச்சி. ஆனால் அவர்களில் பல பேர். இந்த காட்டுநாயக்கன் சமூகம் — பழங்குடியினர் இருக்கிறார்கள். மலை வேடர்கள். விடாமல் அவர்கள் கோரிக்கை கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்குச் சான்றிதழ் கிடைப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்ய வேண்டியது. அதற்கு இந்த மாநில அரசும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர் நல வாரியம். அது கட்டுமானம் சம்பந்தமாக மட்டும் இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே சொன்னீர்கள். கட்டுமானத்தில்தான் பணம் இருக்கிறது. மற்றதில் பணம் இல்லை. அறிவிப்பு தான் வந்தது. இப்போது மற்ற வாரியங்களும் செயல்படுவதற்கு இந்த அரசு ஏற்புடைய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி பாதுகாப்பு. கைத்தறி என்பது,

"செய்யும் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை வையத்தில்"

என்ற வள்ளுவன் பார்த்த தொழில் அல்லவா என்று ஒரு பழம் பாடல். இன்றைக்கு வள்ளுவருக்கு சிலை வைத்துவிட்டோம். அவர் பார்த்த தொழில் குளோஸ் ஆகிக்கொண்டே போகிறது. இந்தச் சூழ்நிலையில், அந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்கு உரிய, மதுரை செல்லூர் கைத்தறி, நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சராக இருக்கிற வளர்மதி ஜெபராஜ் அவர்கள் தொகுதி. அந்த கைத்தறி தொழிலாக இருந்தாலும் பவர்லூம் தொழிலாக இருந்தாலும், தமிழ்நாடு பூராவும் இருக்கிறது. காஞ்சியில் இருந்து எல்லா இடத்திலும் ஒரு காலத்தில் திராவிட இயக்கத்தினர் தோளில் துண்டு போட்டு விற்றோம் என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள் பழைய கூட்டங்களில். இப்போது விட்டாயிற்று. அதைச்

சொன்னோம் என்றால் இப்போது என்ன செய்கிறோம் என்று கேட்பார்கள். உங்கள் காலத்தில் கைத்தறியைப் பாதுகாக்கவேண்டும்.

மாசுக் கட்டுப்பாடு வாரியம் என்ற பெயரில் நாங்கள் ரொம்ப துன்புறுத்தப்படுகிறோம் என்று சொல்கிறார்கள். கைத்தறி உரிமையாளர்களையும் கூட ஒரு முறை அழைத்துப் பேசுவதற்கு நீங்கள் வழி செய்யவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வரிகள் உயர்த்தப்படுவது. வரி வருவாய் என்பது தேவை. ஆனால், இன்னும் அதைச் சீரமைக்கிற முறையில் கொள்கை அமைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட முறையில் தொழிலுக்கும் சிதைவு வராத முறையில் அந்த வரி சீரமைக்கப்பட வேண்டும் என்பதை வேண்டிக்கொள்கிறேன்.

மருத்துவம் சம்பந்தமாக நல்ல முயற்சிகள் எல்லாம் எடுத்து இருக்கிறீர்கள். எத்தனை படுக்கைகள் இருக்கின்றன என்று போன கூட்டத்தில் சொன்னோம். டாக்டர் இல்லாமல் இருக்கிறது என்று சொன்னோம். அதை உறுதிப்படுத்தவேண்டும். மருத்துவமனையைப் பொறுத்தவரையில், மதுரையில் அரசினர் மருத்துவமனை. தென் மாவட்டங்களுக்கே அதுதான் பெரிய மருத்துவமனை. அதனுடைய கன்ட்ரோலில் பாலரங்கபுரம். அதனுடைய கட்டுப்பாட்டில் தோப்பூர். பாலரங்கபுரம் ஆஸ்பத்திரி கிழக்கு தொகுதியில் இருக்கிறது. தோப்பூர் மருத்துவமனை, திருப்பரங்குன்றம் தொகுதியில் இருக்கிறது. அந்தந்தத் தொகுதிக்கென்று இல்லை. தமிழ்நாட்டுக்கு பூராவும் பயன்படுகிறது. எனவே, 10 கோடி ரூபாயாவது ஒதுக்கி இந்த மருத்துவமனைகளைப் பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்கள் குறித்த கோலப்பன் குழு பரிந்துரை நிறைவேற்றப்படவேண்டும் என்று வேண்டுகிறேன். சத்துணவு பற்றி சொல்கிறீர்கள். உண்மையில் நல்ல திட்டம். ஆனால், சத்துணவு ஊழியர் என்பது, அவர்களுடைய பாதுகாப்பு என்பது விடுபட்ட நிலையில் இருக்கிறது. அதனை நிறைவு செய்யவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்து, காலி இடங்களைப் பூர்த்தி செய்தல். இன்று அரசு மருத்துவமனையில் எல்லாம் வண்டி தள்ளுகிறவர் வேலையை விட்டுப் போய்விட்டால் ஆள் இல்லை. கட்டுப் போடுகிறவர் வேலையை விட்டுப் போய்விட்டால் ஆள் இல்லை. களிம்பு கொடுக்கிறவர்

வேலையை விட்டுப் போய்விட்டால் ஆள் இல்லை. இந்தக் கடை நிலை ஊழியர்கள் எல்லாம் வேலையை விட்டுப் போய்விட்டால் புதிதாக ஆட்கள் வருவதில்லை, போடுவதில்லை என்கிற நிலைமை நீண்ட காலமாக இருக்கிறது. அதைப் போக்குவதற்கு ஊழியர்களை நியமனம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மருத்துவத் துறையில், மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, Para-medical Staff entry level posts எல்லாம் vacant ஆக இருக்கிறது, நிரப்பப்படவில்லை என்று சொன்னார்கள். அந்த நிலை பழைய ஆட்சிக் காலத்தில் இருந்தது உண்மை. அந்தக் குறைபாடுகளை எங்களுடைய துறை ஆய்வு செய்து, நம்முடைய மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுபோனவுடன் அந்தத் தடை நீக்கப்பட்டு, இப்போது அந்தப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளி இருக்கிறது. நன்றாக ஆரோக்கியமாக மருத்துவத் துறையோடு முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மிக்க நன்றி. அடுத்து மொழிப் பிரச்சினை. தமிழ் வழிக் கல்வி என்பதை இந்த மன்றம் இடைவிடாமல் சொல்லி வந்திருக்கிறது. ஜப்பான் நாடு ஜப்பான் மொழியில் படித்து முன்னேறியிருக்கிறது, ஜெர்மனியும் அப்படித்தான். தமிழ்நாடும் தமிழ் வழியில் பயின்று முன்னேறலாம். இதனுடைய பொருள் ஆங்கிலமே வேண்டாமென்பதல்ல. நம்முடைய பிள்ளைகளுக்கு தமிழ் மொழியை நன்றாகச் சொல்லிக் கொடுக்கவேண்டும். ஆங்கிலம், பிரெஞ்ச் மொழிகள் மட்டும் அல்ல, உலக மொழிகள் அனைத்திலும் படிக்கிற ஆற்றலை தமிழ்நாட்டுப் பிள்ளைகள் பெற்றிருக்கிறார்கள். தமிழின்மீது உரிய கவனம் எடுத்து, தமிழை, 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதை கவனத்தில்

வைத்து, தமிழ் மொழி, பயிற்சி மொழி, நீதி மொழி, நிருவாக மொழி என்பதை நீங்கள் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். அதை இந்த மன்றத்தில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தீண்டாமைப் பிரச்சினை பற்றி இந்த அறிக்கையில் இல்லை. எனவே அதன்மீதும் கவனம் எடுங்கள். பட்டா பிரச்சினை. குறிப்பாக தமிழ்நாடு பூராவும் சென்ற ஆட்சிக் காலத்தில், குடியிருக்கிற மக்களுக்கு பட்டா என்பதில் மார்க்கெட் ரேட் என்று போட்டார்கள். அதனால் பல இடங்களில் நிறைவேறவில்லை. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து..

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** ஒரே ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்கிறேன். அடுத்து. திருமலை மன்னர் மகால். அங்கு ஒலி-ஒளிக் காட்சியைக் கொண்டு வந்திருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அந்த ஒலிகூட, பின்னணி குரல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அந்தத் தொகுதிகூட ஒரு காலத்தில் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த தொகுதி. அந்தத் தொகுதி மக்களைப் பொறுத்தவரையில் கடைசியாகச் சொல்கிறேன். அங்கே ஓர் அம்மா சொன்னார்கள். தொலைபேசியில் ஒரு வீட்டுக்கு நன்றி சொல்கிறபோது, அந்த வீட்டுக்காரர் இல்லை, அந்த அம்மாதான் எடுத்தார்கள். எடுத்து ரொம்ப மெதுவாகப் பேசினார்கள். நீங்கள் சட்டமன்றத்திற்குப் போவீர்களா என்றார். ஆம் அம்மா என்றேன். என்றைக்கு என்று கேட்டு, அம்மாவைப் பார்ப்பீர்களா என்று கேட்டார். ஆம் பார்ப்பேன் என்று சொன்னேன். பக்கத்தில் பார்ப்பீர்களா என்று கேட்டதற்கு, எனக்கு சொல்லத் தெரியவில்லை, அப்போது நான் சபைக்கே வந்ததில்லை. ஓரளவுக்கு பார்ப்பேன் என்று சொன்னேன். பார்த்தால், தைரியமாக இருக்கச் சொல்லுங்கள் என்றார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) என்னையும் சொன்னார், தைரியமாக இருங்கள் என்று.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

என்ற குறளுக்கு ஏற்ப, உங்கள் செயல்பாடு அமையட்டும். மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யுங்கள். பட்டா பிரச்சினையில் நிச்சயமாக உங்கள் மேல் கிழக்குத் தொகுதி மக்கள், என்.எம்.ஆர்.புரம், காமராசபுரம் மக்கள் உண்மையிலேயே தெய்வமாக வழிபாட்டுப் பொருளாக உங்களை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு காரியத்தைச் செய்து கொடுக்கிற முறையில், தமிழ்நாடு பூராவும் இந்தக் கோரிக்கை நிறைவேறக் கூடிய வகையில் நீங்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்து, இந்த அளவோடு வார்த்தையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21-8-2001) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்ட முறை விதிகளும் ஆணைகளும்

1. ஈரோடு முதன்மை கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் திரு.ட்டி. சீமத்துரை அவர்களை சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்திருப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 3-2-2001 ஆம் நாளிட்ட 30-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. ஈரோடு மாவட்டத்திலுள்ள ஈரோடு விற்பனைக் குழுவின்கீழ் செயல்படும் இருபத்திமூன்று ஒழுங்குமுறை விற்பனை அங்காடிப் பகுதிகளில் தேங்காய் (மட்டை உரிக்கப்படாதது, மட்டை உரிக்கப்பட்டது, கொப்பரை) விற்பனையை முறைப்படுத்துவதற்காக அப்பகுதிகளை அறிவிக்கையிடப்பட்ட அங்காடி பகுதிகளாக அறிவிக்கை செய்துள்ளது குறித்து வேளாண்மைத் துறையின் 12-9-2000 ஆம் நாளிட்ட 368 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு

உட்காருவதா? இதுவரையில் நீண்ட நாட்கள் நான் இந்த அவையிலே இருந்திருக்கிறேன். இப்பேர்பட்ட ஒரு கருத்து சொல்லப்பட்டதாக என்னுடைய ஞாபகத்தில் இல்லை. எனவே, நீங்கள் வெறுமனே அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டால் மட்டும் போதாது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, அதற்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

*முற்பகல் 10-40*

## 4. அரசினர் தீர்மானம்

### உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியை சட்டப் பேரவையிலிருந்து இரு தினங்களுக்கு நீக்கி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமருங்கள். இந்த அவைக்கு என்று ஒரு கண்ணியம் இருக்கிறது, ஒரு மரபு இருக்கிறது, நீண்ட பாரம்பரியமும் இருக்கிறது. சந்து முனையிலே பேசக்கூடிய வார்த்தைகளையெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே பேசக்கூடாது என்கிற முறை இருக்கிறது. இந்த முறைகளையெல்லாம் மீறியும், இத்தனைக்கும் பெருந்தன்மையோடு அவருடைய பேச்சுக்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிற அந்தச் சூழ்நிலையிலும்கூட, கண்ணியத்தை மறந்து, தரக்குறைவான வார்த்தைகளைப் பேசிய பரிதி இளம்வழுதி அவர்களை இரண்டு நாட்களுக்குச் சட்டமன்றத்திலிருந்து நான் விலக்கி வைக்கிறேன். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அதற்கான தீர்மானத்தை முன்மொழிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அவையினுடைய கண்ணியத்திற்கு மாறாக, சட்டப் பேரவையில் இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த உயர் பண்புகளுக்கு மாறாக, அமங்கலமாகப் பேசிய சட்டப் பேரவை உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களைச் சட்டப் பேரவையிலிருந்து இரு தினங்களுக்கு நீக்கி வைக்க வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

2001 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை'.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

பரிதி இளம்வழுதி இரண்டு நாட்களுக்குச் சட்டமன்றத்திலிருந்து நீக்கப்படுகிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவையில் பேசப்பட்ட பேச்சையும், கருத்தையும் உடனடியாக மறுத்து அதை நீக்கியதாக அறிவித்துவிட்டார்கள். அப்போதே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. நான், பரிதி இளம்வழுதி இரண்டு நாட்களும் அவைக்கு வர வேண்டும் என்பதற்காக இப்போது பேசவில்லை. நீங்களே ஒரு தீர்ப்பு வழங்கி, அது உங்களுடைய பேச்சாக தவறாகவோ, சரியாகவோ, சொல்லப்பட்டது உண்மையல்ல என்ற அடிப்படையில் நீங்கள் நீக்கியபோதே, சட்டசபையினுடைய நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்குவதாகச் சபாநாயகர் சொன்ன காரணத்தினால் அது அப்போதே முடிந்துவிட்டது. அது ஒரு குற்றம் என்று கருதினால்கூட அந்தக் குற்றம் நீக்கப்பட்டுவிட்டது. அதற்காக அவர் வருத்தம் தெரிவிக்கிறாரா, இல்லையா என்பது வேறு. நான் வருத்தம் தெரிவிக்கக்கூடத் தயார். ஏனென்றால் எதையும், எங்கேயும் சொல்லலாம் என்ற கொள்கையை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். சபாநாயகர் அவர்களே சொல்கிறபோது வெளியிலே எங்கேயோ முச்சந்தியிலே பேசுகிற பேச்சு இங்கே சொல்லப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அது எதுவாக இருந்தாலும் அதைச் சட்டமன்றத்தில் சொல்ல வேண்டுமென்பது நியாயமும் அல்ல, அவசியமும் அல்ல. அது, உணர்ச்சிவசப்பட்டு எதற்காகவோ பதில் சொல்கிறபோது அந்த வார்த்தை சொல்லப்பட்டு, அதைத் தாங்களே நீக்கிவிட்டீர்கள். தாங்களே நீக்கியதற்குப் பின்னர் தாங்களே தண்டனை வழங்குவது அவசியமா என்பதைத் தாங்கள் கருதிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் என்பவர் இந்த அவையினுடைய ஒட்டுமொத்த உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளினுடைய ஒரு வடிவம், ஒரு பிரதிநிதி. நான் என்னுடைய கருத்துகளை மட்டுமே இங்கே திணிக்க விரும்பவில்லை. பேரவையிலே வழங்கக்கூடிய கருத்துகள் பேரவையினுடைய பெரும்பாலான உறுப்பினர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய கருத்துகளாக இருக்குமானால் அவற்றை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. (கூச்சல்-குழப்பம்)

*(பேராசிரியர் க. அன்பழகன் அவையிலிருந்து வெளியேறினார்.) (கூச்சல்-குழப்பம்)*

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (இ) நல்லிணக்க நாள் உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். பழைய நிகழ்ச்சிகள் முடிந்துவிட்டன. பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"நல்லிணக்க நாளை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை *11-00* மணிக்கு தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்திற்கு அருகிலுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் நல்லிணக்க நாள் உறுதிமொழியைச் செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை *10-45* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் *11-15* மணிக்குக் கூடும்."

ஆகவே, இப்போது பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை *11-15* மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் *10-45* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் என்பவர் இந்த அவையினுடைய ஒட்டுமொத்த உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளினுடைய ஒரு வடிவம், ஒரு பிரதிநிதி. நான் என்னுடைய கருத்துகளை மட்டுமே இங்கே திணிக்க விரும்பவில்லை. பேரவையிலே வழங்கக்கூடிய கருத்துகள் பேரவையினுடைய பெரும்பாலான உறுப்பினர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய கருத்துகளாக இருக்குமானால் அவற்றை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. (கூச்சல்-குழப்பம்)

*(பேராசிரியர் க. அன்பழகன் அவையிலிருந்து வெளியேறினார்.) (கூச்சல்-குழப்பம்)*

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (இ) நல்லிணக்க நாள் உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். பழைய நிகழ்ச்சிகள் முடிந்துவிட்டன. பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"நல்லிணக்க நாளை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை *11-00* மணிக்கு தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்திற்கு அருகிலுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் நல்லிணக்க நாள் உறுதிமொழியைச் செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை *10-45* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் *11-15* மணிக்குக் கூடும்."

ஆகவே, இப்போது பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை *11-15* மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் *10-45* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

வாழ்ந்தவர், அவருக்கு எல்லாமே காமராஜர்தான். அவரைப்பிடித்து உள்ளே போடப்போகும்போது, அவர் தன்னுடைய குடும்பத்திலே இருந்தவரிடம் என்ன சொன்னார் என்றால், இதை தயவுசெய்து காமராஜரிடம் சொல்லிவிடாதீர்கள், அவர் தூங்கமாட்டார், காலையிலே இந்தச் செய்தியைத் தெரிந்துகொள்ளட்டும் என்று சொல்லிவிட்டுச் சிறைக்குப் போய்விட்டார். காலையிலே இந்தச் செய்தி காமராஜருக்குப் போகிறது. தனுஷ்கோடி நாடாரை இரவு அரஸ்ட் பண்ணிவிட்டார்கள். பத்திரிகையிலே ஏதோ எழுதாம விட்டுவிட்டார்கள். அவர் பதறிப் போய்விட்டார். ஐயோ இந்த 75 வயதிலே தியாகி அவரால் ஜெயிலிலே இருக்க முடியாது. உடனே ஜாமீனில் எடுக்க வேண்டும் என்று சொல்லி, தலைவர் காமராஜரே வரதாச்சாரியார் என்ற வழக்கறிஞரிடம் நேரில் சென்று உடனே ஜாமீனில் எடுக்க வேண்டும் என்று கெஞ்சினார். ஆனால் அங்கே போட்ட செக்ஷன் பயங்கரமான செக்ஷன். தனுஷ்கோடி நாடார் 22 நாள் சிறையில் இருந்தார். இதை இந்த நேரத்தில் இதோடு முடித்துக்கொண்டு "வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி இறுதியாக நம்முடைய நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் இந்த ஆண்டு சமீபத்தில் நம்மை விட்டு பிரிந்துவிட்டார். அவருக்கு நல்ல நினைவுச் சின்னம் எழுப்பவேண்டும் என்று கேட்டதோடு,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்று சொல்லி, நீங்கள் இறையோனாக வாழ வேண்டும் என்று வாழ்த்தி உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*பிற்பகல் 12-10*

## 1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

## (ஈ) மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு: "27-8-2001 ஆம் நாள் முதல் 1-9-2001 முடிய எடுத்துக்கொள்ளப்பெறும் மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் இன்று 20-8-2001 பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு

என்ற குறளுக்கு ஏற்ப, உங்கள் செயல்பாடு அமையட்டும். மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யுங்கள். பட்டா பிரச்சினையில் நிச்சயமாக உங்கள் மேல் கிழக்குத் தொகுதி மக்கள், என்.எம்.ஆர்.புரம், காமராசபுரம் மக்கள் உண்மையிலேயே தெய்வமாக வழிபாட்டுப் பொருளாக உங்களை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு காரியத்தைச் செய்து கொடுக்கிற முறையில், தமிழ்நாடு பூராவும் இந்தக் கோரிக்கை நிறைவேறக் கூடிய வகையில் நீங்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்து, இந்த அளவோடு வார்த்தையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21-8-2001) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்ட முறை விதிகளும் ஆணைகளும்

1. ஈரோடு முதன்மை கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் திரு.ட்டி. சீமத்துரை அவர்களை சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்திருப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 3-2-2001 ஆம் நாளிட்ட 30-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. ஈரோடு மாவட்டத்திலுள்ள ஈரோடு விற்பனைக் குழுவின்கீழ் செயல்படும் இருபத்திமூன்று ஒழுங்குமுறை விற்பனை அங்காடிப் பகுதிகளில் தேங்காய் (மட்டை உரிக்கப்படாதது, மட்டை உரிக்கப்பட்டது, கொப்பரை) விற்பனையை முறைப்படுத்துவதற்காக அப்பகுதிகளை அறிவிக்கையிடப்பட்ட அங்காடி பகுதிகளாக அறிவிக்கை செய்துள்ளது குறித்து வேளாண்மைத் துறையின் 12-9-2000 ஆம் நாளிட்ட 368 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. இராம்நாதபுரம் விற்பனைக் குழுவின் கீழ் செயல்படும் இருபது ஒழுங்குமுறை விற்பனை அங்காடிப் பகுதிகளில் கம்பு (அனைத்து வடிவங்களிலும்) சோளம் (அனைத்து வடிவங்களிலும்) கேழ்வரகு (அனைத்து வடிவங்களிலும்) சூரியகாந்தி விதைகள் (அல்லது) பருப்புகள் ஆகியவற்றின் விற்பனையை முறைப்படுத்துவதற்காக அப்பகுதிகளை அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக அறிவிக்கை செய்துள்ளது குறித்து வேளாண்மைத் துறையின் 13-9-2000 ஆம் நாளிட்ட 370 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. திருச்சிராப்பள்ளி அங்காடிக் குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள லால்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அங்காடிப் பகுதியில் பருத்தி (விதையெடுக்காத கப்பாஸ் பஞ்சு, அரைத்த பஞ்சு (லின்ட்) கழிவுப் பஞ்சு) விற்பனையை முறைப்படுத்துவதற்காக அப்பகுதியினை அறிவிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிக்கை செய்துள்ளது குறித்து வேளாண்மைத் துறையின் 2-11-2000 நாளிட்ட 412 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னீஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 23-10-2000 ஆம் நாளிட்ட 225 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னீஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 17-11-2000 ஆம் நாளிட்ட 231 ஆம்

2001 ஆகஸ்ட் 20]

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள் வகுப்பது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 13-12-2000 ஆம் நாளிட்ட 238 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (கேபிள் தொலைக்காட்சி இணைப்பிற்கான வரி விதிப்பு மற்றும் வசூல்) விதிகள் வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 7-12-2000 ஆம் நாளிட்ட 175 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 27-3-1998 ஆம் நாளிலிருந்து 12-1-1999 ஆம் நாள் வரையிலான கால அளவில் பருத்தி விதை எண்ணெய் மற்றும் அரிசி தவிட்டு எண்ணெய் ஆகியவற்றின் விற்பனை மீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் எந்தவொரு வணிகராலும் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் மேற்சொன்ன கால அளவில் மேற்சொன்ன இப்பொருட்களின் விற்பனை மீது எந்த ஒரு வரியும் வசூலிக்கப்படவில்லை என்ற நிபந்தனைக்குட்பட்டு வரி விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 5-2-2001 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. இயலாமையற்றவர்களுக்காக திருவாளர்கள் ஹெலன் கெல்லர் சர்வீஸ் சொசைட்டி, மதுரை (பதிவு எண் 49/79) என்ற சங்கம் தயாரிக்கும் காகித உறைகள் மற்றும் குறிப்பேட்டிற்கான அட்டை, காலிகோ துணி, காகித உறை தயாரிப்புப் பணிக்கான மார்பிள் தாள், குறிப்பேடு தயாரிப்புப் பணிக்கான எழுதுபொருட்கள் ஆகிய மூலப்பொருட்களின் கொள்முதல் ஆகியவை குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 12-3-2001 ஆம் நாளிட்ட 36 ஆம் எண்

[2001 ஆகஸ்ட் 20

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. வணிகவரிகள் அறநிலையத் துறையில் 12-1-1998 ஆம் நாளன்று உருவாகி 12-1-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)/வவ(ம)அறி(a-9)/98 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 28-3-2001 ஆம் நாளிட்ட 44 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

12. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

13. அண்ணா பல்கலைக்கழகத்தின் 1999-2000 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

14. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1999-2000 ஆம் ஆண்டிற்கான கணக்கின் மீதான தணிக்கை அறிக்கை [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

15. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஏழாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

2001 ஆகஸ்ட் 20]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2001)

2. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2001)

3. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2001)

4. 2001-2002 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 61 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (திருத்திய நிதிநிலை) (61 புத்தகங்கள்)

5. 2001-2002 ஆம் ஆண்டிற்கான கடன் செலவுகள் குறித்த விரிவான மானியக் கோரிக்கை (திருத்திய நிதிநிலை)

6. 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கடன் - திருப்பிச் செலுத்துதல் குறித்த விரிவான மானியக் கோரிக்கை (திருத்திய நிதிநிலை)

7. 2001-2002 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 36 - பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த விவரங்கள் (திருத்திய நிதிநிலை) (ஆங்கிலம்)

8. 2001-2002 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 38 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த விவரங்கள் (திருத்திய நிதிநிலை) (ஆங்கிலம்)

9. 2001-2002 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு குறித்த விவரங்கள் (திருத்திய நிதிநிலை) (ஆங்கிலம்)

10. 2001-2002 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 56 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு குறித்த விவரங்கள் (திருத்திய நிதிநிலை) (ஆங்கிலம்)

11. 2001-2002 ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (திருத்திய நிதிநிலை)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2001 ஆகஸ்ட் 20

*12. 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை (திருத்திய நிதிநிலை)*

*13. 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு பகுதி-1 (திருத்திய நிதிநிலை)*

*14. 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு, பகுதி-2 (திருத்திய நிதிநிலை)*

*15. 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள் (திருத்திய நிதிநிலை)*

*16. 2001-2002 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம் - வரவு செலவுத் திட்ட இணைப்பு) (2001-2002 ஆம் ஆண்டு விரிவான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு) (திருத்திய நிதிநிலை)*

*17. 2001-2002 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி 2) திட்டங்கள் (திருத்திய நிதிநிலை)*

*18. 2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்*

*19. 2001-2002 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*20. 2001-2002 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*21. 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து நிதி மற்றும் சட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*22. தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

# நடவடிக்கைகளின் அட்டவணை (Index)

## பயன்படுத்தும் முறை

பேரவை நடவடிக்கைகளின் ஒவ்வொரு தொகுதிக்கும் (Volume) தனித்தனியாக அட்டவணை வெளியிடப்பெறுகின்றது. உறுப்பினர்கள் பேரவையில் எழுப்பிய வினாக்கள், ஆற்றிய உரைகள் ஆகியவை தொடர்பாக குறிப்புகளை இலகுவாகவும், விரைவாகவும் அறிந்துகொள்ள அகர வரிசைப்படி அமைக்கப்பட்ட இவ்வட்டவணை பெரிதும் பயன்படும்.

இந்த அட்டவணை கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:—

1. உள்ளடக்கம் (Contents)
2. உறுப்பினர்களின் பெயர் அட்டவணை (Name Index)
3. பொருள் அட்டவணை (Subject Index)

அவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட அலுவல்கள் பற்றிய குறிப்புகளை "உள்ளடக்கம்" என்ற தலைப்பின்கீழும், உறுப்பினர்கள் பேசியது தொடர்பான குறிப்புகளை "பெயர் அட்டவணை" என்ற தலைப்பின்கீழும், விவாதிக்கப்பட்ட பொருள்கள் குறித்த குறிப்புகளை "பொருள் அட்டவணை" என்ற தலைப்பின்கீழும் காணலாம்.

"உள்ளடக்கம்" என்ற தலைப்பின்கீழ்—

அமைச்சரின் அறிக்கை

அரசினர் சட்டமுன்வடிவுகள்

அறிக்கை அளித்தல்

அறிவிப்புகள்

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மற்றும் இதர தீர்மானங்கள்

இரங்கல் குறிப்புகள் மற்றும் இரங்கல் தீர்மானங்கள்

உரிமைப் பிரச்சினைகள்

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

ஒழுங்குப் பிரச்சினைகள்

கவன ஈர்ப்பு

சிறப்புக் கவன ஈர்ப்பு

தகவல் கோரல்

தனித் தீர்மானங்கள்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

வரவு-செலவுத் திட்ட பொது விவாதம்

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் மற்றும் இதர நிதி அலுவல்கள்

போன்றவை வருவதால் அவை "பொருள் அட்டவணை"யில் இடம் பெறவில்லை.

"பெயர் அட்டவணை"யில் ஒவ்வொரு உறுப்பினரது பெயரின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பின் இறுதியிலும், அவ்வுறுப்பினர் அவையில் எந்தத் தலைப்பின்கீழ் உரையாற்றினார் என்பதைக் குறிக்கும் வகையில் அடைப்புகளுக்குள் அதுபற்றிய சுருக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக (ஒ.பி.) என்பது ஒழுங்குப் பிரச்சினையையும், (க.ஈ.) என்பது கவன ஈர்ப்பையும், (சி.க.ஈ.) என்பது சிறப்புக் கவன ஈர்ப்பையும், (ஒ.தி.) என்பது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ.) என்பது அறிக்கையையும், (வி.) என்பது வினாவையும் குறிக்கும். இவ்வட்டவணையில் பயன்படுத்தப்பட்டுள்ள சில சுருக்கங்களின் விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| அ. | .. | அமைச்சரின் அறிக்கை |
| அ.த.தீ. | .. | அரசினர் தனித் தீர்மானம் |
| அ.தீ. | .. | அரசினர் தீர்மானம் |
| அ.நி. | .. | சட்டமுன்வடிவின் அறிமுக நிலை |
| அ.வி. | .. | அரை மணி நேர விவாதம் |
| ஆ.இ. | .. | ஆளுநர் இசைவு |
| ஆ.உ. | .. | ஆளுநர் உரை |
| ஆ.செ. | .. | ஆளுநர் செய்தி |
| ஆ.நி. | .. | சட்டமுன்வடிவின் ஆய்வு நிலை |
| உ.பி. | .. | உரிமைப் பிரச்சினை அல்லது உரிமை மீறல் பிரச்சினை |

| | | |
|---|---|---|
| ஒ.தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| ஒ.பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| கு.வி | .. | குறுகிய கால விவாதம் |
| சி.க.ஈ. | .. | சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) |
| த.கோ. | .. | தகவல் கோரல் |
| த.ந.தீ. | .. | தனி நபர் தீர்மானம் |
| த.வி. | .. | தன்னிலை விளக்கம் |
| து.மா.கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| பொ.வி. | .. | பொது விவாதம் |
| மா.கோ. | .. | மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| வ.செ.தி. | .. | வரவு-செலவுத் திட்டம் |
| வி. | .. | வினா |

சில குறிப்புகளைப் பொறுத்த வரையில் அவ்வாறு அடைப்புகளுக்குள் சுருக்கங்கள் கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில் அக்குறிப்புகளே தேவையான விளக்கங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.

தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "பெயர் அட்டவணை"யில் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

பொருள் அட்டவணையில் வரும் பல்வேறு பொருள்களைப் பொறுத்த வரையில் அவை உரிய பொதுத் தலைப்புகளின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக "கல்விக் கூடங்கள்" என்ற பொதுத் தலைப்பின்கீழ் பள்ளிகள், கல்லூரிகள், பல்தொழில் பயிலகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவை இடம்பெறுகின்றன.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

## இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான
## பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவையின்
## இரண்டாவது கூட்டத் தொடர்

**2001 ஆகஸ்டு 16, 18 மற்றும் 20**

**(தொகுதி 4—எண்கள் 1-3)**

**பெயர் அட்டவணை**


பக்கங்கள்

'அ'

அப்துல் லத்தீப், திரு. ம.—

*வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி.* — *137-138*

அப்பாவு, திரு. மு.—

*வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி.* — *177*

அன்பழகன், பேராசிரியர் க.—

*உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியை சட்டப் பேரவையிலிருந்து இரு தினங்களுக்கு நீக்கி வைத்தல் (அ.தீ.)* — *139*

*முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு (அறி.)* — *119*

*வ.செ.தி., 2001—2002 (திருத்திய) அளித்தல்* — *5,56*

*வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி.* — *126,127-128*

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினரை வெளியேற்றுதல் அல்லது பேரவைப் பணியினின்றும் தற்காலிக்மாக நீக்கி வைத்தல்—தொடர்ச்சி

ஓர் உறுப்பினர் உணர்ச்சிவசப்பட்டு தெரிவித்த சில வார்த்தைகளை நீக்கியதற்குப் பின்னால் மீண்டும் அவ்வுறுப்பினரை பேரவைப் பணிகளினின்று நீக்குகிற அளவிற்கு தண்டனை வழங்குவது அவசியமா என்பதை பேரவைத் தலைவர் கருதிப் பார்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் வைத்தபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் என்பவர் இந்த அவையினுடைய ஒட்டுமொத்த உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளினுடைய ஒரு வடிவம், ஒரு பிரதிநிதி. நான் என்னுடைய கருத்துகளை மட்டுமே இங்கே திணிக்க விரும்பவில்லை. பேரவையிலே வழங்கக்கூடிய கருத்துகள் பேரவையினுடைய பெரும்பாலான உறுப்பினர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய கருத்துகளாக இருக்குமானால், அவற்றை நான் ஏற்றுக்கொள்ள முடியாது."

(பேரவைத் தலைவரின் விளக்கத்தில் திருப்தியடையாத எதிர்க்கட்சித் தலைவர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.) 139-140

ஒத்திவைப்புத் தீர்மானம்–நடைமுறைகள்—

அனுமதி—

தன்னுடைய தொகுதியில் மிகப் பெரிய விபத்து ஒன்று ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு, அதுபற்றி தான் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான

பக்கங்கள்

**தலைவர்**—தொடர்ச்சி

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி

**ஒத்திவைப்புத் தீர்மானம்–நடைமுறைகள்**—தொடர்ச்சி

**அனுமதி**—தொடர்ச்சி

*முன்னறிவிப்பு குறித்து ஓர் உறுப்பினர் தகவல் அறிய முற்பட்டபோது, தலைவர் அளித்த குறிப்புரைகள் வருமாறு:*

"உறுப்பினர் அவர்கள் ஒவ்வொரு பிரச்சினையாகத் தாவிக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு பிரச்சினை முடிந்து விட்டது. கடைசியாக, முத்தாய்ப்பு வைத்ததைப்போல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டு, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி, அது முடிந்து விட்டது. இப்போது அடுத்த பிரச்சினைக்குப் போகலாம். நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் வருகிறபோது, பல பிரச்சினைகளைப் பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

*(இதைத் தொடர்ந்து தான் கொடுத்துள்ள பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு உரிமை வேண்டும் என்று வலியுறுத்திய உறுப்பினர், இரண்டாவது என்று குறிப்பிட்டு தன்னுடைய தொகுதிப் பிரச்சினை பற்றியும் கேட்க முற்பட்டபோது, இடைமறித்து தலைவர் குறிப்புரைத்ததாவது:)*

"..ஒன்று, இரண்டு, மூன்று என்று பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தை எடுத்துக்கொள்வோம். அதற்குப் பிறகு மற்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசுங்கள்.

..வெடிவிபத்து பற்றி நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் உள்ளது. அதை எடுத்துக்கொள்வது பற்றி நான் வெகு விரைவிலே அறிவிக்கின்றேன்." 121-122

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒத்திவைப்புத் தீர்மானம்–நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி—தொடர்ச்சி

பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக தாங்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு பற்றி ஓர் உறுப்பினர் தகவல் அறிய விரும்பியபோது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த அந்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அரசின் ஆய்வில் இருக்கின்றன. அரசு பதில் தந்தவுடன் அவற்றை எடுத்துக்கொள்ளலாம்." 120

அனுமதி மறுத்தல்–

விசாரணைக் குழு ஆய்வில் இருக்கும் ஒரு பொருள்பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பெற்றதைத் தொடர்ந்து ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புக்கு மாறுபட்ட கருத்தைச் சொல்வதற்கு தங்களுக்கு உரிமையுண்டு என்றும், தங்களுடைய கோரிக்கைகளை வைத்து வெளிநடப்புச் செய்வதற்கோ அல்லது அது குறித்துப் பேசுவதற்கோ தங்களுக்கு உரிமையுண்டு என்றும் கருத்து தெரிவித்தபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

"பேரவைத் தலைவர் தீர்ப்பை வழங்கியதற்குப் பிறகு அதுகுறித்துப் பிரச்சினை எழுப்புவது முறையற்றது. விதிகளுக்குப் புறம்பானது.

..விசாரணைக்கு உள்ளே போகாமல் நீங்கள் கருத்துகளைச் சொல்ல உங்களுக்கு உரிமையுண்டு. விசாரணைக்கு உட்பட்டது என்று தெரிந்தால் அதை நீக்குவதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை உண்டு.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒத்திவைப்புத் தீர்மானம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி மறுத்தல்—தொடர்ச்சி

..ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் வாசித்துப் பார்த்து அது விசாரணைக்கு உட்பட்ட பொருள் குறித்து இருக்கின்ற காரணத்தினால்தான் அனுமதி மறுத்து இருக்கிறேன்.

..ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இந்த அவையில் கொடுக்கப்படுவதும் வழக்கம். அது குறித்து அரசினுடைய கருத்தை பேரவைத் தலைவர் கேட்பதும் வழக்கம். சில ஒத்திவைப்புத் தீர்மானங்களை ஏற்க முடியாது என்று பேரவைத் தலைவர் தீர்ப்பு வழங்குவதும் வழக்கம். இது இந்த அவையிலே தொன்றுதொட்டு இருந்து வரக்கூடிய மரபு. அந்த மரபைத்தான் நானும் இப்போது கடைப்பிடிக்கிறேன்.

..உறுப்பினர் அவர்கள் இதற்குள்ளே போக வேண்டாம். பேரவை விதிகளுக்கு உட்பட்டதைத் தான் நான் வாசிக்கிறேன். பேரவை விதிகளுக்கு உட்பட்டு, அரசு விசாரணைக் குழுவை அமைத்த ஒரு பொருள் குறித்து இந்த அவையில் எழுப்புவதற்கு அனுமதி மறுப்பது எப்போதும் வழக்கம். அந்த வழக்கத்தைத்தான் நான் கடைப்பிடிக்கிறேன்.

..உறுப்பினர் அதற்குள்ளே போக வேண்டாம். உள்ளே போகாமல் ஏதாவது பேசுவதற்கு வாய்ப்பு இருந்தால், நீதி விசாரணைக்குள்ளே இல்லாத கருத்து, மாறுபட்டது என்று தெரிந்தால், நான் அதை அனுமதிக்கிறேன்.

..ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் ஏற்க மறுத்துவிட்டேன். அதை மறுத்ததற்கான காரணத்தையும் இப்போது சொல்லிவிட்டேன்.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒத்திவைப்புத் தீர்மானம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி மறுத்தல்—தொடர்ச்சி

நிதிநிலை அறிக்கையின்போதோ அல்லது காவல் துறை மானியக் கோரிக்கையின்போதோ நீங்கள் பேசுகிற பிரச்சினைகள் இந்த நீதி விசாரணைக்கு உட்படாத பிரச்சினைகளாக இருக்குமானால் அவற்றை ஏற்றுக்கொள்வதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

...அது தொடர்பான எல்லாவற்றையும்தான் வாசித்திருக்கிறேன்.

(உண்மையை ஆராய்வதற்காக அரசு ஒரு குழுவை நியமித்திருக்குமானால், அவையில் பேசப்படுகிற கருத்துகளில் ஒருவேளை தவறான கருத்து இருந்தால், அந்தக் குழு அதை விலக்கிவிட முடியும் என்றும், அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இல்லை என்றும் சம்பந்தப்பட்ட பிரச்சினையை அவையில் பேசுவதால் எந்தவொரு இடையூறும் ஏற்படும் என்று தன்னால் நம்ப முடியவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவரால் கருத்து தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு விதி 56-ஐச் சுட்டிக்காட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விளக்கம் அளிக்கப்பட்ட பின்னர் தலைவர் குறிப்புரைத்ததாவது:)

..மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த விதியின் அடிப்படையிலேதான் நான் இதற்கான அனுமதியை மறுத்திருக்கிறேன்." 116-119

விசாரணைக் குழுவின் ஆய்வில் உள்ள பொருள் குறித்து விதி 56-ன்கீழ் கொடுக்கப்பெற்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுத்து பேரவைத் தலைவர் அளித்த குறிப்புரையாவது:

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்–நடைமுறைகள்**—தொடர்ச்சி

**அனுமதி மறுத்தல்**—தொடர்ச்சி

"பேரவைக்கு ஓர் அறிவிப்பு. முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சிகள் குறித்து சில உறுப்பினர்கள் பேரவை விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். அந்தப் பொருள் குறித்து ஏற்கெனவே அரசு நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. ஏற்கெனவே அரசுத் தரப்பிலும், மற்ற தரப்பிலும் கருத்துகள் கூறப்பட்டுள்ளன. மாறுபட்ட கருத்துகளின் அடிப்படையில்தான் விசாரணைக் குழு அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் விசாரணை நடத்துவதற்குரிய நிபந்தனைகள் வரையறுக்கப் பட்டுள்ளன. பேரவை விதிகள் 65 மற்றும் 66-ன்படி நீதிமன்றத்தின் ஆய்விலுள்ள எப்பொருள் பற்றியும் தீர்மானம் இருத்தலாகாது. மேலும் சட்டப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் ஆய்வில் இருக்கும் பொருள் குறித்து அவையில் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப் பெறலாகாது. அத்தகைய விவாதம் விசாரணைக் குழுவின் ஆய்வுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடியதாக அமையும் என்பதால், பேரவை விதிகள் 65 மற்றும் 66-ன்கீழ் இத்தகைய தீர்மானங்களை அவையில் எழுப்புவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்பதை அறிவிக்கிறேன்." 115-116

**நீதி விசாரணையில் உள்ளது குறித்துப் பேசக் கூடாது—**

ஓர் உறுப்பினர் தான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு குறித்து தகவல் அறிய முற்பட்டபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது:

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—நடைமுறைகள்—தொடர்ச்சி

நீதி விசாரணையில் உள்ளது குறித்துப் பேசக் கூடாது—தொடர்ச்சி

"ஏர்வாடி பிரச்சினையும் நீதி விசாரணையில் இருக்கிறது. ஆகவே நீதி விசாரணையில் உள்ளதைப் பற்றி பேசக் கூடாது என்பதுதான் இப்போது வழங்கப்பட்ட தீர்ப்பு." 124

பேரவைத் தலைவர் தீர்ப்புக்கு மாறுபட்டுப் பேசுதல் முறையல்ல—

ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து தலைவர் தீர்ப்பளித்த பின்னர் ஓர் உறுப்பினர் மீண்டும் அது குறித்து தகவல் அறிய முற்பட்டபோது, தலைவர் அளித்த குறிப்புரைகள் வருமாறு:

"அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. ஏற்கெனவே சொல்லி, முடிந்துவிட்ட பிரச்சினை. மீண்டும் மீண்டும் பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புக்கு மாறுபட்டு நீங்கள் பேசிக் கொண்டிருப்பது முறையல்ல.

...அதுபற்றி வெளியிலே மாறுபட்ட கருத்துகள் எழுப்பப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் என்னுடைய தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கிறேன். அரசுத் தரப்பிலும் சரி, உங்கள் தரப்பிலும் சரி, பல மாறுபட்ட கருத்துகள் எழுப்பப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் குறிப்பிட்டுத்தான் சொல்லியிருக்கிறேன்." 123

தீர்மானங்கள்—

பேரவைப் பணிகளினின்றும் ஓர் உறுப்பினரை (திரு. பரிதி இளம்வழுதி) தற்காலிகமாக நீக்கம் செய்தல்—

20—8—2001 அன்று, "அவையினுடைய கண்ணியத்திற்கு மாறாக, சட்டப் பேரவையில் இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த உயர் பண்புகளுக்கு

பக்கங்கள்

**தலைவர்**—தொடர்ச்சி

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி

**தீர்மானங்கள்**—தொடர்ச்சி

**பேரவைப் பணிகளினின்றும் ஓர் உறுப்பினரை (திரு. பரிதி இளம்வழுதி) தற்காலிகமாக நீக்கம் செய்தல்**—தொடர்ச்சி

மாறாக அமங்கலமாக அவையில் பேசிய ஓர் உறுப்பினரை பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக இரு தினங்களுக்கு நீக்கி வைக்க வேண்டும்" என்ற தீர்மானம் பேரவையால் நிறைவேற்றப்பெற்றது. 138—139

**நீக்கம்**—

**அவைக்கு ஒவ்வாத சொற்கள்**—

ஓர் உறுப்பினர் தம் உரையில் குறிப்பிட்ட தவறுதலான ஒரு வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று இன்னோர் உறுப்பினர் கோரியபோது, அவருடைய வேண்டுகோளை ஏற்று, தவறுதலான அவ்வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது. 191, 194

**கண்ணியத்திற்கு மாறானது, மரபுக்கு விரோதமானது**—

"கண்ணியத்திற்கு மாறாகவும், மரபுக்கு விரோதமாகவும் பேசிய பேச்சு" என்று குறிப்புரைக்கப்பெற்று ஓர் உறுப்பினர் பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது. 135

**வெளிநடப்பின்போது எழுப்பப்பட்ட முழக்கங்கள்**—

நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அளிக்க இருந்த நேரத்தில் வெளிநடப்புச் செய்த சில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கோஷங்கள் எழுப்பியபோது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்று அக்கோஷங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பெற்றன:

பக்கங்கள்

**தலைவர்**—தொடர்ச்சி

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி

**நீக்கம்**—தொடர்ச்சி

**வெளிநடப்பின்போது எழுப்பப்பட்ட முழக்கங்கள்**—தொடர்ச்சி

"மாண்புமிகு உறுப்பினர், உங்களுடைய தலைவர் வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு வெளியேறுகிறார். நீங்கள் அனைவரும் உள்ளே இருந்துகொண்டு கத்துகிறீர்கள். உங்கள் தலைவரை நீங்கள் மதிக்கவில்லையா, உங்கள் கட்சியை மதிக்கவில்லையா அல்லது அவர் மட்டும்தான் உங்கள் கட்சியின் உறுப்பினரா? இதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

..மாண்புமிகு உறுப்பினர்களே, உங்கள் கட்சித் தலைவர் கண்டனத்தைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்கிறோம் என்று வெளிநடப்புச் செய்து இருக்கிறார். நீங்கள் அவரையே மதிக்கவில்லையா? அல்லது கட்சியை மதிக்கவில்லையா? அல்லது பேராசிரியருக்கும் உங்கள் தலைவர் வழங்கி இருக்கிற கருத்துக்கும் இடையிலே ஏதாவது முரண்பாடா?

(எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டவாறு வெளிநடப்புச் செய்தனர்.)

..மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கண்டனத்தைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, அவர்கள் வெளிநடப்புச் செய்ததற்குப் பிறகும், அவர்களுடைய உறுப்பினர்கள் இங்கே முழக்கமிடுவது, கோஷமிடுவது, கண்டனம் தெரிவித்து வார்த்தைகளைத் தவறாகப் பயன்படுத்துவது அவர்களுடைய கட்சிக்குக் கட்டுப்படவில்லை, அவர்களுடைய தலைவருக்கும் கட்டுப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. இது முறையற்ற செயல். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த அந்தக் கண்டன முழக்கங்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலே ஏறாது, அவைக் குறிப்பிலே அவை வெளியிடப்படாது, அவற்றை பத்திரிகைகளும் வெளியிட வேண்டாம் என்று நான் கட்டளையிடுகிறேன்." 7

பக்கங்கள்

**தலைவர்**—தொடர்ச்சி

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி

**நீக்கம்**—தொடர்ச்சி

**வெளிநடப்புச் செய்யும்முன் பேசியது—**

நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளிக்க இருந்த நேரத்தில் குறுக்கிட்டுப பேசிய எதிர்க் கட்சித் தலைவர், ஒரு சிறு கண்டனத்தைத் தெரிவித்து தாங்கள் வெளிநடப்புச் செய்வதாகக் குறிப்பிட்டு, அதைத் தொடர்ந்து சில கருத்துகளை எடுத்து வைத்தபோது, தலைவர் அளித்த குறிப்புரை பின்வருமாறு:

"மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு, நீங்கள் சொல்லிய கருத்துகள் அனைத்தும் விவாதத்திற்கு உரியவை. பின்னாலே நீங்கள் அதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருகிறபோது, அரசு சார்பாக விளக்கம் அளிக்க அவர்கள் காத்திருக்கிறார்கள். ஆகவே நீங்கள் கண்டனத்தைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்கிறீர்கள். அதை மட்டும் நான் ஒப்புக்கொள்கிறேன். மற்றவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

..மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்குத் தெரியும். நிதிநிலை அறிக்கையின்போது குறுக்குசால் ஓட்டுவது முறையல்ல. மரபை மீறிய செயல். நிதிநிலை அறிக்கையின்போது வேறு எந்த விவாதமும் எடுத்துக்கொள்ளப்படுவதும் இல்லை. நீங்கள் சொல்லிய கருத்துகள் அனைத்தும் விவாதத்திற்கு உரியவை. அனைத்தும் அரசு சார்பாக விளக்கம் அளிக்கப்பட வேண்டியவை. ஆகவே நீங்கள் கண்டனத்தைத் தெரிவித்து வெளியேறுகிறோம் என்பதோடு நிறுத்துங்கள்."

"எதிர்க் கட்சியினர் வெளிநடப்புச் செய்கிறார்கள். கண்டனத்தைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்கிறார்கள்' என்பது மட்டும்தான் இதிலே உண்டே தவிர, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன." 5-6

தலைவர்—தொடர்ச்சி

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி

**மரபுகள்**—

**இரங்கல் தீர்மானம்**—

மறைவுற்ற ஓர் உறுப்பினருக்கு கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தில் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் கருத்துத் தெரிவித்ததற்கு, நாடாளுமன்றத்தில் கடைப்பிடிக்கப்படும் மரபுதான் இங்கேயும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது என்று முதலமைச்சர் விளக்கம் அளித்த பின்னர் பேரவைத் தலைவர் குறிப்புரைத்ததாவது:

...எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் நாடாளுமன்ற மரபைக் குறிப்பிட்டார்கள். நாடாளுமன்ற மரபு மட்டுமல்ல. நம்முடைய சட்டமன்றத்திலும் அதற்கு மரபு இருக்கிறது என்பதற்கு நான் ஏற்கெனவே உதாரணம் சொல்லியிருக்கிறேன். பேறிஞர் அண்ணா அவர்கள் இங்கே இருந்த நேரத்தில் நல்லமுத்து என்கிற அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் மறைந்த நேரத்தில் 10 மணித்துளிகள்தான் அவை ஒத்திவைக்கப்பட்டது. பேரவைத் தலைவர்தான் தீர்மானத்தைக்கொண்டு வந்தார் என்பதையும் சொல்லியிருக்கிறேன். பேராசிரியர் அவர்களுக்கு விளக்குவதற்காக நான் இன்னொரு உதாரணத்தைக்கூட சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் டாக்டர் நாவலர் அவர்கள் — பேராசிரியர் அவர்களோடு பல்கலைக்கழகத்திலிருந்து உருவாகி வெளியே வந்த திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர் — மறைவிற்கு இரங்கல் தெரிவிப்பதற்கு இதே சட்டமன்றத்தில் பேரவைத் தலைவர்தான் தீர்மானத்தைக் கொண்டு வந்து, எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களைக்கூட பேச அனுமதிக்காமல்

அவையை ஒத்திவைத்தார். அந்த மரபும் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நாவலர் அவர்கள் அப்போது அவை உறுப்பினராக இல்லை என்று ஓர் உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:)

..நாவலர் அவர்கள் sitting Member இல்லை என்பது வேறு. நாவலர் அவர்கள் மூத்த தலைவர். ஒரு மூத்த தலைவருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைப்பதுதான் வழக்கம். திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர் அவர். அவையில் இருந்த சட்டமன்ற உறுப்பினர் மறைந்த நேரத்திலும் அந்த மரபு பின்பற்றப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவரேதான் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார். அதைத்தான் நானும் சுட்டிக்காட்டினேன். நல்லமுத்து என்கின்ற சட்டமன்றத்தில் இருந்த உறுப்பினர் மறைந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் 10 மணித் துளிகள்தான் அந்த நேரத்திலே அவையை ஒத்திவைக்கச் செய்து அப்போது நிதிநிலை அறிக்கையை வாசித்திருக்கிறார்கள். இந்த மரபைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

(மரபுகளைப் பின்பற்றியதாக நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள், இதுவரை இங்கே முன்மாதிரியில்லாமல் இந்தச் சபையை ஒத்திவைத்தோம் என்று சொல்கிறார்கள், இதிலே எது சரி? மரபா அல்லது முன்மாதிரியா என்று ஓர் உறுப்பினர் வினவியபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:)

..இதுவரைக்கும் எதிர்க் கட்சியைச் சார்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் மறைந்ததையொட்டி வரவு-செலவுத் திட்டத்தையே ஒத்திவைத்தது இந்த

பக்கங்கள்

**தலைவர்**—தொடர்ச்சி

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி

**மரபுகள்**—தொடர்ச்சி

**இரங்கல் தீர்மானம்**—தொடர்ச்சி

அவைக்குப் புதிய மரபு. ஒரு எதிர்க்கட்சி உறுப்பினரைக்கூட மதிக்கக்கூடிய அளவுக்கு ஆட்சி இருக்கிறது என்பதற்கு அவர்கள் அதை எடுத்துக்காட்டிச் சொல்லியிருக்கிறார்கள். மரபுக்கு விரோதமாக பேரவைத் தலைவர் கொண்டு வந்துவிட்டார் என்பதற்குத்தான் நான் விளக்கம் சொல்கிறேன். ஆக இரண்டுமே உண்மை. *128-130*

**வரவு–செலவுத் திட்டம்–நடைமுறைகள்–**

நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளிக்க இருந்த நேரத்தில் குறுக்கிட்டுப் பேசிய எதிர்க் கட்சித் தலைவர், ஒரு சிறு கண்டனத்தைத் தெரிவித்து, தாங்கள் வெளிநடப்புச் செய்வதாகக் குறிப்பிட்டு, அதைத் தொடர்ந்து சில கருத்துகளை எடுத்து வைத்தபோது, தலைவர் அளித்த குறிப்புரை பின்வருமாறு:

"மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு, நீங்கள் சொல்லிய கருத்துகள் அனைத்தும் விவாதத்திற்கு உரியவை. பின்னாலே நீங்கள் அதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருகிறபோது, அரசு சார்பாக விளக்கம் அளிக்க அவர்கள் காத்திருக்கிறார்கள். ஆகவே நீங்கள் கண்டனத்தைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்கிறீர்கள். அதை மட்டும் நான் ஒப்புக் கொள்கிறேன். மற்றவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

..மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்குத் தெரியும். நிதிநிலை அறிக்கையின்போது குறுக்குசால் ஓட்டுவது முறையல்ல. மரபை மீறிய செயல். நிதிநிலை அறிக்கையின்போது வேறு எந்த விவாதமும் எடுத்துக்கொள்ளப்படுவதும் இல்லை. நீங்கள் சொல்லிய கருத்துகள் அனைத்தும் விவாதத்திற்கு

பக்கங்கள்

**தலைவர்**—தொடர்ச்சி

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி

**வரவு–செலவுத் திட்டம்–நடைமுறைகள்**—தொடர்ச்சி

உரியவை. அனைத்தும் அரசு சார்பாக விளக்கம் அளிக்கப்பட வேண்டியவை. ஆகவே, நீங்கள் கண்டனத்தைத் தெரிவித்து வெளியேறுகிறோம் என்பதோடு நிறுத்துங்கள்.

..எதிர்க் கட்சியினர் வெளிநடப்புச் செய்கிறார்கள். கண்டனத்தைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்கிறார்கள்' என்பது மட்டும்தான் இதிலே உண்டே தவிர, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன." 5-6

**விவாதம்–நடைமுறைகள்–**

**காலவரையறை–**

ஒதுக்கப்பட்ட நேரம் குறித்து ஓர் உறுப்பினருக்கு நினைவூட்ட விரும்பிய தலைவர் குறிப்புரைத்ததாவது:

"நல்ல உச்சக்கட்டத்திற்கு வந்திருக்கிறீர்கள். இதோடு பேசி முடித்துக்கொள்ளுங்கள்." 154

**திருமாவளவன், திரு. இரா.–**

ஏர்வாடி மனநோயாளிகள் மற்றும் செய்தியாளர்கள் தாக்கப்பட்டது (த.கோ.) 123

முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு (அறி.) 118

வ.செ.தி., 2001—2002 (திருத்திய) அளித்தல் 8

**துரைமுருகன், திரு.–**

காட்பாடி, வெடி விபத்து (த.கோ.) 122

முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு (அறி.) 116,117-118,120-122

'ந'

**நன்மாறன், திரு. என்.—**

வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி. 200—209

'ப'

**பரிதி இளம்வழுதி, திரு.—**

முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு (அறி.) 123

வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி. 124,125,126,129, 131-133,134,135

**பழனிசாமி, திரு. ஜி.—**

வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி. 194

**பாலகிருஷ்ணன், திரு. சோ.—**

வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி. 156—166

**பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர்.—**

முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு (அறி.) 122—123

**புகழேந்தி, திரு. இ.—**

வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி. 129

**பொன்முடி, டாக்டர் க.—**

முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள், கைது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு (அறி.) 123

வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி. 127,129,130

**பொன்னையன், திரு. சி.—**

உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியை, சட்டப் பேரவையிலிருந்து இரு தினங்களுக்கு நீக்கிவைத்தல் (அ.தீ.) 138

வ.செ.தி., 2001—2002 (திருத்திய) அளித்தல் 7,8—55

'ய'

**யசோதா, திருமதி டி.—**

*வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி.* 137

'ர'

**ரெங்கநாதன், திரு. என்.—**

*வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி.* 167—171

'ஜ'

**ஜெயக்குமார், திரு. டி.—**

*வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி.* 136, 182

**ஜெயலலிதா, செல்வி ஜெ—**

*முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு (அறி.)* 119,121,

*வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி.* 125-126, 127,129-130, 133, 134

'ஹ'

**ஹேமச்சந்திரன், திரு. ஜே.—**

*பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை (த.கோ.)* 120

*வ.செ.தி., 2001—2002 (திருத்திய) பொ.வி.* 176—177

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

# பொருள் அட்டவணை

## 'அ'

பக்கங்கள்

**அமைச்சர்கள்—**

முன்னாள் முதல்வர் மற்றும் சில மத்திய அமைச்சர்கள் கைது, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு (அறி.) *115—119, 120—122, 122—123*

**அரசினர் தீர்மானம்—**

பார்க்க—உள்ளடக்கம்

**அறிவிப்புகள்—**

பார்க்க—உள்ளடக்கம்

'இ'

**இரங்கல் குறிப்புகள்—**

பார்க்க—உள்ளடக்கம்

**இரங்கல் தீர்மானம்—**

பார்க்க—உள்ளடக்கம்

'ச'

**சட்டம்—ஒழுங்கு—**

செய்தியாளர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாக (த.கோ.) *118,123-124*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

'த'

**தகவல் கோரல்—**

*பார்க்க—உள்ளடக்கம்*

**திருத்திய வரவு—செலவுத் திட்டம், 2001—2002, பொது விவாதம்—**

*பார்க்க—உள்ளடக்கம்*

**தொழிலாளர்கள்—**

*பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினை (த.கோ.)* 120

'ப'

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—**

*பார்க்க—உள்ளடக்கம்*

'வ'

**விபத்துகள்—**

*வெடிவிபத்து, காட்பாடி (த.கோ.)* 122

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS